குடும்பத்துடன் களிக்க...

# கல்கி

KALKI 19.6.2005
ரூ.6.00



ஆரம்பச் சம்பளம் 20,000!





"நடிகர்கள் கோழைகள்!"

ரஜினியின் நாயகி!


கெட்டி மேளம்
கலெக்‌ஷன்ஸ்
தரமான பட்டு
அதன் மேல் ஜரிகையின்
விளையாட்டு
எண்ணற்ற வண்ணங்கள்
நீங்கள் நினைக்கும்
விலையில்...
VISUALS
உழைப்பு
உண்மை
உயர்வு
75, உஸ்மான் ரோடு
ரங்கநாதன் தெரு எதிரில்
தி.நகர், சென்னை-600 017
சரவணா செல்வரத்னம்
டெக்ஸ்டைல்ஸ்
பட்டுச் சேலைகள், டிசைனர் சேலைகள், ரெடிமேட் ஆடைகள், சுடிதார் மெட்டீரியல் மற்றும் பல...

Don't Miss

தொடர்!

# யார் இந்த சூர்யா? 24




"துரோகியை ஆதரிக்கும் துரோகி!" - 10

செல்போன் வைத்திருக்கிறீர்களா? எச்சரிக்கை - 29

அணு உலைக்கே சவால்விடும் அணை! - 68

சனிப்பெயர்ச்சி பலன்கள் - 72



36 "லதா, ஸ்வேதா காதல் தா!"

கல்கி

19.6.2005

✉ பீஹாரில் நடக்கும் அரசியல் கோமாளித்தனங்களை, பாஸ்வான், லல்லு சம்பந்தப்பட்ட பிரச்னைகளை இவ்வளவு தெள்ளத் தெளிவாக இதுவரை எந்த இதழும் எழுதவில்லை. அட்டகாசத் தலையங்கம்!
நடுவிக்கோட்டை,
வீ. மணிவண்ணன்.



✉ கல்கியில் வெளிவரும் பேட்டிகள் அனைத்தும் மற்ற பத்திரிகைகளிடமிருந்து வித்தியாசமாகத் தனித்தன்மையுடன் இருக்கின்றன. பாராட்டுகள்!
கொல்லம், ஜீவா அனில்.

# சூப்பர் ஸ்டாரின்

✉ ஆர். வெங்கடேஷின் 'ஒரு கேள்வி' சிறுகதை நெஞ்சைத் தொட்டது. அருமையான, தரமான கதை.
மதுரை, எஸ். சீனிவாசன்.

✉ ஆசிரியர் பக்கத்தில் புளியங்கொட்டை தத்துவம், வியக்க வைக்கும் ஓர் உண்மைச் சம்பவத்தை விவரித்திருக்கிறது!
மதுரை - 9,
இரா. கல்யாணசுந்தரம்.

✉ கிரிக்கெட் வீரர் ஷரத்தின் பேட்டியைப் படித்து ஷாக் ஆனேன். விளையாட்டில் கூடவா politics புகுந்து விளையாட வேண்டும்?
லால்குடி,
எம். இராஜேந்திரன்.

✉ இன்பம், துன்பம் - இடைவெளி எத்தனை தூரம்? தராசின் பதில் சூப்பர்ப்!
கோவை கோ. கல்யாணசுந்தரம்.

✉ கையில் எடுத்தால் மென்மை, கருத்துடன் படித்தால் மேன்மை, கண்களுக்குள் வருவது தன்மை, களிப்பினைத் தருவதில் தாய்மை, கல்கியில்தான் இத்தனையும், இது உண்மை!
கிழவனேரி, செ. சத்தியசீலன்.

✉ பஸ்வானை எல்லோரும் 'கிங்மேக்கர்' என்று சொல்லி வரும் நிலையில், நீர் மட்டும் 'ஃபெயிலாகிப் போன பாஸ்வான்' என்று வித்தியாசமாய் அலசியிருந்தது மிகவும் கவர்ந்தது.
சென்னை - 85, பூநசி. மேதாவி.

✉ 'பீர் பயங்கரம்' - சமூக அக்கறையுடன் சரியான நேரத்தில் வழங்கப்பட்ட

எச்சரிக்கை மணி.
திருநெல்வேலி - 11, வெ. கல்யாணி.

✉ அமரர் கல்கியின் 'ஆறாவது குழந்தை' படித்துவிட்டு மனசு கனத்துப் போனதுடன், ஆண் இனத்தின் மீது திராக் கோபமும் வந்தது.
கரூர், ஆர். ராஜலட்சுமி.

✉ 'பீர்' - இன்றைய இளைஞர்கள், பெண்கள் மத்தியில் சர்வசாதாரணமாக பழக்கத்தில் உள்ளது. சில வீடுகளில் பெற்றோரே பீர் ஒன்றும் உடலுக்கு கெடுதியில்லை என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். தகுந்த நேரத்தில் வெளியான விழிப்புணர்வுக் கட்டுரை!
சென்னை - 117, ஆர். நாகராஜன்.


✉ கிரிக்கெட்டில் ஷரத்தின் கனவுகள் சிதைந்து போனதைப் பற்றி படித்தாலும், இன்னொரு பக்கம் அர்மான் கார் ரேஸில் வெற்றி பெற்றது மனதுக்குச் சந்தோஷமாக இருந்தது.
ஏற்காடு, ஜெயந்தி சிவக்குமார்.

## மகிமை!

✉ புதிய கிரிக்கெட் பயிற்சியாளர் கிரேக் சாப்பல், சச்சினைப் பற்றி கூறிய கருத்து 'முதற்கோணல்' என்ற தராசின் பதில் நூற்றுக்கு நூறு சரியே.
நாகர்கோவில், எஸ்.டி.ரவி.

✉ இயக்குனர் கே.வி. ஆனந்துடனான சந்திப்பு, சுகமான தித்திப்பு.
திருவண்ணாமலை, எல். மீனாட்சி சுந்தரம்.

✉ 'காதல் அவஸ்தை இல்லை; அவஸ்தையிலிருந்து விடுபடல் காதல்' என்ற பிரபஞ்சனின் வரிகள், காதலின் தன்மையை எடுத்துரைக்கும் பிரமாதமான வரிகள்!
வேலூர் - 6, வி.என். கதிர்வேல்.



### வாரம் ஒரு வாசகர்!

✉ ரஜினியின் புதுப்படம் பற்றிய கட்டுரை, சூப்பர்ஸ்டாரின் மகிமையை உயர்த்திவிட்டது!
சாத்தூர், சி. கார்த்திகேயன்.


கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22251522, 22250623,
22251324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

சில்லோடுகள் பதித்த வீடு. வாசற்கதவையொட்டிய மாடத்துக்குக் கீழே 'இளங்கோவன் - உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்' என்ற பெயர்ப் பலகை. உள்ளே நுழைந்தால், ஓர் அறையில் இரண்டு சிறுமிகள் பள்ளிச் சீருடையோடு தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். பக்கத்து அறையில் கணவன்-மனைவி இடையே வாக்குவாதம்.

"உன்னை புடைவையில பார்த்துப் பார்த்து ரொம்ப போரடிச்சுப் போச்சு! இதோ பார், உனக்காகவே இந்த மாடர்ன் டிரஸ்ஸை ஆசை ஆசையா வாங்கிக் கொண்டு வந்திருக்கேன். ஒருமுறை எனக்காக இதை போட்டுக் காட்டேன்'' என்று கணவர் கெஞ்சுகிறார்.

நடிகை த்ரிஷா பாடல் காட்சிகளில் அணிந்து வருவதைப் போன்ற கவர்ச்சியான ஆடை அது. மனைவியோ 'முடியவே முடியாது' என்று மறுக்கிறார்.

"நான் நாளை முதல் வேலைக்குப் போகணும்னா, நீ போட்டுக்காட்டு... வேண்டாம்னா விட்டுடு'' என்று கணவன் தந்திரமாகப் பேச... வேலைக்கே போகாத சோம்பேறிக் கணவன் எப்படியாவது வேலைக்குப் போனால் சரி என்று சத்தி



• சிதம்பரத்தில்...

யம் வாங்கிக்கொண்ட மனைவி, அந்த உடையை அணிய சம்மதித்து தலையை ஆட்டுகிறார்.

"ஓகே கட்!" என்கிறார் ஒளிப்பதிவாளர் கண்ணன். அருகே ஃப்ரெஞ்சு பட

# "நடிகர்கள்

உலகில் முதல்தர ஒளிப்பதிவாளராகப் புகழ்பெற்ற மதுநியாகராஜன். அந்த அப்பாவி மனைவி நவ்யா நாயர். கணவர்?! கலர்ஃபுல் காஸ்ட்யூமில் இருந்த தங்கர்பச்சான்!

'சிதம்பரத்தில் ஒரு



– வெளுத்து வாங்குகிறார் தங்கர்பச்சான்



...ஒரு...

அப்பாசாமி' படத்தை சிதம்பரத்திலேயே இடைவிடாமல் படம் பிடித்துக் கொண்டிருக்கிறார் தங்கர் பச்சான். இந்த முறை நடிப்பு, தயாரிப்பு ஆகிய இரண்டு புதிய பொறுப்புகள். துணிச்சலும், துறுதுறுப்புமாக இயங்கிக் கொண்டிருந்தவரை வழக்கம் போலவே வம்புக்கிழுத்தோம்.

# கோழைகள்!"

**எந்த தைரியத்தில் நடிக்க வந்தீர்கள்?**

"இங்கேயிருக்கிற பெரும்பான்மை கதாநாயகர்களுக்கு இரண்டு குழந்தைகளுக்கு அப்பாவாக நடிக்க தைரியமிருக்கிறதா? ஆறுமாதம் காத்திருந்து பாத்திரத்துக்காக தாடி வளர்க்கப் பொறுமையிருக்கிறதா? வருஷத்துக்கு இரண்டு மூன்று படங்களில் நடிக்கும் இவர்கள், இந்தக் கதையில் நடிக்க வரவில்லை. ஆட்டோகிராஃபின் வெற்றி என்ன வென்றால் சேரன்தான். சிலபேர் கதை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பள்ளிப்பருவம், கல்லூரி, வேலை தேடும் பட்டதாரி, காதல் தோல்வியால் கலங்கிக் கிடப்பவன் என்று; பருவத்துக்கேற்ற உருவ அமைப்புக்காக காத்திருந்து, உடலைத் தயார் செய்து கொண்டார். இந்தப் பொறுமை இன்று எந்த ஹீரோவுக்கு இருக்கிறது? உள்ளே வரும்போதே 'இந்த அறையில் டீவி இருக்கா? போன் இருக்கா?' என்று கேட்டுக்கொண்டுதானே நடிக்க வருகிறார்கள். 'எந்த ஊரில் ஷூட்டிங்? எத்தனை லட்சத்துக்கு டிரஸ்?' என்று கேட்கிறார்கள். இந்த மாதிரி கூலி வாங்கிக்கொண்டு நடிக்கிற

**"என் மனைவிதான் என்னை ஹீரோவாக நடிக்கச் சொன்னார்!"**

வர்களை வைத்து ஆட்டோகிராஃப் எடுத்திருந்தால் உருப்பட்டிருக்குமா?"

**இது என்ன ஹீரோக்களுக்கு எதிரான படமா?**

"இங்குள்ள கதாநாயகர்களுக்கு சில லட்சணங்கள் வைத்திருக்கிறார்கள் இல்லையா? அவற்றுக்கு எதிரான படம். ஒரு சாதாரண மனிதனின் பலவீனங்களை அதன் இயல்போடு சித்திரிக்கும் படம். இந்தப் படத்தில் நடித்தால், அடுத்த படத்தில் நடிக்க முடியாது என்று பயப்படும் இமேஜ் கோழைகள் இங்குள்ள பெரும்பான்மை கதை நாயகர்கள். அதெல்லாம் பார்க்கிற ஆள் நான் கிடையாது. இது தீவிரமான உழைப்பு!"



"...அப்பாசாமி...

**கதை நாயகனாக களமிறங்கப் போகிறேன் என்றபோது வீட்டில் என்ன சொன்னார்கள்?**

"என் மனைவியிடம் முதலில் கதையைச் சொன்னேன். 'இதில் நீங்கள் நடித்தால் வெற்றி பெறும். வேறு நடிகர்களைப் பயன்படுத்தினால் தோல்வியடையும்' என்று தடாலடியாகச் சொன்னார். 'எப்படிச் சொல்கிறாய்?' என்றேன். 'களமிறங்கிப் பாருங்கள் புரியும்' என்றார். இறங்கிய பிறகு நான் நானாகவே இல்லை. எனக்குள் இது எப்படி நிகழ்ந்தது என்று ஆச்சர்யமாக இருக்கிறது. படம் திரையரங்குக்கு வரும் வரை, நான் இளங்கோவனாக கதைக்குள்ளேயே வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இப்படிச் செய்யும் போதுதான் நூறு சதவிகித ரிசல்ட் கிடைக்கிறது. இதுவே மற்ற நடிகர்கள் என்றால் அதிகபட்சம் ஐம்பது சதவிகிதத்துக்கு மேல் எதிர்பார்க்க முடியாது."


**இளங்கோ கதாபாத்திரம் பற்றிச் சொல்லுங்கள்?**

"இதுமாதிரியான அப்பாசாமிகள் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு தெருவிலும், ஏன் நம்ம குடும்பத்திலும் கூட இருக்கிறான். தன் கடமைகளையும், பொறுப்புகளையும் மறந்த ஒரு சோம்பேறியின் கதை. அதே நேரம் உழைப்பின் உயர்வை இந்தப் பாத்திரம் வழியே எடுத்துச் சொல்லும் ஒரு தரமான பொழுதுபோக்குப் படம்."

**பொழுதுபோக்குப் படத்தில் ஏது தரம்?**

"பொழுதுபோக்கிற்காக 'தண்ணியடிக்கிறேன்' என்றால் எத்தனை பெரிய தவறு! அப்படித்தான் மட்டமான

மசாலாப் படங்களை மக்கள் பார்ப்பதும். பொழுதுபோக்கு என்பதன் அர்த்தமே பொழுதை நல்லவிதமாகப் போக்குதல் என்பதுதான். பொழுதுபோக்கு அவசியமான விஷயம். குறிப்பாக, உழைக்கும் மக்களுக்கு மிக மிக அவசியம். அவர்களுக்குத் தரமான பொழுதுபோக்குப் படம் கொடுப்பதுதான் நேர்மை.''



• —படக்காட்சிகள்

**தமிழ் மொழி, தமிழ் சினிமா என்று பேசும் நீங்கள், இந்தப் படத்திற்கு ஏன் ஒரு தமிழ்க் கதாநாயகியை தேர்வு செய்யவில்லை?**

''தமிழ் சினிமாவில் தமிழ் நடிகர்கள் இல்லை. தமிழ் நடிகைகள் என்றால் மனோரமாவும், கோவை சரளாவும்தான் இருக்கிறார்கள். இங்கே தமிழ்ப்பட முதலாளிகள், தமிழ்த் திரையரங்க உரிமையாளர்கள் கிடையாது. தமிழ் சினிமாவில் இருபது விழுக்காடு கூட தமிழர்கள் இல்லை. ரசிகர்கள் மட்டும்தான் தமிழர்கள். நிலைமை இப்படியிருக்க, நீங்கள் தமிழ் நடிகைகளைப் பற்றிப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. தமிழ் சினிமாவில் மட்டும்தான் என்றில்லை, அரசியல், வியாபாரம், மீடியா உள்ளிட்ட முக்கிய துறைகளில் அடுத்துவரும் பத்தாண்டுகளுக்குள் தமிழர்களைப் பார்க்க முடியுமா என்பது சந்தேகம்! இதுதான் தமிழனின் பரிதாப நிலை.''

**இதை முன்னிட்டுத்தான் அரசியலிலும் பங்கேற்க ஆரம்பித்திருக்கிறீர்களா?**

''அரசியல் என்பது என்னுடைய உரிமை. சொல்ல மறந்த கதையில் புரோகிதர் இல்லாத தமிழ்த் திருமணத்தை முதன் முதலில் காட்டினேன். இப்போது எனக்கு தமிழ்த் திருமணத்துக்கு வாருங்கள் என்று அழைப்பிதழ் அனுப்புகிறார்கள். 'தென்றல்' படத்தில், தமிழ்வழிநாடு, தமிழில் குடமுழுக்கு என்று காட்டியதால், இதுவரை பதிமூன்றாயிரம் தமிழ் குடமுழுக்கு நிகழ்ச்சிகளுக்கு அழைத்தார்கள். வேறு எந்த தமிழ் சினிமா இயக்குனருக்கு இந்த அங்கீகாரம் கிடைத்திருக்கிறது? இதுதான் சினிமா ஊடகத்தின் பலம். வீச்சு... இதை மூச்சுள்ள வரை சரியான பாதையில் எடுத்துச் செல்வேன்...''

**• ஆர்.சி. ஜெயந்தன்**

படங்கள் உதவி: **ஜான்சன்**

● கருத்தரிக்கும்போது அம்மாவுக்கு சர்க்கரை வியாதி ஏற்பட்டால் அது குழந்தைக்கும் வந்துவிடுமா?

- ஆர்.சுசீலா, சென்னை - 68

டாக்டர் உமா ராம்,
மகப்பேறு மருத்துவர் :

குழந்தை பிறந்து சில வருடங்களுக்குப் பிறகுதான் அம்மாவின் உடலில் நீரிழிவு நோய் தென்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது குழந்தைக்கு அந்த நோய் தாயின் மூலம் பரவ வாய்ப்பு இல்லை என்று சொல்ல முடியுமா? முடியாது. ஏனென்றால் குழந்தையின் மரபணுவில் ஏற்கெனவே இதெல்லாம் பதிவாகியிருக்கும். நீங்கள் குறிப்பிடுவது 'ஜெஸ்டேஷனல் ஷுகர்' எனப்படுவது என நினைக்கிறேன். அதாவது கருவை சுமந்திருக்கும் போது அம்மாவின் உடலில் ஏற்படும் ஹார்மோன் மாறுதல்களால் உடலில் க்ளுக்கோஸ் அளவு அதிகமாகக் கூடும். பெரும்பாலும் தகுந்த உணவுக் கட்டுப்பாட்டின் மூலமே இதைக் கட்டுக்குள் கொண்டு வந்துவிட முடியும். இன்சுலின் போடுவதெல்லாம் மிக அரிதாகத்தான்.

● நான் பிரசவித்து ஒரு வாரம் ஆகிறது. தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் நான் இன்னும் இரண்டு மாதங்களில் வேலைக்குச் செல்ல வேண்டும். தாய்ப்பால் பழக்கத்தை குழந்தைக்கு மறக்கடிக்க, இப்போதிலிருந்தே ஏதாவது செய்தால் நல்லது என நினைக்கிறேன். கொஞ்சம் கொஞ்சமாக ஃபீடிங் பாட்டிலை அறிமுகம் செய்யலாமா?

- தேன்மொழி, கோவை

டாக்டர் ஜெயந்தி விஸ்வநாதன்,
குழந்தைநல மருத்துவர் :

குறைந்தது நான்கு மாதங்களுக்காவது குழந்தைக்கு தாய்ப்பால் தேவை. அதற்குப் பிறகுதான் பால் பவுடர், பிற திட உணவுகள் போன்றவற்றைப் பற்றி யோசிக்க வேண்டும். வேலைக்குப் போகும் பெண்கள் தாய்ப்பாலை வெளியேற்றி தம்ளரில் சேமித்து அதை ஃப்ரிஜ்ஜில் வைத்துவிட்டுப் போகலாம். (இதை 'எக்ஸ்பிரஸ்ட் ப்ரஸ்ட் மில்க்' என்பார்கள்). வீட்டில் இருப்பவர்கள் அந்தப் பாலை குழந்தைக்குக் கொடுக்கலாம். வெளியேற்றப்பட்ட இரண்டு மணி நேரம் வரை இந்தப் பால் கெடாது.

● என் மகன் கல்லூரியில் படிக்கிறான். திடீரென்று ஒருநாள் என்னிடம் வந்து "எதுக்காக காதல்னாலே இந்த அப்பா - அம்மாக்கள் எல்லாம் டென்ஷன் பார்ட்டி ஆகணும்? இந்த நிலை மாறணும்" என்றான். விவாதம் எதற்கு என்று சும்மா இருந்துவிட்டேன். இப்போது கொஞ்ச நாட்களாக பித்துப் பிடித்ததுபோல் இருக்கிறான். கேட்டால் பதில் வரவில்லை. பயமாக இருக்கிறது. இந்தச் சூழலை எப்படிக் கையாளுவது என்பதற்கு ஆலோசனை சொல்லுங்களேன்.

- பெயர் வெளியிட விரும்பாத
மதுரை வாசகி

டாக்டர் ஜெயந்தினி,
மனநல மருத்துவர் :

உங்கள் கேள்வியைப் படித்ததும் நான் சந்தித்த ஒரு பெண்தான் நினைவுக்கு வருகிறாள். கல்லூரியில் தன் கூடப்

# உரை



# முடியாத வலி!

படித்த ஒரு மாணவனிடம் அவளுக்கு ஈர்ப்பு. அவனுக்கும்தான். கல்யாணக் கனவெல்லாம் கண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அவன் திடீரென்று ஒரு நாள் சுரத்தில்லாமல் வந்திருக்கிறான். "நம் காதலை வீட்டில் சொன்னேன். என் அப்பா கத்தித் தீர்த்துவிட்டார். வேறு இனப்பெண்ணை மருமகள் ஆக்கிக் கொள்ள சம்மதிக்கவே மாட்டாராம். எனக்கு என்ன செயவது என்றே தெரியவில்லை. நல்லவேளையாக நாமும் அத்துமீறிப் பழகவில்லை. நாம கல்யாணம் செய்துக்க முடியாது" என்றிருக்கிறான்.

அந்தப் பெண் இடிந்து போய்விட்டாள். அத்துமீறல் இல்லை என்றாலும், மனதளவில் அவனை கல்யாணம் செய்துகொண்டு வாழ்ந்திருக்கிறாள் அவள். தன் குமுறலை யாரிடமும் பகிர்ந்து கொள்ளவும் முடியவில்லை. தோழிகளிடம் சொன்னால் அதுவேறு மாதிரி பரவிவிடலாம். வீட்டில் சொன்னாலோ "உனக்கு நல்லா வேணும். படிக்கும்போது எதற்கு காதலும் கண்றாவியும்" என்பார்கள். இதனால் அவளுக்கு ஆண்கள் மீதே வெறுப்பு ஏற்பட்டது.

தன்மையாக உங்கள் மகளிடம் பேசிப் பாருங்கள். "எதுவாக இருந்தாலும் என் முழு ஆதரவு உண்டு'' என்பதை உணர்த்துங்கள். மேலே நான் குறிப்பிட்டது போன்ற ஏதாவது ஒரு சம்பவம் அவள் வாழ்க்கையில் நடந்திருந்தால், அதை மிகவும் ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். ஏனென்றால் அவள் மனதில் ஏற்பட்டுள்ள வலியை மற்றவர்களால் உணர முடியாது. அந்த மனநிலையிலிருந்து அவள் மீண்டு வர வேண்டும். மனநல ஆலோசகரிடம் அவளை அழைத்துச் செல்வது நல்லது. அவளைத் திட்டுவதை விட, அரவணைப்பான அணுகுமுறைதான் உடனடித் தேவை. அப்போதுதான் அவள் தன் துக்கத்தை உங்களிடம் கொட்டிக் குமுறுவாள்.

ஓரளவு மனம் தேறிய பிறகு வேறு ஆரோக்கியமான விஷயங்களில் அவளது மனதை மாற்ற முயற்சிக்கலாம். காலம் என்பது பெரும் மருந்து. கவலைப் படாதீர்கள்.

- ஜி.எஸ்.எஸ்.

ஜின்னா பற்றி அத்வானி பேசியதை, இவ்வளவு விளாசி விமர்சிக்கணுமா...?

**"ஆமாம்! ஆமாம்!"**

என்கிறார் வி.எச்.பியின் தமிழக துணைத் தலைவர் மணியன்.

# "துரோகியை



***மதச்சார்பற்ற கொள்கையில் நம்பிக்கையற்ற 'இந்துத்வா' குடும்பத்தைச் சேர்ந்த நீங்கள், 'ஜின்னாவை மதச்சார்பற்ற தலைவர்' என்று அத்வானி சொன்னதை எதற்காக ஆட்சேபிக்கிறீர்கள்?***

"வரலாற்றை மறந்துவிட்டோ, அல்லது மறைத்து விட்டோ நாம் பேசக்கூடாது. 'கலாசார ரீதியாக நாங்கள் (முஸ்லிம்கள்) இந்துக்களுடன் இணைந்து வாழ முடியாது. எனவே எங்களுக்காக நாட்டைப் பிரித்து ஒரு பகுதியைக் கொடுக்க வேண்டும்' என்று பிடிவாதம் பிடித்து பாகிஸ்தானை வாங்கிக்கொண்டு போனவர் ஜின்னா. காந்தியும், நேருவும் நாட்டை மத அடிப்படையில் துண்டாடத் தயங்கி நின்றபோது, 'நேரடி நடவடிக்கை' என்ற பெயரில், நாடு முழுவதும் முஸ்லிம்களைத் தூண்டிவிட்டு கலவரங்களை உருவாக்கியவர்தான் ஜின்னா. சொல்லப் போனால் பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் 'மதச்சார்பற்ற பாகிஸ்தானை உருவாக்க வேண்டும்' என்று அவர் பேசிக் கொண்டிருந்த போதே, வெளியில் ஆயிரக்கணக்கான இந்துக்கள் கொலை செய்யப்பட்டு வீதியெங்கும் ரத்த வெள்ளமாக இருந்தது. இது எல்லாம் அத்வானிக்குத் தெரிந்தும் அவர் ஜின்னாவைப் புகழ்ந்து பேசலாமா? இதுதான் எங்கள் வருத்தம். உண்மையிலேயே 'மதச்சார்பற்ற பாகிஸ்தானை உருவாக்க ஜின்னா ஆத்மார்த்தமாக முயற்சி செய்வார்' என்று அத்வானி நம்பியிருந்தால் கராச்சியில் ஆர்.எஸ்.எஸ். ஊழியராக இருந்த அவர், இந்தியாவுக்கு ஏன் ஓடி வர வேண்டும்? அங்கேயே நிரந்தரமாகத் தங்கியிருக்கலாமே! அத்வானியின் கருத்து தவறு என்று சொல்ல எங்களுக்கு மட்டுமல்ல... ஒவ்வொரு இந்துவுக்கும் உரிமையுண்டு."

***பாகிஸ்தான் - இந்தியா நல்லுறவுக்காக, பாகிஸ்தான் மக்களின் நம்பிக்கையைப் பெறும் நல்லெண்ண அடையாளமாகக் கூட அத்வானி இப்படிப் பேசியிருக்கலாம் அல்லவா?***

"அப்படிப்பட்ட நல்லுறவு வளரும் என்று பா.ஜ.க வேண்டுமானால் நம்பலாம்; நாங்கள் (வி.ஹெச்.பி) மனப்பூர்வமாக நம்பவில்லை. நல்லுறவு முயற்சியில் வரலாற்றை திசை திருப்பக் கூடாதல்லவா? சுதந்திரம்



• மணியன்

# ஆதரிக்கும் துரோகி!”

பெற்றபோது உலக நாடுகள் நேருவின் தலைமையின் மீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தன. தனிநாடு வாங்கி, அதற்குத் தலைமை தாங்கிய ஜின்னாவுக்கு, நேருவுக்கு சமமான தலைவர் என்று காட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இருந்தது. எனவேதான் 'மதச்சார்பற்ற பாகிஸ்தான்' என்று உலக நாடுகளின் ஆதரவைப் பெற முயன்றார். அது ஒரு கண் துடைப்பு பேச்சுதான். அந்தப் பேச்சுக்குப் பின் பத்து மாதங்களில் ஜின்னா இறந்து போய்விட்டார். 1953ல் பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசாக மாறியது. அதன்பின் அங்கிருந்த மத சிறுபான்மையோர் இன்று வரை தொடர்ந்து துன்பங்கள் அனுபவித்து வருகிறார்கள். இன்று ஜின்னாவைப் பற்றி பேசுவோர் பாகிஸ்தானிலேயே யாரும் கிடையாது. கிட்டத்தட்ட மறந்து விட்டார்கள். அத்வானி நல்லெண்ணத் தூதுவராகச் செயல்படட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் இந்துத்வா தத்துவங்களுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அவர் என்ன சொல்லியிருக்க வேண்டும்? 'மதச்சார்பற்ற பாகிஸ்தான் என்று ஜின்னா கனவு கண்டார். அப்படிப்பட்ட நிலை இன்று இங்கு இல்லையே' என்று அல்லவா பேசியிருக்க வேண்டும்?"

**தமது கருத்து ஒன்றைக் கூறியதற்காக அந்தத் தலைவரை 'துரோகி' என்று உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த தொகாடியா விமர்சிக்கலாமா?**

"தொகாடியா சொன்னது இதுதான்: 'ஜின்னா ஒரு துரோகி; அவரை ஆதரித்துப் பேசுபவர்களும் துரோகிகளைப் போலத் தான்'"

**இது போன்ற ஒரு கருத்தை அத்வானி இப்போது சொன்னதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்குமென்று நினைக்கிறீர்களா?**

"உணர்வுபூர்வமாக உந்தப்பட்டு பேசிவிட்டார், அவ்வளவுதான். அதைத் தவறு என்று சுட்டிக்காட்டும் உரிமை எங்களுக்கு உண்டு. பேசியதை வாபஸ் வாங்கிக் கொள்வதும் வாங்காததும் அவரது இஷ்டம். ஆனால் அத்வானியின் கருத்து தவறு என்று இப்போது பா.ஜ.க.விலும் குரல் ஒலிக்கத் துவங்கி விட்டது. அந்தக் குரல்களுக்குப் பதில் கொடுக்க வேண்டிய கடமை அத்வானிக்கு உண்டு."

**நடந்து கொண்டிருக்கும் இந்த மொத்த விவகாரத்தையே 'நல்ல நாடகம்' என்று விமர்சனம் செய்கிறார்களே?**

"இதுபோன்ற நாடகத்தை நடத்த வேண்டிய அவசியம் அத்வானிக்கு இல்லை. காரணம், இது நாடகம் என்றால் முடிவில் அவரது செல்வாக்குதான் சரியும்; சரிந்து கொண்டிருக்கிறது. இப்படி ஜின்னாவைப் புகழ்வதன் மூலம் சிறுபான்மையோரை கவரலாம் என்று நினைத்தால், அதுவும் நடக்கப் போவதில்லை சிறுபான்மையோர் ஒருபோதும் பா.ஜ.கவை நம்ப மாட்டார்கள். இதைவிட பா.ஜ.கவுக்கு ஆபத்தான விஷயம் என்னவென்றால், இருக்கும் ஆதரவாளர்களையும் அவர்கள் இழந்து விடுவார்கள் என்பதுதான்."

- ப்ரியன்

பிரமுகர்


# ஆயுள் பெருமை!

**க**ல்கியின் கல்வெட்டு எழுத்துகள், அநாகரிகமற்ற அரசியல் அலசல், அர்த்தமுள்ள ஆன்மிகம், எழுச்சிமிகு இளைஞர்களின் முக அறிமுகம், கருத்தாழக் கட்டுரைகள், கரும்புக் கதைகள், சிரித்து - சிந்திக்க நகைச்சுவை நறுக்குகள், ஆபாசம் இல்லாது அத்தனையும் தருவது கல்கி! கல்கியின் வாசகர் என்பதே பெருமை. அந்த வகையில் ஆயுளுக்கும் நாங்கள் பெருமைக்குரியவர்கள்.

- எழுத்தாளர்கள் சுபா




படம் : ஸ்ரீஹரி




# பந்தாடப்படும் மதச்சார்பின்மை!

தேவையே இல்லாமல், அதுவும் பாகிஸ்தானில் போய், ஜின்னாவை மதச்சார்பற்றவர் என அத்வானி சிலாகித்து, வர்ணித்தது ஏன்...? அது அத்வானிக்கு மட்டுமே வெளிச்சம்!

தமது பாக். பயணத்தையொட்டி அந்நாட்டைப் பற்றிய பல நூல்களை வாங்கிப் படித்திருக்கிறார் அத்வானி. அவற்றுள் ஒரு புத்தகத்தின் ஆசிரியரான ஐயன் பிரையன்ட் வெல்ஸ், ஜின்னாவின் மதச்சார்பின்மையைக் குறிப்பிட்டிருக்கிறார். பாகிஸ்தானிய அரசியல் நிர்ணய சபை உரையில், அந்நாட்டை மதச்சார்பற்ற நாடாக உரிமைப்படுத்த ஜின்னா விரும்பியதையும் எழுதியிருக்கிறார்.

இந்த நூலின் கருத்தை எதிரொலிக்கும் வகையில்தான் அத்வானி பாகிஸ்தானில் தமது கருத்தை வெளியிட்டாரா...?


அல்லது, பாகிஸ்தானுடன் இந்தியா நல்லுறவு கொள்ள பெரிதும் முயன்று வரும் நேரத்தில், அந்த முயற்சிக்குத் தமது கருத்து வலு சேர்க்கும் என்று கருதினாரா...?

அல்லது பா.ஜ.க.வின் மதவாத இமேஜை - முஸ்லிம் எதிர்ப்பு இமேஜை - தகர்க்கும் முயற்சியில் இந்த 'தாராளமயமாக்கல்' நடவடிக்கையில் ஈடுபட்டாரா...?


இவை எதுவுமே அன்றி, ஏதோ தோன்றியதைச் சரியாக



கல்கி



2005 ஜூன் 19
பார்த்திப ஆனி 5
மலர் : 63
இதழ் : 47




யோசிக்காமல் சும்மா பேசி வைத்தாரா...?


உண்மையை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் ஓர் உண்மை நமக்கு நன்றாகவே தெரிகிறது. தங்களது நம்பர் ஒன் எதிரியான ஜின்னாவைப் பாராட்டியதற்காக சங் பரிவார் அமைப்புகள் அத்வானியை இனி மன்னிக்கவே போவதில்லை.

உண்மையில் இந்தப் பரிவார் அமைப்புகளுக்கு மதச்சார்பின்மையிலேயே நம்பிக்கை கிடையாது. ஆகவே, அவர்களைப் பொறுத்தமட்டில் ஜின்னா மதச் சார்பற்றவர் என்றால், அது இகழ்ச்சியே தவிர புகழ்ச்சி அல்ல!

எனவே, அத்வானி ஜின்னாவை 'மதச்சார்பற்றவர் என வர்ணித்ததை அவர்கள் ஆட்சேபிக்கிறார்கள் என்பதைக் காட்டிலும், பாகிஸ்தானை மகிழ்விப்பதற்காக அத்வானி பேசியதைத்தான் அவர்கள் வெறுக்கிறார்கள் எனலாம்.

சங் பரிவாரைப் பகைத்துக் கொண்டால் பா.ஜ.கவின் அரசியல் வாய்ப்புகள் கடுமையாக பாதிக்கப்படும். அந்த வாய்ப்புகளைத் தொலைத்து விடாமலிருக்கவே ராஜினாமா செய்தார் அத்வானி.

கட்சி மேலிடம் அவரை வற்புறுத்தி ராஜினாமாவை வாபஸ் பெறச் செய்துவிட்டது. அத்வானி தலைமை இல்லாத பா.ஜ.கவிடம் பொதுமக்களுக்கு (வாக்காளர்களுக்கு) நம்பிக்கை ஏற்படுவது துர்லபமே! மேலும், பா.ஜ.கவின் அடுத்த தலைவர் யார் என்கிற தகராறும் விரைவிலேயே ஆரம்பித்துவிடும். இதனால்தான் அத்வானியைத் தலைமைப் பொறுப்பில் தொடரும்படி வற்புறுத்தியுள்ளது பா.ஜ.க. ஆனால், கட்சித் தலைமையில் அத்வானி தொடர்வாரேயானால், இதுநாள் வரை அக்கட்சி யின் அஸ்திவாரமாக இருந்து தேர்தல் வெற்றிக்கு உழைத்த சங் பரிவார் அமைப்பு, இனி பா.ஜ.கவுக்கு முழு மனத்தோடு ஆதரவு தருமா என்பது




சந்தேகம்தான்.

இந்தோ - பாக் நல்லுறவை வளர்க்க விரும்பி பாகிஸ்தானுக்குச் சென்ற அத்வானியின் நல்நோக்கத்தைப் பாராட்டினாலும், ஜின்னாவைப் பற்றி அவர் ஏன் பேசினார்... மௌனம் காத்திருக்கலாமே என்று வருந்தத்தான் வேண்டியிருக்கிறது. மேலும், அவர் பேசியது உண்மைக்குப் புறம்பானது என்பதால் நமது வருத்தம் அதிகரிக்கிறது. பாகிஸ்தான் உருவான பிறகு, ஒரு கால கட்டத்தில் ஜின்னா மதச்சார்பின்மையை விரும்பி ஏற்றுக்கூட இருக்கலாம். ஆனால் அவர் தமது வாழ்க்கை முழுதும் மதத்தின் பெயராலேயே அரசியல் நடத்தியவர். அதனால் இந்தியா பிளவுபடவும் காரணமாயிருந்தவர்.

அத்வானிதான் எதிர்விளைவுகள் குறித்து யோசிக்காமல் பேசிவிட்டாரென்றால், இந்த சங்பரிவார் அமைப்புகளேனும் நாசூக்காக அப்பேச்சைப் புறக்கணித் திருக்கலாம்... ஆனால் அவர்களோ, அத்வானி பாகிஸ்தானில் அடியெடுத்து வைத்த கணம் முதல், பேசிய - நடந்துகொண்ட விதத்தையெல்லாம் அக்கு வேறு ஆணி வேறாக அலசித் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். போதாக்குறைக்கு, "மதச் சார்பின்மையை ஆதரிப்பது போல் போலி நாடகம் போடுகிறார்; வாஜ்பாய் அணிந்துள்ள முகமூடியை இப்போது அத்வானியும் அணிய ஆரம்பித்திருக்கிறார்" என்றெல்லாம் காங்கிரஸும் இதர கட்சியினரும் தலைக்குத் தலை விமர்சித்து வருகிறார்கள்.

கடைசியில், எல்லோருமாகச் சேர்ந்து பாகிஸ்தான் முன்னிலையில் நமது நாட்டின் மதிப்புக்குரிய தலைவர் ஒருவரை விட்டுக் கொடுக்கும்படியான கேவலமான நிலைமை உருவாகிவிட்டது. அண்டை நாடுகள் இந்த அவலத்தைப் பார்த்து கேலி சிரிப்பு சிரிக்கின்றன. ○

‘மெட்ரோபாலிட்டன் நகரம் என்றாலும், சென்னை கட்டுப்பட்டியான ஊராச்சே’ என்றுதான் இன்றைக்கும் சென்னையை வட இந்தியா மதிப்பிடுகிறது.

அது உண்மைதானா என்றறிய, படிப்புக்காக சென்னைக்கு வந்திருக்கும் ஹிந்திவாலாக்களான ஆவனி, தேவிகா, பக்தி, தீபக் நால்வரையும் சென்னை தி.நகர் ஷாப்பிங் கடலில் மூழ்க விட்டோம். அரண்மனையாய் விரிவுபடுத்தப்பட்டுள்ள போத்தீஸின் ஏழு மாடிகளையும் மேலும் கீழுமாகச் சுற்றிப் பார்த்தவர்கள், பிறகு ஒரு மணி நேரம் அங்கேயே இருந்து நோட்டம் விட்டனர். ‘‘ப்பா, சென்னை இளைஞர்கள் எப்படியெல்லாம் மாறிட்டாங்க!’’ என்று கண்கள் விரிய தங்கள் ஸ்டேட்மெண்டை வாசித்தனர்.



‘‘தி.நகருக்கு வந்தால்தான் சென்னை மக்கள் எப்படியெல்லாம் விதவிதமாக உடையணிகிறார்கள், ஷாப்பிங் செய்கிறார்கள் என்று தெரிகிறது. போத்தீஸில் நாங்கள் பார்த்த வரைக்கும், டீ-ஷர்ட், குர்தா, ஃபேடட் ஜீன்ஸ் போன்ற ஆடைகளைத்தான் இளைஞர்கள் அதிகம் விரும்புகிறார்கள். டீ-ஷர்ட், ஜீன்ஸ் இவைதான் ஆண் - பெண்

# ஏழு மாடி சவால்!

இரு பாலராலும் அதிகம் விரும்பி வாங்கப்படுகின்றன. ஏழு மாடியிலும் விதவிதமான துணி வகைகள் இருப்பதால், ஒரு குடும்பத்துக்கு மட்டுமல்ல, திருமணத்துக்கும் தேவையான அனைத்து துணிமணிகளையும் இங்கேயே வாங்கி விட முடியும் என்பது ஷாப்பிங் பளுவைக் குறைக்கிறது

சென்னை வெயிலுக்கு காட்டன்தான் பெஸ்ட். ஆனால் சிந்தடிக் துணிகளுக்குத்தான் இங்கு ஏக டிமாண்ட். ஷார்ட்டாக உள்ள குர்தாவான



ஷாப்பிங்




குர்தீஸ், மணிகள் - கண்ணாடி - சம்க்கி வைத்த காக்ரா சோளி, அதே வேலைப்பாடு உள்ள வட இந்திய பாந்தினி சேலைகளுக்கு, இளம் பெண்களிடையே மவுசு ஏற்பட்டிருப்பது கண்கூடாகத் தெரிகிறது. மாடர்ன் காஸ்ட்யூம் அணிந்து லெதர் பெல்ட், தோளுக்குத் தோழனாக ஃபேன்ஸியான லெதர் பேக் என்று பெண்கள் நடந்து வரும்போது 'கண்ணால் காண்பது சென்னையா' என்று வியப்பு மேலோங்குகிறது" என்றபடி அங்கிருந்து கிளம்ப மனமில்லாமல் விடைபெற்றனர். அதே சமயம் ஒரு பெரிய ஜனத் திரளே போத்திஸுக்குள் ஷாப்பிங் செய்ய நுழைந்து கொண்டிருந்தது - ஏழு கடல் தேடி முத்தெடுப்பது போல ஏழு மாடி துணிக்கடலை அலசத் தயாராக...!

- பப்பி

படங்கள்: ஸ்ரீஹரி



# அஞ்சல் வழியில் ஹிந்தியில் பேச பயிற்சி & அஞ்சல் வழியில் ஆங்கிலத்தில் உரையாடப் பயிற்சி

ஒரு தாய் எலி, தன் குஞ்சுகளுடன் சென்று கொண்டிருந்தது. எதிரே ஒரு பூனை பாய்ந்து வந்தது. குஞ்சுகள் அனைத்தும் தாயின் காலைக் கட்டிக் கொண்டன. தாய் எலி அவைகளை, "நானிருக்கிறேன், கவலைப்படாதே" என்ற அர்த்தத்தில் தட்டிக் கொடுத்த வண்ணம், பூனையைப் பார்த்து "வௌ...வௌ..."என்று குரைத்தது. பூனை பயந்து, அதிர்ந்து ஓடியது. எலிக்குஞ்சுகள் பெருமையாக தாயைப் பார்த்தன. தாய், எலி குஞ்சுகளைப் பார்த்து, "மற்றொரு மொழி தெரிந்து வைத்திருப்பதால் உண்டாகும் பலனைப் பார்த்தீர்களா" என்று கேட்டுப் புன்னகை செய்தது.

ஆம், கம்ப்யூட்டரோ, கணக்கோ, விஞ்ஞானமோ அல்லது இவை அனைத்துமோ கற்றிருந்தாலும், மற்றவர்களுக்கு புரியும் மொழியில் எடுத்துக் கூறவோ, எழுதவோ தெரியாவிட்டால் இக்கல்வியறிவு எவருக்கும் பயன்படுவதில்லை. அதாவது நம் எண்ணங்களை மற்றவர்களுக்கு அவர்களுக்கு புரியும் மொழியில் எடுத்துக் கூற வேண்டும்.

நம் நாட்டில் 90 சதவீதத்திற்கும் மேலானவர்கள் ஹிந்தி மொழியில் பேசவும், பேசுவதை புரிந்து கொள்ளவும் தெரிந்து வைத்திருப்பது அவசியமாக உள்ளது. சமீப காலத்தில் வங்கியில் பணிபுரியும் அதிகாரி ஒருவர் டில்லி சென்றிருந்தார். அங்கு அவர் "Red Fort" பார்க்க விரும்பியுள்ளார். டில்லியில் உள்ள காரோட்டிகள் "Red Fort" என்றால் சுலபமாக புரிந்து கொள்ள மாட்டார்கள். "லால்கிலா" என்றால் தான் புரிந்து கொள்வார்கள். ஆனால் நம் நண்பருக்கு "லால்கிலா" என்று சொல்ல தெரியவில்லை. வண்டி ஓட்டுனருடன் பல இடங்களுக்கு சுற்றிவிட்டு கடைசியில் "லால்கிலா" எனப்படும் "Red Fort"ஐ பார்க்காமலேயே நம் நண்பர் திரும்பிவிட்டார்.

இது ஒரு உதாரணம்தான், ஹிந்தி மொழி அறியாதவர்கள் இப்படி பல இழப்புகளுக்கு ஆளாகின்றனர். இவர்களுக்கு உதவும் வகையில் பாரத ஸ்டேட் பாங்கு அதிகாரிகள் சங்க பயிற்சி மையம் அஞ்சல் மூலம், பேச்சு மொழி ஹிந்தி கற்பிக்கிறது. நிற்க

ஹிந்தியுடன் நல்ல ஆங்கிலத்திலும் பேசத் தெரிந்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. இதனை மனதில் கொண்டு இப்பயிற்சி மையம் "அஞ்சல் வழியில் பேச்சு மொழி ஆங்கில பயிற்சி" அளிக்கிறது. இப்பயிற்சியில் சேருபவர்கள் இலக்கண சுத்தமான ஆங்கிலம் பேசவும் எழுதவும் எளிதில் கற்றுக் கொள்வார்கள். இந்த இரண்டு பயற்சிகளுக்கான முழு விபரங்கள் கீழே வருமாறு:

**பேச்சு மொழி ஹிந்தி டிப்ளமா / பேச்சு மொழி ஆங்கில டிப்ளமா**

1. பயிற்சியில் மொழி ஆர்வமுடைய எவரும் சேரலாம். (பள்ளிச் சிறுவர் முதல் ரிடையர் ஆனவர் வரை)
2. பேச்சு மொழி ஹிந்தி தமிழ் மூலமாகவும், ஆங்கிலம் மூலமாகவும் நடத்தப்படுகிறது.
3. பேச்சு மொழி ஆங்கிலம் தமிழ் மூலம் நடத்தப்படுகின்றது.
4. அஞ்சல் வழியில் நடத்தப்படுவதால் எங்கிருந்தபடியும் சுலபமாகப் படிக்கலாம்.
5. இரு வழித் தொடர்பு (Two Way Communication) இப்பயிற்சியின் சிறப்பு அம்சமாகும். அதாவது ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் பாடங்கள் கூரியர் / post மூலம் அனுப்பப்படும். ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் பயிற்சிகள் இருக்கும். இப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். இவற்றை திருத்தி, பயிலுபவர்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
6. ஒவ்வொரு மாதமும் (ஒரு விடுமுறை நாளில்) ஒரு நேர்முக வகுப்பு நடத்தப்படுகின்றது. இவ்வகுப்புகளில் அந்த மாதம் அனுப்பிய பாடங்கள் விளக்கப்படுவதுடன்




* எட்டாவது பட்டமளிப்பு விழாவின் போது தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்களுடன் SBIOA Institute, நிர்வாகத்தினர்.

ஹிந்தி மற்றும் ஆங்கில மொழியில் உரையாட (மதிய உணவுடன்) பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. நேர்முக வகுப்புகள், பேச்சு மொழி ஹிந்திக்கு தனியாக ஒரு நாளும், பேச்சு மொழி ஆங்கிலத்திற்கு தனியாக மற்றொரு நாளும் நடத்தப்படும்.

7. நேர்முக வகுப்புகளுக்கு வர முடியாதவர்களுக்கு உதவியாக (மொழி விளக்க மேம் பாட்டு மையங்கள்) திருச்சி, கோவை, மதுரை, தில்லி, ஹைதராபாத், மும்பை, ராஜஸ்தான், தஞ்சாவூர் போன்ற இடங்களில் உள்ளன. தவிர 15 பேர்களுக்கு அதிகமான எண்ணிக்கையில் மாணவர்கள் உள்ள இடங்களில் மொழி விளக்க நிபுணர்கள் உள்ளனர்.

**8. பேச்சு மொழி ஹிந்தி ஒலி நாடாக்கள்:** அகர உச்சரிப்பிலிருந்து பலவகை சூழ்நிலைகளில் பேசும் பயிற்சிகளைக் கொண்ட இரட்டை ஒலி நாடாக்கள் (Twin Cassettes) வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுடன் வழங்கப்படும் துணை நூலை படித்த வண்ணம், ஒலி நாடாக்களைக் கேட்டால் மிக விரைவில் மொழியைக் கற்றுக் கொள்ளலாம். இந்த ஒலிநாடாக்களைப் பெற விரும்புபவர்கள் ரூபாய் 150க்கான டிமாண்ட் டிராப்ட் அல்லது Local Cheque. **SBIOA Institute, Chennai** என்ற பெயருக்கு எடுத்து தனியாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

9. (பேச்சு மொழி ஆங்கிலம் ஒலிநாடாக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.)

10. பயிற்சியில் தேறியவர்களுக்கு வருடா வருடம் நடக்கும் பட்டமளிப்பு விழாவில் "Diploma in Conversational Hindi / Diploma in Conversational English" சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. விழாவில் இதுவரை ஆற்காடு இளவரசர், முன்னாள் பிரதமர் சந்திரசேகர். பாரத ரத்னா சி. சுப்ரமணியம். டாக்டர் கிரண்பேடி - ஐ.பி.எஸ். பாரத ஸ்டேட் வங்கியின் தலைமைப் பொது மேலாளர் திரு R.C. ஷர்மா, அருட்செல்வர் Dr. N. மஹாலிங்கம், திரு எஸ். குருமூர்த்தி, Chartered Accuntant and Eminent Columinist, Dr. V.C. குழந்தைசாமி போன்றவர்கள் முக்கிய விருந்தினராக உரை நிகழ்த்தியுள்ளனர்.

11. பயிற்சி காலம் ஆறுமாதம் (ஜனவரி முதல் ஜூன் வரை மற்றும் ஜூலை முதல் டிசம்பர் வரை) அடுத்த வகுப்புகள் ஜூலை 2005ல் துவங்க உள்ளன.

12. பயிற்சி கட்டணம் ரூ.600/- (ரூபாய் அறுநூறு மட்டுமே) நேர்முகப் பயிற்சி, தேர்வுக் கட்டணம் உட்பட)

ஜூலை 2005ல் துவங்கவிருக்கும் பயிற்சியில் சேர விரும்புபவர்கள் ரூ.100க்கான டிமாண்ட் டிராப்ட் அல்லது உள்ளூர் காசோலை SBIOA Institute, Chennai என்ற பெயரில் எடுத்து சுய விலாசமிட்ட, தபால் தலையுடன் (ரூ.10) கூடிய உறையுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும். உறையின்மேல் பேச்சு மொழி ஹிந்தியா அல்லது பேச்சு மொழி ஆங்கிலமா என்பதையும் மற்றும் பயிற்று மொழியையும் குறிப்பிட வேண்டும். இந்த ரூபாய் 100/- பயிற்சிக் கட்டணத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படும்.

The Executive Director,
SBIOA Institute,
229, N.S.C.Bose Road,
P.B.No.1279,
Chennai - 600 001.
Phone:044 - 25340226

Advt



# ஆரம்பச் சம்பளம்

சென்னை, அண்ணா யுனிவர்சிட்டியில் மூன்றாம் வருடம் படிக்கும் நந்தகுமாருக்கு இன்னும் ஒரு வருடப் படிப்பு பாக்கியிருக்கிறது. ஆனால் நந்தகுமார் மட்டுமல்ல, அவரது வகுப்புத் தோழர்கள் பலரும் வேலை தேடுவது பற்றிய கவலையில்லாமல் வளைய வருகின்றனர். காரணம், காக்னிசன்ட், டி.சி.எஸ்., இன்போசிஸ் போன்ற பிரபல சாஃப்ட்வேர் கம்பெனிகள், ''நாங்கள் உங்களுக்கு இருபதாயிரம் சம்பளம் தருகிறோம். படிப்பு முடிந்ததும் எங்கள் கம்பெனியில் சேர்ந்து கொள்ளுங்கள்'' என்று இப்பொழுதே அவர்களை ரிசர்வ் செய்துவிட்டதுதான்!

படிக்கும் காலத்திலேயே 'கை நிறைய சம்பளத்தோடு வேலை' என்கிற மாபெரும் புரட்சி ஒன்று சமீபகாலமாக சத்தமில்லாமல் தமிழ் நாட்டின் அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.



• வேலை கிடைத்த சந்தோஷம்..

இந்த மாபெரும் புரட்சிக்கு வித்திட்டவை இந்திய சாஃப்ட்வேர் கம்பெனிகள்தான். இதற்கு முன்பு யு.எஸ்.ஸிலிருந்துதான் இந்தியாவுக்கு சாஃப்ட்வேர் ஆர்டர்கள் வந்து கொண்டிருந்தன. ஆனால் சமீபகாலமாக ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவைத் தேடிவர, இன்று நாம் அறிந்திருக்கும் அத்தனை சாஃப்ட்வேர் கம்பெனிகளுக்கும் 99% வருமானம் யு.எஸ். மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருகிறது. முன்பெல்லாம் பேங்கிங், ஸ்டாக் மார்க்கெட்டிங், இன்ஷுரன்ஸ் போன்ற துறைகளிலிருந்துதான் ஆர்டர்கள் வந்து கொண்டிருந்தன. ஆனால் சமீபகாலமாக பார்மசூட்டிகல், டெலிகாம், சுகாதார மையங்கள், உற்பத்தி நிலையங்களிலிருந்தும் சாஃப்ட்வேர் ஆர்டர்கள் வந்து



# ரூ.20,000!

• தேர்வுக்குத் தயாராகிறார்கள்...

குவிந்த வண்ணம் உள்ளன. வருடம் தோறும் ஏழாயிரம் பேரை பணியில் அமர்த்த வேண்டிய கட்டாயம் முன்னணி சாஃப்ட்வேர் நிறுவனங்களுக்கு இருக்கிறது. தகுதி வாய்ந்த நபர்களை அவர்கள் படிக்கும்போதே கேம்பஸ் இண்டர்வியூ நடத்தி தேர்வு செய்து விடுகிறார்கள்.

அண்ணா யுனிவர்சிட்டியிலுள்ள Centre of University and Industry Collaboration(CUIC) எனும் அமைப்பு இந்த புரட்சிக்குத் துணை நிற்கிறது.



• மன்னார் ஜவஹர்

இதன் முதற்கட்டமாக அண்ணா யுனிவர்சிட்டியின் சார்பு கல்லூரிகளான Guindy College of Engineering, எம்.ஐ.டி., ஏ.சி. காலேஜ் ஆஃப் டெக்னாலஜி, காலேஜ் ஆஃப் ஆர்கிடெக்சர் ஆகிய நான்கு கல்லூரிகளின் மாணவர்களுக்கு (மூன்றாம் வருட படிப்பை முடித்தவர்கள்) கடந்த மே 29ம் தேதி கேம்பஸ் இண்டர்வியூ நடத்தப்பட்டது. நம்பினால் நம்புங்கள், இந்தியாவிலேயே முதன் முறையாக ஒரே கேம்பஸ் இன்டர்வியூவிலிருந்து காக்னிசன்ட் சாஃப்ட்வேர் கம்பெனிக்காக 504 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்! சம்பளம் 18,000 ரூபாயிலிருந்து 22,000 வரை! இதுதவிர 50,000 - 60,000 சம்பளத்துக்கும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால், அவர்களுக்குக் கடுமையான தேர்வுகள் இருக்குமாம்.

'இதையெல்லாம் நம்ப முடியவில்லையே' என்றால், சிரிக்கிறார், CUICயின் இயக்குனர் மன்னார் ஜவஹர். பின்பு இது பற்றித் தெளிவாகக் கூற ஆரம்பித்தார்:

"முன்பு அண்ணா யுனிவர்சிட்டியில் சிவில், எலக்ட்ரிகல், மெக்கானிக்கல் என்று மூன்று துறைகள் மட்டுமே இருந்தன. ஆனால் இன்று 27 யு.ஜி, 70 பி.ஜி கோர்ஸ்கள் முளைத்து விட்டன. இத்தனை துறைகள் இருந்தாலும் இதில் படிக்கும் பெரும்பாலான மாணவர்களின் கனவு, தான் ஒரு சாஃப்ட்வேர் இன்ஜினீயர் ஆக வேண்டும் என்பதுதான். அதைவிட சுலபமான ஒரு வொயிட் காலர் ஜாப் கிடைக்காது என்பதே அவர்களது எண்ணம்.

சாஃப்ட்வேர் கம்பெனிகளிடையே அறிவுள்ள மாணவர்களை வளைத்துக் கொள்ள கடும் போட்டி நிலவுவதால்,

## –தமிழகத்தில் புதுப் புரட்சி!

## ஆங்கிலம் அவசியம்!

ஒரே கேம்பஸ் இண்டர்வியூவில் 504 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து சாதனை படைத்திருக்கும் காக்னிசன்ட் (cognizant) இயக்குனர் ஆர். ராம்குமாரிடம் பேசினோம். "சாஃப்ட்வேர் வளர்ச்சி அபரிமிதமாக இருப்பதால் தற்போதைய சூழலில் எங்களுக்கு வருடத்திற்கு ஏழாயிரம் பேரை புதிதாகத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம். அனுபவசாலிகளை விட மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் எங்களுக்கு இரு அனுகூலங்கள். ஒன்று, அனுபவம் உள்ள கேண்டிடேட் எங்களிடம் நிறைய சம்பளம் எதிர்பார்ப்பார். ஆனால் மாணவர்களுக்கு பதினெட்டாயிரம் முதல் 22,000 வரை(!) சம்பளம் கொடுத்தால் போதும். அடுத்து, புதியவர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் எங்களுக்கென்று இருக்கும் கல்ச்சரில் அவர்களைச் சுலபமாக ஈடுபடுத்திவிட முடியும்" என்றவர், குறிப்பாக ஒரு விஷயத்தை தெளிவுபடுத்தினார். "ஒரு மாணவன் என்னதான் திறமைசாலியாக இருந்தாலும் அவனுக்கு ஸ்போக்கன் இங்கிலீஷ் மட்டுமல்ல, எழுத்திலும் திறமை இருந்தாக வேண்டும். எங்களது கிளையண்ட்கள் எல்லாம் வெளிநாட்டினர் என்பதால் ஆங்கில அறிவு நிச்சயம் தேவை" என்றார்.



• ராம்குமார்

கடந்த ஏழு வருடங்களாக அண்ணா யுனிவர்சிட்டியில் பயிலும் மாணவர்களை, அவர்கள் மூன்றாம் வருடம் முடிக்கும்போதே வந்து டெஸ்ட், இண்டர்வியூக்கள் நடத்தி கொத்திக்கொண்டு போய் விடுகிறார்கள். நீ, நான் என்று கம்பெனிகளிடையே நடக்கும் போட்டியில் பலனடைவதென்னவோ மாணவர்கள்தான். குறிப்பிட்ட படிப்பைத்தான் படிக்க வேண்டும் என்பதில்லை. கற்றுக் கொள்ளும் திறனும் எவ்விதச் சூழலையும் சமாளிக்கும் ஆற்றலும் இருந்தால் போதும்" என்றவர், "இது மாதிரியான கேம்பஸ் இண்டர்வியூ அண்ணா யுனிவர்சிட்டியில் மட்டுமல்ல, அதன் கீழுள்ள 222 இன்ஜினீயரிங் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் நலன் பொருட்டு சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற இடங்களிலும் நடக்கின்றது. எண்பது சதவீதத்துக்கு மேல் மதிப்பெண்கள் பெற்றிருந்த பெரும்பாலான மாணவர்களுக்கு இதில் வேலை கிடைத்துவிடுகிறது" என்றார்.

மாணவர்களின் மன நிலையை அறிய நாம் அண்ணா யுனிவர்சிட்டிக்கு சென்றிருந்த போது, விவேகானந்தா ஆடிட்டோரியத்தில் Infosys கம்பெனிக்காக ஆயிரம் மாணவர்களுக்கு aptitude test நடந்து கொண்டிருந்தது. அனைவரது விழிகளிலும் பதற்றத்தோடு கூடிய கனவு. எவ்வாறு இவர்கள் தங்களை இது போன்ற தேர்வுகளுக்குத் தயார்படுத்திக் கொள்கிறார்கள் என்று வேலை கிடைத்த சந்தோஷத்தில் மிதந்து கொண்டிருந்த சிலரிடம் கேட்டோம்.

"நாங்க மூன்றாவது வருடத்துக்குள் நுழைந்ததிலிருந்து இதற்காக ஆயத்தமாகிவிடுவோம். 'core competancy Development programme'ன்னு தனியா எங்களுக்கு இதுல கோச்சிங் உண்டு. ஏழு வகையான டெஸ்ட்டுகளில் எங்களை டிரில் வாங்குவார்கள். இதனால் அண்ணா யுனிவர்சிட்டியில் படிக்கும் 90% மாணவர்கள் படிப்பு முடியும் ஒரு வருடத்துக்கு முன்பே நல்ல வேலையில் செட்டிலாவதால், கடைசி வருடப் படிப்பை எந்த டென்ஷனுமில்லாமல் படிப்போம். முன் அனுபவம் இருந்தால்தான் வேலை என்கிற பெரிய தொல்லையிலிருந்து நாங்கள் தப்பித்துக் கொள்கிறோம்" என்று விடுதலைப் பெருமூச்சு விட்டனர்.

- ச.ந.கண்ணன்

படங்கள் : ஸ்ரீஹரி

# பயம்!

## விஜயநிர்மலன்



**தே**வமாதா நர்சரிப் பள்ளியில்... அது பகல் உணவு நேரம். எல்.கே.ஜி., யூ.கே.ஜி குழந்தைகளுக்கு பெற்றவர்கள் வந்து உணவு புகட்டிக் கொண்டிருந்தார்கள்.

மரத்தடியில் கூட்டமாய் வந்திறங்கிய தவிட்டுப் புறாக்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு, தாய் ஊட்டுகிற சாப்பாட்டில் கவனமில்லாமல் இருந்த குழந்தை மௌனாவை, திவ்யா செல்லமாய் கண்டித்தாள்.

"மௌனா, இன்னும் கொஞ்ச நேரத்துல பெல் அடிச்சுடுவாங்க. சீக்கிரமா சாப்பிடு. இல்லேன்னா உன் சாப்பாட்டை இந்த ஸ்கூல் ஆயாம்மா வந்து பிடுங்கி சாப்டுடுவா. நீ சாப்பிடறியா இல்லையான்னு முட்டை முட்டையா கண்ணை வெச்சுக்கிட்டு, பேய் மாதிரி உன்னையே பார்த்துக்கிட்டு இருக்காப் பாரு... ம்...சீக்கிரம் சாப்பிடு."

திவ்யாவின் வார்த்தைகள் சற்று தூரத்தில் உட்கார்ந்திருந்த செல்லம்மாவின் காதுகளில் விழத்தான் செய்தன. ஆனால் அவள் அதைக் கண்டுகொள்ளவே இல்லை. திவ்யா இப்படி தினமும் ஆயம்மாவை பேய், பூதம், பிசாசு என்று காரணம் காட்டி தன் குழந்தைக்கு சோறூட்டுவது வாடிக்கையானது தான். ஆயம்மா செல்லம்மாவிற்கு இதெல்லாம் பழகிவிட்டது.

"ஏண்டி செல்லம்மா... உனக்கு சூடு, சொரணையே கிடையாதா...? நானும் பார்க்கறேன், அவ என்னடான்னா குழந்தைக்கு சோறு ஊட்ற சாக்குல உன்னை தினமும் கரிச்சுக் கொட்றா... நீ பாட்டுக்கு வெத்தலையை கொதப்பிக்கிட்டு உட்கார்ந்திருக்கியே... கேவலமா இல்ல...?"- பள்ளியில் குப்பை கூட்டுகிற முத்தாயி, செல்லம்மாவை உசுப்பிவிட,

"அட... விடு முத்தாயி... இதையெல்லாமா பெருசா எடுத்துக்கிறது. என்னால அந்தக் குழந்தை ரெண்டு வாய் சேர்த்து சாப்பிடுதுன்னா எனக்கு சந்தோஷம் தான். என் பேரக் குழந்தைகளுக்கே என் மருமக என்னைக் காட்டி பயமுறுத்தித் தான் சோறு ஊட்டுவா. இவளையும் அந்த மாதிரி நெனச்சுக்கிட்டாப் போச்சு!"

சாதாரணமாகச் சொல்லிவிட்டு நகர்ந்த செல்லம்மாவை வினோதமாகப் பார்த்தாள் முத்தாயி.



# 5 பர்சனல் டைரி



எல்லா அம்மாக்களும் வானம் பார்க்க கற்றுக் கொடுக்கிறார்கள். எனக்கும் வானத்தை அறிமுகப்படுத்தியவர் அம்மாதான். "ஸ்டார்ஸ் எல்லாம் ஏம்மா மின்னிக்கிட்டே இருக்கு?" - எனது கேள்விக்கு அம்மா சொன்ன பதில் பசுமரத்து ஆணிபோல் பதிந்துவிட்டது.

"வானத்துலேர்ந்து ஒரு நட்சத்திரம் பூமிக்கு இறங்கி வந்துடுச்சி! அதைத்தான் எல்லா நட்சத்திரங்களும் கீழே பார்த்து தேடுதுங்க"

"அந்த நட்சத்திரம் எங்கே போச்சு?"

"நீதான் அது!"

"போங்கம்மா...! நீங்க பொய் சொல்றீங்க" என்றபடி செல்லமாய் அடித்திருக்கிறேன். இரவு நேரத்து மொட்டை மாடித் தனிமைகளில் அம்மா சொன்ன அந்த ஃபாண்டஸியான பொய்யும், அதில் பொதிந்து கிடக்கும் பாசமும் நினைவில் மோதிவிட்டுப் போகின்றன இப்போதும்.

மற்றொரு தருணத்தில் நிலா பற்றிய எனது சந்தேகம் ஒன்றுக்கும் அம்மாவிடம்தான் பதில் இருந்தது.

"மூன்ல ஏன் இவ்ளோ ஸ்டெய்ன்ஸ்?"

"அது கறை இல்லேப்பா! ஒரு பாட்டி துணி துவைக்கிறாங்க! நல்லா உத்துப் பார் தெரியும்" அது உண்மைதானோ என்று கூர்ந்து பார்த்தபோது, நிஜமாகவே ஒரு துணி துவைக்கும் பாட்டியை நிலவில் பார்த்தேன். அந்தக் கணமே கேட்டேன். "நம்ம பாட்டிக்கு நீங்கதானே வாஷ் பண்ணித் தர்றீங்க... நிலாப் பாட்டிக்கு யாருமில்லையா?"

"அவங்க புடைவையை வேற யாரும் துவைச்சுத் தந்தா அவங்களுக்குப் பிடிக்காது" இப்படிச் சொன்ன அம்மா இன்றுவரை எனது துணிகளை வாஞ்சையோடு துவைத்துத் தருகிறார்.

"வீட்ல ஆள் இருக்கும் போது எதுக்கு இந்த வேலை?" என்றால் கேட்க மாட்டார்.


"எம் பிள்ளைங்க துணிகளை நான் வாஷ் பண்ணினாத்தான் திருப்தி" என்று எங்களை இன்னும் குழந்தைகளாகவே பார்க்கும் அம்மாவின் உலகம் நான்கு சுவர்களால் ஆனது.

வீடுதான் அம்மாவுக்கு எல்லாம். இதுநாள் வரை யாருமில்லாமல், அவர் தன்னந்தனியாக வெளியே சென்றதில்லை. அப்பாவுக்கும், எங்களுக்கும், மற்றவர்களுக்கும் அவர் நேரம் ஒதுக்கிப் பார்த்திருக்கிறேனே தவிர, தனக்கென்று எதுவுமே செய்துகொள்ளாத மனுஷி.

பள்ளி நாட்களில் எனக்கு மஞ்சள் காமாலை வந்துவிட்டது. வாயில் வைக்க முடியாத கசப்போடு ஒரு கஷாயம். "குடிக்க முடியலைம்மா விட்டுடும்மா!" என்று பற்களை இறுக கடித்துக் கொண்டேன். பளீரென்று முதுகில் ஓர் அடி! கடகடவென்று கஷாயம் உள்ளே இறங்கியது. அம்மாவா அடித்தது!? அதிர்ச்சியும் ஆச்சர்யமுமாக அம்மாவைப் பார்க்கிறேன். அவரது கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர். மருந்தைக்

• அம்மா





# யா இந்த சூர்யா?

குடிக்க வைப்பதற்காக என்னை அடித்து விட்டு, "எம்புள்ளையே இப்படி அடிச்சுட்டேனே" என்று அணைத்துக் கொண்டு அழுத அம்மாவுக்கு, தலைவலி, ஜுரம் என்று நான் பார்த்ததே இல்லை. உடல் நிலை சரியில்லை என்று பிள்ளைகளுக்குத் தெரிந்தால், எங்கே அவர்கள் முகம் வாடி விடுமோ என்று மறைத்துவிடும் தீவிர சென்சிட்டிவ் மனசு. சின்னதாக ஜோக் அடித்தால் விழுந்து விழுந்து சிரிப்பார். மற்றொரு பக்கம் சட்டென்று ஹர்ட் ஆகிவிடும் குழந்தை மனோபாவம்.

அப்பாவுக்குத் தெரியாமல் வீட்டுப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு, கேட்காமலேயே கல்வி உதவி செய்யும்போது அம்மாவின் பிரகாசமான முகத்தில் மேலும் கொஞ்சம் வெளிச்சம் கூடும். வலக்கை கொடுப்பது, இடது கைக்குத் தெரியாமல், முடிந்தவரை அடுத்தவர்களுக்கு உதவி செய்து கொண்டிருந்தால் அழகாக இருக்கலாம் என்பதற்கு, என் கண் முன்னால் முன்மாதிரியாக நிற்கும் அம்மா, ப்யூட்டி பார்லருக்குப் போனதில்லை. அம்மாவுக்குக் கைகளில் கொஞ்சம் முடியிருக்கும். அது அழகாகவும் இருக்கும். தங்கையின் வற்புறுத்தலுக்காக வீட்டுக்கு வரவழைக்கப்பட்ட ப்யூட்டிஷியனிடம் கை முடிகளை ஒருமுறை இழந்துவிட்டு "இது என்னடி அசிங்கம்" என்று கொதித்த அம்மாவுக்கு, இயல்பாக இருப்பதில் அப்படியொரு விருப்பம்.

**நா**ன் எங்கே இருந்தாலும் மதியம் இரண்டு மணிக்கு ஒருமுறை, இரவு எட்டு மணிக்கு ஒருமுறை "சரவணா, சாப்பிட்டியாப்பா?" என்று அம்மாவிடமிருந்து

போன்கால் வரும். கல்லூரி நாட்களில் நண்பர்களோடு சுற்றித் திரிந்துவிட்டு இரவு பதினொரு மணிக்கு வீடு வந்து சேர்ந்தால், எல்லோரும் தூங்கி விட்டிருப் பார்கள். அம்மா மட்டும் சாப்பிடாமல் காத்துக் கொண்டிருப்பார். தம்பி இப் போதும் கேட்பான். "அவன் சாப்பிட வேன்னா, உனக்குச் சோறு இறங்காது! அவன் சிரிச்சா நீ சிரிப்பே! தங்கச்சி அப்பா பொண்ணு! சரவணன் உம் பிள்ளை! அப்புறம் நான் யாரு நடு வாலே?" நிஜம்தான். தலைப்பிள்ளை என்கிற சலுகை எனக்கு அம்மாவிட மிருந்து கிடைக்காமல் இல்லை. இருந்தும் பள்ளிப் பருவம் வரை வெளியே சொல்ல முடியாத பயங்களும், அடிக்கடி அழ வைக்கிற கழிவிரக்கமும் ஏன் என்னை ஆக்கிரமித்துக் கொண்டன? அம்மாவிடம் கேட்டபோது மனம் திறந்து கொட்ட ஆரம்பித்தார்:

"எங்கள் கிராமத்திலிருந்து கோவை நகருக்குப் போய், அவினாசிலிங்கம் ஹோம் சயின்ஸ் கல்லூரியில் பி.ஏ படித்துக் கொண்டிருந்தேன். உனது தாத்தா ஊர்க் கவுண்டர். கிராமத்து நாட் டாமை. ரொம்பப் பிடிவாதமான ஆள். வீட்டுக்கு வாங்கி வரும் பத்திரிகைகளில் சாண்டியல்யனின் கதை வந்திருந்தால், அந்தப் பக்கங்களைப் பிய்த்துபோட்டு விட்டுத்தான் எங்களிடம் தருவார். சினிமா தியேட்டரில் போய் படம் பார்க்க வேண்டும் என்றால், அவர் போய் முதலில் பார்த்துவிட்டு நல்ல படமென் றால் மட்டுமே எங்களை அழைத்துப் போவார். அத்தனை கண்டிப்பானவர். தேவையான அளவு சுதந்திரம் தருவார். ஆனால் அவர் பேச்சைத் தட்டக் கூடாது.

ஒருநாள் கல்லூரி முடிந்து வீட்டுக்கு வந்தவுடனேயே ஒரு போட்டோவை என்னிடம் காட்டினார்கள். போட் டோவில் கறுப்பு கோட் சூட்டில், கழுத் தில் வெள்ளை நிற 'போ டை' அணிந்து உனது அப்பா. 'இவர்தான் மாப்பிள்ளை' என்றார்கள். மனத்தில் ஒட்டவே இல்லை. போதாக்குறைக்கு பிரபல நடிகர் என்றார்கள். நான் அவர் நடித்த ஒரு படத் தைக்கூட அப்போது பார்த்திருக்க வில்லை. நேரிலாவது பார்த்துவிடலாம் என்று காத்திருந்தேன். ஆனால் அவர் வர வேயில்லை. பெண் பார்த்துவிட்டுப் போன பிறகு, ஜாதகம் பொருந்தவில்லை, நடிகர் மாப்பிள்ளை வேண்டாம் என்று சொல்லிவிட்டால், பெண் மனத்தில் தேவையற்ற தாக்கம் ஏற்பட்டு விடும் என்று விளக்கம் சொல்லி, நெருங்கிய நண்பர்களை அனுப்பி வைத்திருந்தார். எனக்குப் பகீர் என்று இருந்தது. நான்கு நாள் கழித்து சாப்பிடும் வாழைப்பழத்தை வாங்கும்போதே நன்றாக அழுத்திப் பார்த்து வாங்குகிறார் கள். வாழ்நாள் முழுக்க கூட வரப்போகும் பெண்ணை நேரில் பார்த்து முடிவு செய்யாத, இந்த ஆளுக்கு - பெண்களைப் பற்றி மனசுக்குள் என்ன மரியாதை இருக்கும்? பெண்கள் என்ன சேலபின் கமோடிட்டியா? என்று உன்னைப் போலவே வெளியே சொல்ல முடியாத வருத்தம் உறுத்தியது.

நிச்சயதார்த்தம் அன்று உனது அப்பாவைப் பார்த்தேன். அதன் பிறகு திருமணத்தில்தான் சந்தித் தேன். கிராமத்தில் திருமணம். மறுநாளே படப்பிடிப்புக்குப் போய் விட்டார். ஒருவாரம் கழித்து சென்னையில் திருமண வரவேற்பு. அன்றும் படப்பிடிப்புக்குப்



• எனது முதல் பிறந்த நாளில் தாத்தாவின் கைகளில் நான், அருகே அம்மா...

போய்விட்டு சரியான நேரத்துக்கு வந்தார். ஆறு மணிக்குத் தொடங்கிய வரவேற்பு இரவு ஒன்பது மணி வரை நீண்டது. எம்.ஜி.ஆர், சிவாஜி தொடங்கி, திரையுலகம் மொத்தமும் திரண்டு வந்துவிட்டது. பதினைந்து இருபது கேமராக்கள் இடைவிடாமல் பளிச்! பளிச்சென்று இயங்கிக் கொண்டிருந்தன. கண்களும், தொண்டையும் உலர்ந்து போய், என் இயல்புக்கு பொருந்தாத புதிய சூழலில் எந்திரம் போல கால் கடுக்க நின்று கொண்டிருந்தேன். வரவேற்பு முடிந்து வீட்டுக்கு வந்தால், ஒரு அறை முழுவதும் மலை போல வெள்ளிப் பரிசுப் பொருள்கள் குவிந்து கிடந்தன.

இவர் ஏதோ அவசரப்பட்டு நம்மைத் திருமணம் செய்துவிட்டார் போலிருக்கிறதே என்ற எண்ணம், என்னைப் பற்றிக் கொண்டது.

ரிசப்ஷன் முடிந்த மறுநாளே படப்பிடிப்புக்குக் கிளம்பியவர், 'எட்டு வருடங்களாக, முப்பத்தெட்டு படங்களில் கோ-ஸ்டாராக நடித்துவிட்டேன். இனி ஹீரோவாக ஜெயிக்க வேண்டிய நிர்ப்பந்தம். என் நிலைமையைப் புரிந்துகொள்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அன்று முதல் போர்க்களத்துக்குப் போகிற மாதிரி படப்பிடிப்புக்குப் போய்விட்டு, மதியம் வீட்டுக்கு வராமல், நாடகத்தில் நடிக்க அப்படியே அரங்கத்துக்குப் போய் விடுவார். அவரது அம்மாவிடம் பேசவே அவருக்கு நேரமில்லாதபோது, நான் எம்மாத்திரம்? ஒட்டுதல் இல்லாமல் தொடங்கிய மணவாழ்க்கையில் எனக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது மாமியாரும், உனது அத்தை மகள் ஜானகியும்தான். புதிய இடம், புதிய சூழலில் எனக்கு ஃபோன்கால்களைக்கூட அட்டெண்ட் பண்ணத் தெரியவில்லை. ஜானகிதான் கற்றுத் தருவாள். 'அத்தை! அத்தை!' என்று அன்பைக் கொட்டும் அவள் சமைத்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று சேலையில் தீ பற்றிக்கொண்டது. என் கண் முன்னே திகுதிகுவென்று எரிய ஆரம்பித்த அவள் மீது அவசர அவசரமாக போர்வையைச் சுற்றினேன். என் கைகளிலும் தீக்காயம். ஜானகியை மருத்துவமனைக்குத் தூக்கிக் கொண்டு ஓடினோம். உடல் முழுவதும் வெந்து



• ... நான் சிரிப்பேன்!



• அம்மா சிரிச்சா...

விட்டது. டாக்டர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள். ஜானகியும் போராடிக் கொண்டிருந்தாள்... மகள் வயிற்றுப் பேத்தி மீது உயிரை வைத்திருந்த உன் பாட்டிக்கும் உடல்நிலை சீரியஸ் ஆகி, வேறொரு மருத்துவமனையில் சேர்த்துவிட.... எனக்குச் சாப்பாடு இறங்கவில்லை... கண்ணீரும் கலவரமுமாக அந்த இரண்டு நாட்கள் வெந்து கொண்டிருந்தேன்... அப்போது நீ வயிற்றில் ஆறுமாதக் கருவாக சலனமற்று இருந்தாய்..."

**தொ**டர்ந்து பேச முடியாமல் அம்மாவுக்கு மூச்சு முட்டிக்கொண்டு கண்ணீர் அருவியாகக் கொட்டியது... அம்மாவின் கைகளை ஆதரவாகப் பிடித்துக் கொண்டேன். ஜானகி அக்கா பிழைத்து வந்தார்களா? அம்மா சகஜமாகும் வரை காத்திருந்தேன்.

(டைரியைத் தொடர்வேன்)

படம்: ஸ்ரீஹரி

# "காதலால் ஜெயிக்கிறேன்!"

தமிழகத்தின் மிகச்சிறந்த அத்லெட்களில் ஒருவர் ரோஸ்லின் ஆரோக்கியசாமி. சமீபத்தில் டெல்லியில் நடந்த தேசிய அளவிலான ஃபெடரேஷன் போட்டியில், 400மீ தடை ஓட்டப்பந்தயத்தில் முதலிடம் பிடித்த இந்தத் தங்க மங்கை தமது எண்ணங்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.



**அறிமுகம்:**

சொந்த ஊர் திருநெல்வேலி. பிறந்தது சென்னையில். எஸ்.ஐ.ஈ.டி.யில் பி.ஏ. எக்கனாமிக்ஸ் படிப்பு. தற்போது தெற்கு ரயில்வேயில் டி.சி.ஆர். 400மீ. தடை ஓட்டப்பந்தயத்தில் சர்வதேச மெடல்களுக்கு குறி வைக்கும் கனவுப் பெண்.

**ஆரம்பம்:**

எட்டாவது படிக்கும்போது அத்லெடிக்கில் நுழைந்தேன். எங்களுடையது மிகவும் ஏழ்மையான குடும்பம். பிள்ளைகள் சாப்பிட்ட திருப்தியில், வயிறும் மனதும் நிறைவார்கள் என் பெற்றோர். இந்நிலையில் 'செயிண்ட் ஜோசப்ஸ் ப்ரைம் ஸ்போர்ட்ஸ் அகாடமி' செய்த உதவிகளை மறக்க முடியாது.

**சாதனை:**

ஜூனியர் U-22 400 மீ தடை ஓட்டப் பந்தயத்தில் என் நேஷனல் ரெக்கார்டுகளை, இன்றுவரை யாராலும் முறியடிக்க முடியவில்லை. 2003ம் வருடம் கலந்துகொண்ட அத்தனை சீனியர் தேசிய அளவிலான போட்டிகளிலும் தங்க வேட்டை நடத்தினேன். இதன் சீக்ரெட்டை இறுதியில் சொல்கிறேன்.

**வேதனை:**

பெங்களூரில் நடந்த ஏப்ரோ-ஏஷியன் கேம்ஸிற்கான தகுதிப் போட்டியில் சர்வசாதாரணமாக ஓடி, இறுதியில் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. அடுத்து காலில் தசை பிசகியதால், தெற்காசியப் போட்டிக்கான தகுதிப் போட்டியிலும் கலந்துகொள்ள முடியவில்லை. இந்த இரண்டு சர்வதேசப் போட்டிகளுக்கான வாய்ப்பை இழந்தது ஜீரணிக்கவே முடியாதது.

**காதல்:**

நான் கடினமான பெண். ஆனால் என்னையும் காதல் தாக்கியது. நான் பயிற்சி செய்யும் மைதானத்தில் என்னவர் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தார். 'காதலா, நீ இனி காலி' என்று சொன்னவர்களின் வாயடைக்க, சிரத்தையுடன் உழைத்து 2003ம் வருடம் தங்கங்களாக வாங்கிக் குவித்தேன். காதல் தந்த தெம்பில்தான் நான் திருமணமான பின்பும் தொடர்ந்து ஓடுகிறேன்; தங்கம் வெல்கிறேன்.

- செந்தில்

படம் : ஸ்ரீஹரி





# செல்போன் வைத்திருக்கிறீர்களா? எச்சரிக்கை!


தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் மோகன், வேலைக்கு தினமும் அரசுப் பேருந்தில்தான் சென்று வருவார். அன்றைக்கும் வழக்கம்போல் பணிக்குக் கிளம்பியவர், கூட்டம் பிதுங்கி வழிந்து வந்து நின்ற பஸ்ஸில் எப்படியோ தாவி ஏறிவிட்டார். அடித்துப் பிடித்து உள்ளே சென்றவர்... சில நிமிடங்களிலேயே களைத்துப் போய்விட்டார். மெல்ல தம்மை ஆசுவாசப் படுத்திக் கொண்டு டிக்கெட் எடுக்க சில்லறைக்காக சட்டைப் பாக்கெட்டில் கைவிட, பகீரென்றது. ஆம்... பாக்கெட்டிலிருந்த செல்போனைக் காணவில்லை. பதறியடித்து சுற்றும் முற்றும் தேட, ம்ஹூம்... எங்கும் காணவில்லை. சுற்றி நின்றவர்கள் இவரைப் பார்த்து 'என்ன என்ன' என்று விசாரிக்க, ஐந்தாயிரம் விலையில் ஒரு மாதம் முன்பு தான் வாங்கின செல்போன் திருடுபோன அதிர்ச்சியில், பேச வார்த்தையற்று தலையில் கைவைத்து அமர்ந்து விட்டார். அப்புறம் போலீஸ் ஸ்டேஷனில் வண்டி நிறுத்தப்பட்டது. காவலர்கள் வந்து எல்லா பயணிகளையும் சோதித்தார்கள். மோகனின் செல்போன் கடைசிவரை கிடைக்கவே இல்லை.

"செல்போன் திருட்டுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. திருடர்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு வகையான திருட்டுகளில் ஈடுபடுகின்றனர். முன்பு சைக்கிள் திருடியவன், பின்னர் மோட்டார் சைக்கிள் திருடி, தற்போது கார் திருடனாகிவிட்டான். அதே போன்று பிக்பாக்கெட் அடித்து வந்தவன் தற்போது இந்த செல்போன் திருட்டில் ஈடுபடத் துவங்கி விட்டான்'' என்று பகிர்ந்த தகவல்களை நம்மிடம் கொட்டினார் சென்னை மாநகர இணை ஆணையர் (வடக்கு)

• சைலேந்திரபாபு



**“செல்போன் திருட்டில் அதிகம் ஈடுபடுவது பெண்களும் சிறுவர்களும்தான்!”**



சைலேந்திரபாபு.


“செல்போன்களின் விலை தற்பொழுது ஆயிரம் ரூபாயிலிருந்து ஐம்பது ஆயிரம், ஒரு லட்சம் வரை இருக்கிறது. இரண்டாவது அந்த செல்போனில் பதிய வைக்கப்பட்டுள்ள தனிப்பட்ட மற்றும் அலுவலகம் தொடர்பான (personal and official) தகவல்கள். இன்னும் பலபேர் தங்களுடைய அடுத்த கட்ட நடவடிக்கையையே செல்போனில்தான் பதிய வைத்துள்ளனர். உதாரணமாக Reminders. அப்படிப்பட்ட செல்போன் திருடப்படும்பொழுது, சம்பந்தப்பட்டவரின் சப்தநாடியும் அடங்கிவிடுகின்றன.

செல்போனை சட்டைப் பாக்கெட்டில் வைக்கும்போது Tag எதுவும் போடாமல் வெறுமனே வைத்து விடுகிறோம். இது திருடர்களுக்கு மிகவும் வசதியாகப் போய்விடுகிறது. உங்களையே நோட்டமிட்டுக் கொண்டிருக்கும் அந்த நபர், நீங்கள் கூட்ட நெரிசலில் சிக்கும் சமயம் பார்த்து தனது கைவரிசையைக் காட்டிவிட்டு பறந்து விடுகிறார். அடுத்து ரயில்வே, பேங்க் கவுண்ட்டர்களில் நின்று கொண்டு formஐ நிரப்புவோம். அப்பொழுது கையில் இருக்கும் செல்போனை அருகில் வைத்துவிட்டு, ஃபார்மை நிரப்புவதில் கவனம் செலுத்துவோம். அந்த இடைவெளியில் செல்போன் திருடப்பட்டுவிடும். அடுத்து நாம் செய்யும் மிக முக்கியத் தவறு ATM சென்டர்களில்தான் நடக்கிறது. பணம் எடுக்குமுன் நமது உடைமைகளை செல்போனுடன் சேர்த்து, அருகிலுள்ள ஸ்டாண்டில் வைத்து விடுவோம். திரும்பும்போது மறக்காமல் எடுத்துக் கொண்டால் ஆயிற்று. இல்லையென்றால் அதையே கவனித்துக் கொண்டிருக்கும் ஆசாமி, எளிதில் அதை எடுத்துச் சென்று விடுவான். அலுவலக கேன்டீனில் பேச்சு சுவாரஸ்யத்தில் செல்போனை டேபிளில் வைத்து விடுவது, பேன்டின் பின்பாக் கெட்டில் ஸ்டைலாக வைப்பது, இடுப்பு பெல்டில் உள்ள பவுச்சில் வைப்பது என்று எதை செய்யக் கூடாதோ, அதையெல்லாம் நாம் அன்றாட வாழ்வில் செய்கிறோம். இதையெல்லாம் தவிர்க்கும் பட்சத்தில் செல்போன் திருட்டை தவிர்க்க இயலும்” என்று கூறும் சைலேந்திரபாபு, செல்போன் திருடர்களை அடையாளம் கண்டுகொள்ளும் வழிமுறைகளையும் கூறத் தவறவில்லை.

“நம்மையே யாராவது உற்று கவனித்தால் உஷாராகிவிட வேண்டும். பேருந்தில் உரசி, ஒட்டி யாராவது நின்றாலோ, கூட்டத்தில் நம்மீது சாய்ந்தாலோ இன்னும் கவனம் தேவை. இந்த விஷயத்தில நம் பக்கத்தில் நிற்பது சிறுவன்தானே என்றோ, பெண்தானே என்றோ அலட்சியம் காட்டினால் அவ்வளவுதான்.

சொன்னால் அதிர்ச்சியாக இருக்கும், செல்போன் திருட்டில் அதிகம் ஈடுபடுபவர்கள், பெண்களும், சிறுவர்களும்தான். அண்மையில் தேவி என்கிற பிரபல செல்போன் களவாடும் பெண்ணை கையும் களவுமாகப் பிடித்தோம். இவன் சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் தனது ஸ்கைவரிசையை

• பார்த்தசாரதி




தொடர்ந்து காட்டி வந்தவள். சமீபத்தில் சிக்கிய இன்னொரு பையன் பார்த்த சாரதி. இவன் பேருந்தில் செல்போன் திருடி வந்தவன். இது போன்ற ஆசாமிகள் ஏகப்பட்ட பேர் உள்ளனர். தாங்கள் திருடிய செல்போனின் விலை மதிப்பு கூட இவர்களுக்குத் தெரியாது. மொத்தமாக எல்லாவற்றையும் ஒரு வியாபாரியிடம் கொடுத்துவிட்டு, ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தை மட்டும் வாங்கிக் கொள்கின்றனர். இதை வாங்கும் மொத்த வியாபாரிகள்தான் அதை விற்று லாபம் கொழிக்கிறார்கள்'' என்றவரிடம், ''ஒரு செல்போன் அடையாறில் திருடப்பட்டிருக்கிறது. ஆனால் தேனாம்பேட்டையில்தான் அது தெரிய வருகிறது. இந்நிலையில் எந்தக் காவல் நிலையத்தில்... எப்படி புகார் அளிப்பது?'' என்றதற்கு,

''உண்மையிலேயே இது நடைமுறைச் சிக்கலுள்ள பிரச்னை. ஆகவே காவல் துறை இதை உணர்ந்து செல்போன் திருட்டை எந்தக் காவல் நிலையத்திலும் புகார் செய்ய வழிவகை செய்துள்ளது. புகார் கொடுக்கும் போது, நமது பெயர், முகவரி, செல்போன் நம்பர் ஆகியவற்றுடன் இன்ஸ்ட்ருமென்ட் நம்பரையும் தர வேண்டும். இந்த இன்ஸ்ட்ருமென்ட் நம்பரைப் பெறுவதற்கு நமது செல்போனில் *#06# என்று டயல் செய்தால், உடனடியாக அந்த நம்பர் கிடைத்துவிடும். ஆனால் இந்த நம்பரை முன்னரே நாம் எடுத்து குறித்து வைத்திருக்க வேண்டும். இதன் மூலம் காவல் துறை எளிதில் அந்த செல்போனை மீட்டுத் தரும் முயற்சியில் ஈடுபடும்.

திருடபபட்ட செல்போன் ஆபாசப் படம் எடுத்து அனுப்புவது, பிளாக் மெயில் செய்வது போன்ற தவறுகளுக்கு உட்படுத்தப்படும் போது, சைபர் கிரைம் செல் உதவியுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார் சைலேந்திர பாபு.

• தேவி



• கலை



'எதற்காக அழகேசன் போய் நான் வாழ வேண்டும்' என்று துவங்கிய துக்கம் மெல்ல மெல்ல கண்ணீரிலும் கவனக் கலைப்பிலும் குறைந்து, மஞ்சரிக்கு உள்ளுணர்வில் ஏதோ முற்றுப் பெறாத காரியத்தை அழகேசன் தன்னிடம் ஒப்படைத்திருக்கிறான் என்று உணர்ந்தாள். மேலும் அந்தத் தாய் தன் மகன் மரணத்தை எடுத்துக் கொண்ட மனநிலை அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. "நீ எதுக்கு புள்ள சாவணும்... என் மகன் கனவில வந்து சொன்னான். அந்தப் பொண்ணு எதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு செய்துரப் போவுது. ஆறுதல் சொல்லு. இங்க எல்லாம் பத்திரமாத்தான் இருக்கேன்."

அவளிடம் சாக்ரடீஸ் சார்ட்டர் புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்த நண்பனைப் பார்க்க விரும்பினாள். கார்டோ, போன் நம்பரோ எதுவும் இல்லை.

மஞ்சரியை அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்வதாகத்தான் அவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். விசாவுக்கு மனுப் போட்டு, இன்டர்வ்யூ பிப்ரவரியில் வரும் என்றார்கள். மஞ்சரி வீட்டை விட்டு எங்கும் செல்லாமல் அழகேசன் தந்த அந்தப் புத்தகத்தில் ப்ளேட்டோவைப் பற்றிய அத்தியாயத்திலேயே தயங்கியிருந்தாள். முதல் பக்கத்தில் அழகேசனின் கையெழுத்தைத் திரும்பத் திரும்ப தொட்டுப் பார்த்தாள்.

பரமேஸ்வரனைப் பார்க்க ஆபீசுக்குச் சென்றபோது அவர் அறையில் சாவ்லா என்று வேறு ஒருவர் உட்கார்ந்திருந்தார்.

"பரமேஸ்வரன் எங்கே?"

"தெரியாது. ராஜினாமா செய்து விட்டதாகச் சொன்னார்கள். எனக்குத் தலைகால் புரியவில்லை... இந்த ஆபீஸ் ஒழுங்குமுறைகளே புரியவில்லை..."

மஞ்சரி டிரைவரிடம், "பரமேஸ்வரன் ஸார் வீடு தெரியுமில்ல...?"

அவன் "தெரியாதுங்க" என்றான்.

"ஏன்யா, ஒரு தடவை நீயே கூட்டிட்டுப் போயிருக்கே. எதுக்கு பொய் சொல்றே?"

"மன்னிச்சுக்கங்கம்மா. நாகரத்தினம் ஐயா வந்து அங்கெல்லாம் கேட்டா கூட்டிட்டுப் போகாதேன்னாரு..."

"நான் அவர்கிட்ட பேசிக்கறேன். நீ அங்க போ."

இந்திரா நகரில் ஒரு நான்கு மாடிக் கட்டடத்தின் மூன்றாவது மாடியில் அந்த ஃப்ளாட்டின் மணியை அழுத்தியபோது நாய் குரைத்தது.

# உள்ளம்

"யாரு?"

"மஞ்சரி மாமா."

பரமேஸ்வரன், "ரூபி, கொய்ட்" என்று அதட்டிக் கொண்டே திறந்தார். அவசரமாகச் சட்டை அணிந்திருந்தது பட்டன் தாறுமாறில் தெரிந்தது. பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தார்.

"மாமா, நீங்க வேலையை விட்டுட்டீங்களா?"

"ஆமாம்மா! நாகரத்தினம், முதலாளி இல்லாதபோது எனக்கு மேல சாவ்லான்னு ஒருத்தரைக் கொண்டு வந்தார். முதலாளியோ ஆபரேஷன் அவஸ்தையில் இருந்தார். ராஜினாமா கடிதத்தைக் கொடுத்துட்டேன்.... இந்த ஃப்ளாட்கூட இந்த மாசம்தான்..."

ஹாலில் பெரிதுபடுத்தி மாட்டியிருந்த இளம் பெண்ணின் ஃபோட்டோவைக் காட்டி, "இன்னிக்கிருந்தா உன் வயசு" என்றார்.

"மாமா, எனக்கு சில சமயம் எதுக்கு இருக்கணும்னு தோணுது. அழகேசன் மாதிரி அற்புதமான



# துறந்தவன்

ஆசாமியை நீங்க பாத்திருக்க மாட்டீங்க. அவன் போய் ஒரு சாலை விபத்துல சாவ றதுங்கறது அபத்தம்! எனக்கு எல்லா நம்பிக்கையும் போயிருச்சு. கடவுள்னு யாரும் இல்லை."

"இதே மாதிரிதான் எனக்கும் என் பொண்ணு போனப்ப தோணுச்சு மஞ்சு!"

பரமேஸ்வரனின் மனைவி மௌன மாக காபி கொண்டு வந்து வைத்தாள். "எப்படி இருக்கே மஞ்சு? அப்பாவுக்குச் சரியாய்டுத்தாமே!"

"மாமா நீங்க ரெசிக்னேஷன் லெட்டர் கொடுத்துட்டீங்களா?"

"ஆமாம்! வர போர்டு மீட்டிங்ல அதை எடுத்துப்பாங்க... பார்கவாவுக்குச் சந்தோஷம்."

"எனக்காக அதை வாபஸ் வாங்கிக் கங்க மாமா!"

"இல்லைம்மா, உனக்கு வேற எந்த உதவி கேட்டாலும் தரேன்... அந்த ஆபீஸில இனி வேலை செய்ய முடியாது... ஆபீஸ் மேட்டர் எல்லாம் நாக ரத்தினமும் பார்கவாவும்தான் பாத் துக்கறாங்க. எல்லாரையும் மாற்றிப் போட் டுருவாங்க. இப்பவே போர்டு மெம் பர்களை மாத்தறதா பேச்சு..."

"மாமா! உங்ககிட்ட ஒரு விஷயம் கேக்கத்தான் வந்தேன். எங்க எல்லாரையும் டிடெக்டிவ் ஏஜென்சி வச்சு கண்காணிச் சீங்கள்ல?"

"கடமையைச் செய்தேன்மா..."

"அழகேசனையும் என்னையும் பத்தின ரிப்போர்ட் முழுக்க வேணும்."

"எல்லாம் ஆபீஸ்ல இருக்கு.. இந்நேரத் துக்கு டெஸ்ட்ராய் பண்ணிருப்பாங்க."

"எனக்கு வேணுமே... அந்தக் கடைசி நாள் என்ன நடந்தது? ஏன் செத்தான்?"

"ஒண்ணு செய். அந்த ஏஜென்சியில ஒரு துடியான பையன் இருந்தான். அவன் செல் நம்பர் தரேன். அவனை சந்திச்சுப் பாரு. கடைசி வரைக்கும் அவன்தான்

24

சுஜாதா

ரிப்போர்ட் ஃபைல் பண்ணியிருந்தான்."

மஞ்சரி வீட்டுக்குப் போனபோது நாக ரத்தினம், "ஐயரைப் போய் பாத்தியாமே!" என்றார்.

"ஆமாம் மாமா."

"எதுக்கு?"

"சும்மாத்தான். வீட்லயே உக்காந்து மருகிக்கிட்டு இருக்க விருப்பமில்லை."

"ஐயர் ரிசைன் பண்ணிட்டார்."

"தெரியும்."

"காரணம் தெரியுமா?"

"தேவையில்லை."

"தெரிஞ்சுக்க. அடுத்த தடவை போய் பார்க்க மாட்டே."

நிமிர்ந்து பார்த்தாள்.

"ஐயர் ஆபீஸ் பணம் எழுபது லட்ச ரூபாயை தன் அக்கவுண்டுக்கு ட்ரான்ஸ்பர் செய்திருந்தார். அதைக் கண்டுபிடிச்சுட்டோம். பெரியவருக்குச் சொன்னா அவர் இருக்கற உடல்நிலையில உயிரை விட்டுருவார். அவ்வளவு தூரம் நம்பினார்."

மஞ்சரி "மாமா! நான் இதை நம்பலை. அவர் வீட்டைப் பார்த்தா நடுத்தர வர்க்கம்தான் தெரியுது."

"நான் அத்தாட்சி காட்டட்டுமா?"

"வேண்டாம், தேவையில்லை."

"உன் ஷேர்களை என்ன செய்யறதா உத்தேசம்."

"என்னை யோசிக்க விடுங்க."

"அதைப் பத்தி ஐயர்கிட்ட பேசலியே?"

"இல்லை."

"எப்படி பேசுவான். எந்த மூஞ்சிய வச்சுக்கிட்டு."

"மாமா நீங்க என்ன சொன்னாலும் நான் ஐயரை வெறுக்க மாட்டேன்."

டாக்டர் பாலா, ராகவேந்தரின் படுக்கை அருகில் உட்கார்ந்து அவர் கையைப் பிடித்துக் கொண்டார்.

"மாமா, உங்களுக்குச் சரியாயிடுச்சு. ஆபரேஷன் முடிந்து பத்தாவது தினம் இம்யூனோ சப்ரஸண்ட்ஸ் அதிகம் கொடுக்கறதால இன்ஃபெக்ஷன் வராம பார்த்துக்கணும். நர்ஸுங்க பாத்துப்பாங்க. வெளி ஆளுங்களை சந்திக்காதீங்க. ஆறுமாசம் ஜாக்கிரதையா இருந்தா அப்புறம் பத்து வருஷம் உங்களுக்கு கியாரண்டி."

"மஞ்சுவை வரச் சொல்லுங்க."

"இதோ இருக்கேன் அண்யா."

"உனக்குத்தான் வருத்தம்மா."

"வருத்தம், சந்தோஷம் ரெண்டுமே. வருத்தத்தைத் தூக்கிப் போட்டுட்டு சந்தோஷத்தை மட்டும் பத்திரமா வச்சுக்கறேன்..."

"அந்தப் பையன் ஞாபகார்த்தமா..."

"எல்லா ஏற்பாடும் நாகரத்தினம் செய்யறார் மாமா."

மஞ்சரி, "அவர் வேண்டாம். நானே செய்யறேன் அண்யா" என்றாள்.

"யாராவது. செய்தா சரி..."

"பரமேஸ்வரன் ஏன் என்னைப் பார்க்கவே வரலை."

"அவர் லீவுல போயிருக்கார்னு சொன்னாங்க. நாகு வந்ததும் கேட்டுருங்க."

மஞ்சரி பரமேஸ்வரன் கொடுத்த அந்த செல் நம்பரை கூப்பிட்டாள்.


"மிஸ் மஞ்சரி, நீங்க கூப்பிடுவீங்கன்னு எதிர்பார்க்கலை. புஸ்தகம் எப்படி இருந்திச்சு."

"என்ன புஸ்தகம்?"

"சாக்ரடீஸிலிருந்து சார்ட்டர்

## வருத்தம்!

மாநாடுகளிலும், பொதுக் கூட்டங்களிலும் எவ்வளவுதான் ஆவேசமாகப் பேசினாலும் ஸ்டாலினின் பேச்சில் அழுத்தமான வாதங்களும், புள்ளி விவரங்களும் இல்லையென்று வருந்துகிறார்கள் கழக முன்னணியினர். இதை சரிக்கட்டும் விதமாக, தற்போது மேடையில் பேசுவதற்கு முன் நீண்ட நேரம் குறிப்பெடுக்கும் பணியில் ஈடுபடுகிறார் ஸ்டாலின்.



வரை."

"கொண்டு வந்தது நீங்களா?"

"ஆமாம்."

"நண்பர்னீங்க."

"நேரா வாங்க சொல்றேன். கார்ல வராதீங்க. யார்கிட்டயும் சொல்லாம, தெரியாம வாங்க. ஒரு பத்திரத்துக்குத் தான். பஸ்ல வாங்க."

"எங்க வரணும்?"

"மியூசிக் அகாடமி பாலத்துகிட்ட சாப்பர் போல்னு ஒரு ரெஸ்டாரண்ட்... அங்க வாங்க."

"யாராவது ஃபாலோ பண்ணுவாங்களா?"

"அந்த பயம் இல்லை. இதுவரை ஃபாலோ பண்ணுனது நான்தானே!"

மேம்பாலத்தில் கார்கள் விரைந்து கொண்டிருக்க, பக்கவாட்டு குறுகிய பாதையில் ஒளிந்து கொண்டிருந்தது அந்த ரெஸ்டாரண்ட். பின்பக்கம் படியேறிச் செல்ல வேண்டியிருந்தது. மத்யான வேளை. ஏறக்குறைய காலியாக இருந்தது. கோடியில் கம்மி வெளிச்சத்தில் காதலர் இருவர் கையைப் பற்றிக்கொண்டு முகத்தோடு முகம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களிடமிருந்து விலகி உட்கார்ந்தாள்.

அவன் சட்டென்று அவளருகில் வந்து உட்கார்ந்தான்.

"ஹாய் என் பேரு... ரவிப்ரகாஷ்."

"அழகேசனை எப்படித் தெரியும்?"

"டு டெல் யு தி ட்ருத். அவரை எனக்குத் தெரியாது."

"பின்ன அந்தப் புத்தகம்?"

"அவர்கிட்ட இருந்தது. கீழே விழுந்திருந்தது எடுத்துக்கிட்டேன்."

"ஆக்ஸிடெண்டுக்கு அப்புறமா?"

"ஆக்ஸிடெண்ட்டே இல்லைங்க... அழகேசன் கொல்லப்பட்டார்."

"இஸிட்! எப்படிச் சொல்றீங்க?"

"என் கண்ணால பார்த்தேன். அவனை அவங்க நிறுத்தி மண்டையில கடப்பாரை மாதிரி கனமான பொருளால அடிச்சுட்டு, அப்புறம் ட்ராஃபிக் போலீசுக்குச் சொல்லிட்டு ஆம்புலன்சை வரவழைச்சாங்க."

"இதெல்லாம் எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"நான் ட்யூட்டில இருந்தேன். ஐ.டி.ஏ.ல. எனக்கு வேலை. உங்களையும் அழகேசனையும் தினம் கண்காணிச்சு டெய்லி ரிப்போர்ட் கொடுத்து வந்தேன். நீங்க போன இடங்கள், புக் ஷாப், கொட்டிவாக்கத்துல அவங்க பைப் வீட்டுக்குப் போனது... எல்லாம் மினிட் டை மினிட் நான்தான் ஒரு ஐம்பதடி தூரத்திலிருந்து வேவு பார்த்தவன்... அதுக்காக அவமானப்படறேன்... என்னதான் கடமை, பிழைப்புக்காகன்னாலும் மனசாட்சி இந்தக் கேவலமான செயலை ஒத்துக்கலை. அதுவும் அன்னிக்கு அழகேசனுக்கு நடந்ததைப் பார்த்ததும், நமக்கும் இந்த மாதிரி 'விபத்து' நடக்க அதிக நாட்கள் ஆகாதுன்னு..." ரவிப்ரகாஷ் சட்டென்று எழுந்து "எக்ஸ்க்யூஸ்மி" என்று டாய்லெட் பக்கம் சென்றான்.

மஞ்சரி அந்த நாடகத்தைக் கவனித்தாள். நான்கு பேர் அந்த ரெஸ்டாரண்டின் உள்ளமைப்புக்கும் வாடிக்கைக்கும் சம்பந்தமில்லாத தோற்றத்தினர், மேனேஜரை முரட்டுத்தனமாக ஏதோ விசாரித்தனர். அவர் மஞ்சரி உட்கார்ந்திருந்த மேஜையைக் காட்டினார். அதன்பின் அவர்கள் பாத்ரூமை நோக்கிச் சென்றனர்.

(தொடரும்)



## புது பாணி!

தமது சமயோஜிதத்தால் டெல்லி அரசியல் தலைவர்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு பெற்றுவிட்ட தயாநிதி மாறன், தற்போது கட்சிக்காரர்களையும், பொது மக்களையும் கவர முடிவு செய்துள்ளார். இதற்காக ஏ.கே. மூர்த்தி பாணியில் சமீபத்தில் விமான நிலையத்தில் ஏற்பட்ட சிக்கலை நேரடியாகத் தலையிட்டு தீர்த்து வைத்தார். இது ஓரளவுக்கு வரவேற்பைப் பெறவே, இத்தகைய பணிகளைத் தொடர முடிவெடுத்துள்ளார்.

**கா**தலப் பத்தி நியாயமா ஒரு படம் எடுக்குற அளவுக்கு நம்மகிட்ட மேட்டர் இருக்குது. ஆனா உங்களோட நலன்(!) கருதி நாலு பக்கத்துல அதை சுருக்கி சொல்றேன்... பூமி சுத்தறதுக்கு முக்கியமான காரணம் 'ஒரு ஜீவன் அழைத்தது... ஒரு ஜீவன் துடித்தது'தான். அப்படின்னா அது காதல்தான். காதல் பத்தி ஒவ்வொருத்தர் ஒண்ணொண்ணு சொல்றாங்க. குரோமோசோம்களின் குளறுபடின்னு மரபியல் அறிஞர்கள் சொல்றாங்க. ஹார்மோன்களின் ஹார்மனின்னு டாக்டருங்க சொல்றாங்க. உடம்புக்குள்ள நடக்குற ரசாயன மாற்றம்னு வேதியியல் அறிஞர்கள் சொல்றாங்க. 'வயித்துக்குள்ள பறக்கற பட்டாம்பூச்சி'ன்னு பொட்டானிக்கல் பீப்பிள் பேசலாம். வைரமுத்து என்ன சொல்வாருன்னா 'விழியில் விழுந்து இதயம் நுழைந்து உறவில் கலந்த உறவு'ம்பார்... இல்லாட்டி 'வயிற்றுக்கும் தொண்டைக்கும் இடையில் ஒரு உருண்டை உருளுது'ம்பார். நம்ம வாசுகி ஹஸ்பெண்ட், அதாங்க திருவள்ளுவர் என்ன சொல்றாருன்னா 'நெருங்கும் போது குளுருது... விலகும்போது சுடுது. இது ஒரு வித்தியாசமான ஃபீலிங்'குங்கறார். இந்தக் காதல், பருவத்துல எல்லாருக்கும் ஒரு தடவ வந்துட்டு போயிடுது, சுனாமி மாதிரி. போனதுக்கப் புறம்தான் தெரியுது, அது எவ்வளவு பாதிப்ப ஏற்படுத்திட்டுப் போகுதுன்னு. பருவத்துல வர்ற காதல்தான் ரொம்ப அழகா இருக்கு. குட்டில கழுதைகூட ரொம்ப அழகாத்தான் இருக்கும். சாது மாதிரி இருக்கறவனை சேது மாதிரி மாத்தறதும், சேது மாதிரி இருக்கறவன சாது மாதிரி மாத்தறதும்தான் காதலோட மிகப்பெரிய சக்தி.

என்னைப் பொறுத்தவரை 'நறுமுகையே நறுமுகையே'வும் காதல்தான்... 'பஞ்சு மிட்டாய் அஞ்சு ரூபாய்... நீ பாதி தின்னு தந்ததால் லட்ச ரூபாயும்' காதல்தான். பெரிய ஜமீன்தார் பொண்ணும் காதலிக்குது... ஒயின் ஷாப் ஓனர் பொண்ணும்

# லதா, ஷ்வேதா



காதலிக்குது... கூடவே ஒரு ஒத்தக்கை சித்தப்பா பைக்ல சுத்திட்டிருக்கறதையும் நாம பார்க்கறோம். இதெல்லாம் தாண்டி நிக்கறதுதான் காதல். ஆனா காதல் எப்ப தோத்துப் போகுதுன்னா, கல்யாணத்துலதான்னு பல பேர் சொல்ல நான் கேட்டிருக்கேன். ஒருமுறை நேர்லயே பார்த்திருக்கேன்.

பத்து வருஷம் முன்னாடி ஒரு விளம்பரப் படத்துல நான் நடிச்சிட்டிருக்கும்போது, அதுல ஒரு அஸிஸ்டெண்ட் டைரக்டர் பொண்ணு. பேரு திவ்யா. ரொம்ப சுறுசுறுப்பு. பேண்ட் டீ-ஷர்ட்தான் எப்பவும் அதோட காஸ்ட்யூம். ரொம்ப மாடர்ன் கேர்ள். ஷூட்டிங் நடுவுல திடீர் திடீர்னு காணாமப்

போயிடும். எங்கேம்மா போறன்னு கேட்டா, 'போன் பண்ணப் போறேன்'னு சொல்லும். அப்பல்லாம் செல்போன்லாம் கிடையாது. 'யாருக்கு இத்தன தடவை போன் பண்ற?'ன்னு கேட்டா, 'I am in love'ன் சொல்லுச்சு. 'ஓ... சரிசரி'ன்னு நான் சைலண்ட் ஆயிட்டேன். கொஞ்ச நாள் கழிச்சு இன்னொரு ஷூட்டிங்ல அந்தப் பொண்ணை மறுபடியும் பார்த்தேன். 'எப்படி இருக்கும்மா உன் திருமண லைஃப்? குழந்தை குட்டி உண்டா'ன்னு கேட்டேன். 'ச்சே ச்சே... டைவர்ஸ் பண்ணிட்டேன்'னு கூலா சொல்லுச்சு. எனக்கு பகீர்னு ஆயிடுச்சு. 'என்னம்மா... அவ்ளோ சின்சியரா லவ் பண்ணேன்னு சொன்ன, எதுக்கு டைவர்ஸ் பண்ணே'ன்னு கேட்டேன். அதுக்கு அந்தப் பொண்ணு, "இல்லல்ல... லவ் பண்ணும்போது அவன் டீக்கா ட்ரெஸ் பண்ணிட்டு வருவான். ஸ்டைலா இருப்பான். பெர்ஃப்யூம்லாம் போட்டிருப்பான். நல்ல இனிமையான வார்த்தைகளே பேசுவான்..."

"சரி..."

# காதல் தா!



"அதுதான் அவன்னு நான் நினைச்சுட்டேன்."

"அப்புறம் என்னாச்சு?"

"ஒரு நாள் பேர் பாடியா லுங்கிய கட்டிக்கிட்டு வீட்டு நடுவுல உட்கார்ந்து பீடி குடிச்சிட்டிருந்தான். எனக்குப் பிடிக்கல."

"அதனால?"

"டைவர்ஸ் பண்ணிட்டேன்."

குறட்டை விடும்போது காதல் செத்துடுது... பேர் பாடியா உக்காந்து பீடி குடிச்சா காதல் செத்துடுது... உறுத்துதேன்னு தாலியை கழட்டி வெச்சு தூங்குனா காதல் செத்துடுது... மேக்ஸிமம் கல்யாணத்துல காதல் செத்துடுது...

**ச**ரி, என்னோட விஷயத்துக்கு வருவோம்... அம்மாவால வளர்க்கப்பட்ட பையன் நான். அப்பா வேலை நிமித்தம் பல ஊர்ல இருந்தாங்க. கோ-எஜுகேஷன் ஸ்கூல்ல படிக்கிற வாய்ப்புக் கூட எனக்கு டென்த் வரும்போதுதான் கிடைச்சது. ஸோ, பெண்களின் அண்மைங்கறது எனக்கு

10

**"லேடீஸ் காலேஜிலிருந்து பதினாறு லவ் லெட்டர் வந்தது!"**

அம்மாவைத் தவிர நிறைய கிடைக்காமப் போயிடுச்சு. இருந்தாலும் எனக்கு சில வசிகரங்கள் இருந்திருக்கு. எப்படின்னா, ராமாயண கதை சொல்லும்போது அந்த சீதா கேரக்டர் மேல ஒரு சின்ன லயிப்பு வருது. நிச்சயமா சூர்ப்பனகை மேல வந்ததுன்னு வைங்க... ஏதோ மிஸ்டேக்னு அர்த்தம். ஸ்கூல் படிச்சு முடிக்குற டைம்ல ஆர்டிஸ்ட் ஜீனத்அமன் மேல ஒரு லயிப்பு. இனம் புரியாத ஒரு ஈர்ப்பு. ஒரு பெரிய போஸ்டர் வாங்கிட்டு வந்து வீட்ல மாட்டி வச்சி, ஒரு ஸ்கேல் உடையற அளவுக்கு அடி வாங்கியிருக்கேன். அதுக்கப்புறம் 'தேசாப்' வந்தப்ப மாதுரி தீட்சித் மேல கிக் இருந்துச்சு. இது ஜனரஞ்சகமா எல்லாப் பசங்களுக்கும் ஏற்படறதுதான். ஒரு தடவை நடிகை ஸ்ரீவித்யா போட்டோவ மேத்ஸ் நோட்ல வச்சி ரசிச்சுட்டிருக்கும்போது வாத்தியார்கிட்ட மாட்டி அடி பின்னியெடுத்துட்டார். ஒரு கட்டத்துல அந்த லயிப்பு எங்க கெமிஸ்ட்ரி டீச்சர் மேல தாவிடுச்சு. அவங்க மேல இருந்த க்ரேஸ்ல, கெமிஸ்ட்ரி சப்ஜெக்டை நல்லா படிச்சு நூத்துக்கு தொண்ணூத்தொம்பது மார்க் டென்த்ல வாங்கியிருக்கேன். இந்த இனக் கவர்ச்சியையெல்லாம் இப்ப நினைச்சா பயங்கர காமெடியா இருக்கு.

நான் டி.வி.எஸ். ஸ்கூல்ல படிக்கும்போது எங்க க்ளாஸ்ல ரொம்ப அழகான பொண்ணு ஒருத்தி இருந்தா. பேரு லதா. அவள எப்படி கவர் பண்றதுன்னு எல்லாருக்கும் யோசனை. என்னால மேக்ஸிமம் முடிஞ்சது, அந்தப் பொண்ணோட ஜடையையும், பக்கத்துப் பொண்ணோட ஜடையையும் முடிச்சுப் போட்டு விட்டுடுவேன். எழுந்திருக்கும்போது இழுத்துக்கும். 'கொல்'னு ஒரு சிரிப்பு. அவகிட்ட ஃப்ரெண்ட்ஷிப் பிடிக்கத் தெரியாம, சண்டை பிடிச்சிருக்கேன். வெறுப்புக்கு ஆளாகியிருக்கேன். லெட்டர் கொடுக்கற பிசினஸ்லாம் நமக்கு சரிப்பட்டு வரல. எண்ணங்களையே வெளிப்படுத்த முடியாத போது, அது ரெக்கார்ட் ஆயிடுமோன்னு பயம். ப்ராக்ரஸ் ரிப்போர்ட்லயே நான் எங்கப்பா கையெழுத்த போட்டதில்ல. ஸோ, நான் ஒரு மாணவனுக்கே லாயக்கில்லாமத்தான் இருந்தேன்!

அப்புறம் காலேஜ் வந்தேன். கரெக்டா அப்போன்னு பார்த்து நேர்த்திக் கடன்னு சொல்லி அம்மா எனக்கு மொட்டை அடிச்சி அனுப்பிட்டாங்க. கிளாமர் அங்கியே அடி வாங்கிடுச்சு. இன்னொண்ணு ஸ்கூல் ஃபைனல் வரைக்கும் நான் பேண்ட்டே போட்டதில்ல. அமெரிக்கன் காலேஜுக்கு அட்மிஷன் கேக்க போனப்பவே டிராயர்லதான் போனேன். அங்கிருந்த பொண்ணுங்கள்லாம் என்னைப் பார்த்து சிரிச்சாங்க. சீட்டு எங்க அண்ணனுக்குன்னு நினைச்சுட்டாங்க. அப்புறம் என்க்குத்தான்னு தெரிஞ்சு பேண்ட்தான் போட்டுட்டு வரணும்னு கண்டிஷன் போட்டு சீட் கொடுத்தாங்க. பெல் பாட்டம் பேண்ட் தைச்சுப் போட்டு, மீசை அரும்பி காலேஜுக்குள்ள நுழையறப்ப, மெல்ல மறுபடியும் காதல் எட்டிப் பார்க்குது. மதுரை பசங்களுக்கு காதல் வந்தா, பின்னாடியே போவானுங்க. பேச மாட்டானுங்க. பஸ்ல ஏறிக்குவானுங்க. சிம்மக்கல்லயோ, யானைக்கல்லயோ, தவுட்டுச் சந்தைலயோ, நெல்லுப்பேட்டைலயோ எங்கயோ ஒரு இடத்துல இறங்குற அவங்க ஆளு பின்னாடியே போயி வீடு வரைக்கும் விட்டுட்டு திரும்பிடுவானுங்க. ஒரு வார்த்தை பேச மாட்டானுங்க. பேச தில்லு இருக்காது. சாலமன் பாப்பையா எனக்கு தமிழ் வாத்தியார். அடிக்கடி அவரு கிண்டலா சொல்லுவாரு, 'நம்ம பயலுவ மாதிரி பொம்பளைங்களுக்கு செக்யூரிட்டி யாரும் கிடையாதுடா'ன்னு.

இப்படி இருக்கும்போது எனக்குள்ள இசை ஆர்வத்தத் தூண்டுனது இளையராஜாங்கற ஒரு மனுஷன்தான். நான் ஹார்மோனியம் நல்லா வாசிப்

பேன். அமெரிக்கன் காலேஜ்ல கற்பக விநாயகர் கோயில்னு ஒண்ணு இருக்கு. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அங்க பாரதி மாடசாமிங்கற தமிழிசைப் புலவர் பாட்டுக்கு நான் ஹார்மோனியம் வாசிப்பேன். ஒரு நாள் பாட்டு கேட்ட கூட்டத்துல சௌராஷ்டிரா பொண்ணு ஒண்ணு நமக்கு பிக்அப் ஆயிடுச்சு. பேரு ஸ்வேதா. 'லதா தான் செட்டாகல. ஸ்வேதா நீயாவது காதல் தா'ன்னு ஏங்கினேன். தொடர்ந்து பாட்டு கேட்க வந்தா. நான் வாசிக்கறது அவளுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. ஒரு பாட்டு முடிச்சு புலவர் அடுத்த பாட்டுக்கு போறதுக்குள்ள, நான் இவளுக்காக ஒரு ட்யூன் வாசிப்பேன். அவளுக்குப் புரியும். சிரிப்பா. கூட இருக்குற தன்னோட தோழிகிட்ட எனக்காகத்தான் வாசிக்கறார்னு சொல்லி பூரிப்பா. அவ வீடு எங்க இருக்குன்னு ஒரு நாள் சைக்கிள் எடுத்துட்டு ஃபாலோ பண்ணேன். கண்டுபிடிச்சுட்டேன். வீடு வரைக்கும் போவேன், பேச முடியாம தவிப்பேன்... திரும்பிடுவேன். இதுவே தொடர்ந்தது. ஒரு நாள் டோட்டலா பவர் கட். மனசுல ஒரு ஜாலி வர, டார்ச் எடுத்துட்டு சைக்கிள்ல அவ வீட்டுக்குக் கௌம்பிட்டேன். இருட்டுல சரியா வீடு தெரியல. ஒவ்வொரு வீடா டார்ச் அடிச்சு பார்த்துட்டே வரேன்... திடீர்னு ஒரு வீட்லருந்து 'பிடிடா... பிடிடா...'ன்னு என்னை நோக்கி ஓடி வந்து அமுக்கிட்டாங்க. அப்புறம்தான் தெரியுது... நான் டார்ச் அடிச்சது போலீஸ் ஸ்டேஷன்லன்னு. அதுக்கப்புறம் அது பெரிய பிரச்னையாச்சு. அதோட அந்தக் காதலும் முடிஞ்சு போச்சு.

காலேஜ் நாட்கள்ல நிறைய நாடகங்கள் போட்டேன். பயங்கர ரெஸ்பான்ஸ். ஒரு முறை லேடீஸ் காலேஜ்லருந்து 16 லவ் லெட்டர்ஸ் வந்தது. எல்லாத்தையும் நாங்க காமெடியாத்தான் பார்ப்போம். 'பெண்ணே... நான் வாங்கிக்கொடுத்ததெல்லாம் நல்லாத்தானே தின்னே... பின்ன ஏன் பிடிக்கலன்னு சொன்னே'ங்கற ரேஞ்சிலெல்லாம் கவிதை எழுதி கலாய்ப்போம். காதல் பண்றது, பஸ் ஸ்டாப்புல நிக்கறது, பொண்ணுங்க பின்னாடி சுத்தறது எல்லாத்தையும் நையாண்டியா விமர்சனம் பண்ணிட்டிருந்தேன் நான். ஆனா காதல் பண்ணணும்ங்கற தாக்கம் மனசுக்குள்ள வந்தப்ப கொஞ்சம் லேட்டாயிடுச்சு. வாழ்க்கையை துரத்த வேண்டிய நிலைமைல இருந்தேன். அப்புறம் காலம் மாறிடுச்சு. சென்னைக்கு வந்தேன். சினிமால என்ட்ரி ஆனேன். அரேஞ்சுடு மேரேஜ் பண்ணி வச்சுட்டாங்க. குழந்தைங்க பொறந்துடுச்சு.



இன்னிக்கு என் கடந்த காலத்தை, குறிப்பாக காதல் காலத்தை நினைச்சுப் பார்த்தா, ஒரு சுகமா மனசு அதுல லயிச்சுடுது. இதைத்தான், இந்த அசைபோடலைத்தான் நான் காதலா உணர்றேன். ஆட்டோகிராஃப் படத்தோட வெற்றியே இது தானே. காதல் செஞ்சவனை விட, காதலிக்க ஆசைப்பட்டு, அதுக்கு வாய்ப்பில்லாம போனவன் காதலை அதிகமா காதலிப்பான். நான் காதலிக்கிறேன்!

சந்திப்பு : **மு. மாறன்**

படங்கள் : **ஸ்ரீஹரி**

தொடர்ந்து வாரா வாரம்தான் வில்லங்க விசிட்டு அடிக்கிறோமே... இந்த வார மாவது ஒரு ஜாலி விசிட்டு அடிக்கலாம்னு அண்ணா அறிவாலயம் பக்கம் போனா, சும்மா ஜெகஜ்ஜோதியா இருந் துச்சுப்பா... பின்ன... கலை ஞரோட பர்த்டேன்னா சும்மாவா விடுவாங்க, உடன்பிறப்புங்க... கொடி, தோரணம், கட்-அவுட்டு பேனர்னு கலக்கிட்டு இருந்தாங்க. சரி... நமக்கு ஏதாவது மேட்டர் சிக்குதா பார்ப்போம்னு கைல வச்சிருந்த 'வான் புகழ் கொண்ட வள்ளு



# வெளியேறிய ம.தி.மு.க...

வம்' புத்தகத்தை பிரிச்சி வச்சிக் கிட்டு உட்கார்ந்தோம். பின்ன... அப்பத்தானே நம்மளையும் உடன் பிறப்புன்னு நினைச்சி கண்டுக்காம இருப்பாங்க. அதனால பல மேட் டருங்க தானா வந்து நம்ம காதுல விழுந்துச்சு. அதையெல்லாம் ஒவ்வொண்ணா எடுத்துவிடறேன், கேட்டுக்குங்க...

—கலைஞருக்கு பொறந்த நாள் வாழ்த்து சொல்றதுக்காக ஏகப் பட்ட உடன்பிறப்புங்க வந்திருந் ததால, அறிவாலயமே மூச்சுத் திணறிக்கிட்டு இருந்துச்சு. கூட்டத்தைச் சரிப்படுத்துற வேலையில தளபதியே இறங்கினாருன்னா பார்த் துக்கங்க. உ.பி.ங்க ஒவ் வொருத்தரும் வந்து சால்வை, பரிசுன்னு தந்ததை வாங் கினதுக் காக உட்கார்ந்திருந்ததுல கலைஞருக்கு ரெண்டு காலும் வீங்கிடிச்சாம். இதைப் பார்த்த தர்மபுரி தொண்டர் ஒருத்தரு வெளில வந்து சொல்ல, அதைக் கேட்ட ஊர்க்காரங்க ரொம்பவே கலங்கிட் டாங்க.

வாசல்ல இருந்த அண்ணா பூங்காவுல திட்டுத்திட்டா ஏழெட்டு குருப்புங்க உட்காந்து எதையோ மென்னுக்கிட்டு இருந்தாங்க. என்னவா இருக்கும்னு தெரிஞ்சுக்க கிட்டபோய் நின்னா, அவங்க மென்னுக்கிட்டு இருந்தது வைகோவை யும், அவரோட தொண்டர்களையும்தான். என்ன விஷயம்னா, முதல் நாளு கலைஞர் எழுதின புத்தகத்தை வெளியிட்டாங் கள்ல! அப்போ வைகோ பேசி முடிச்ச வுடனே, ம.தி.மு.க.காரங்க சாரிசாரியா கலைஞர் அரங்கத்தைவிட்டு கௌம் பிட்டாங்களாம். அதுவும் பேராசிரியர் பேசிக்கிட்டு இருக்கறப்பவே கௌம்பினது தி.மு.க.காரங்களை ஆத்திரப்படுத்தி யிருக்கு. "வேணும்னே தலைவரை டென்ஷனாக்கணும்னு பிளான் பண்ணி வெளில கௌம்பினாங்க. இன்னமும் இவங்க இருந்தல பாரு" ன்னு சீறிக்கிட் டிருந்தார் ஒரு உடன்பிறப்பு.

எம்.பி., எம்.எல்.ஏ., மந்திரிங்க எல் லாரும் லைன் கட்டி வந்து பெரிய அளவுல விழாவை ஜமாய்ச்சிருந்தாலும், அறிவாலயத்துல வழக்கமா வைக்கிற தேர் தல் நிதி உண்டியல்ல பெரிய அளவுல நிதி குவியலைன்னு உ.பி.ங்க பேசிக்கிட்டு இருந்தாங்க. என்ன காரணம்னு அங்க உட்கார்ந்

# டென்ஷனான தி.மு.க.!

திருந்த தொண்டர் ஒருத்தர்கிட்ட லேசு பாசா விசாரிச்சோம். அதுக்கு அவரு என்ன சொன்னாரு தெரியுமா!

"ஆமா தம்பி! ஒவ்வொரு மாநாட்டுக்கும் வந்து போறதுக்குள்ள தாவு தீர்ந்துடும்போல இருக்கு. சரி... இந்த மாநாட்டுக்குப் போவம், அடுத்த மாநாட்டுக்குப் போவமான்னு நினைக்கும்போதே தலைவரு அதுக்குள்ள கடிதம் எழுதிடறாரு. அதைப் படிச்சவுடனே மாநாட்டுக்குக் கிளம்பிடறோம். அதனால செலவு எகிறுது. இதுதான் எனக்குத் தெரிஞ்சி உண்டியல்ல காசு வராததுக்குக் காரணம். ஆனா தலைவரு இந்த தடவை இதைப் பெரிய விஷயமா எடுத்துக்க மாட்டாரு பாருங்க."

* வாழ்த்த வரிசை!





* நிதி வசூல்

அப்புறம் பிறந்த நாள் வாழ்த்து சொல்ல ராமதாஸ் நேர்ல வரலைங்கற தகவல், உடன்பிறப்புகளை ரொம்பவே கடுப்பாக்கிடுச்சி. இது அவங்க பேசுன பேச்சுலயே நமக்குப் புரிஞ்சது. ஒரு உ.பி. சொல்றாரு, "பொறந்த நாள் அதுவுமா எதுக்கு தலைவர் கிட்ட வந்து வாங்கிக் கட்டிக்கணும்னுதான் வராம இருந்திருப்பாரு." ஆனா இன்னொரு உ.பி. என்ன சொன்னாரு தெரியுமா. "ரெண்டு தொகுதிலயும் தோத்ததுக்குப் பிறகு இன்னிக்குத்தான் தலைவரு நல்ல மூடுக்கு வந்திருக்காரு. இந்த நேரம் பார்த்து ராமதாஸ் வந்திருந்தா, தலைவர் மூட் அவுட்டாகி ஃபங்ஷன் சொதப்பியிருக்கும். அதனால அவரு வராத வரைக்கும் சந்தோஷந்தான்..."

**- ஒற்றன்**

படங்கள்: **ராஜன்**

* பிறந்தநாள் குஷி!



# சொந்த ருசி!

அமரர் கல்கி

நான் குடியிருக்கும் வீட்டுக்கு மேற்புறத்தில் வெற்றிடம் ஏராளமாயிருக்கிறது. சென்ற வருஷத்தில் எனக்குத் திடீரென்று ஒரு யோசனை - வீட்டுக்குப் பக்கத்திலுள்ள வெற்றிடத்தில் ஏன் காய்கறிகள் பயிர் செய்யக் கூடாது என்பதாக. உடனே ஓர் ஆளைக் கூப்பிட்டுச் சுமார் பத்தடி சதுரத்துக்கு நன்கு கொத்தி வாங்கச் செய்தேன். முதன் முதல் கத்திரிச் செடி வைத்துப் பார்க்கிறதென்று தீர்மானம். கத்திரிச் செடிக்கு ஆட்டின் எருபோட்டால் செழித்து வளரும் என்று சொன்னார்கள். இரண்டணாவுக்கு ஒரு கூடை ஆட்டெரு வாங்கி வந்து கொட்டச் செய்தேன். பிறகு இரண்டணாவுக்கு 20 கத்திரிச் செடிகள் வாங்கி வந்து நடச் செய்தேன். ஆளுக்கு கூலி நாலணா கொடுத்தேன். அன்றிரவு மிக்க குதூகலத்துடன் அந்தச் செடிகளில் காய்க்கப் போகும் கத்திரிக் காய்களைப் பற்றி நானும் என் மனைவியும் பேசிக் கொண்டிருந்தோம். அவை காய்க்க ஆரம்பித்து விட்டால் கறிகாய் விலைக்கு வாங்க வேண்டிய அவசியமேயிராது என்றேன் நான். ''என்னதான் காய்த்தாலும் தினம் கத்திரிக்காயே சாப்பிட முடியுமா?'' என்றாள் என் மனைவி. ''அப்படி மீந்துவிட்டால் கொத்தவால் சாவடி வியாபாரி யாருக்கேனும் காண்ட்ராக்ட் விட்டு விடலா''மென்று நான் கூறினேன்.


எனக்கும், என் மனைவிக்கும் குழந்தைகள் ராஜம், ராமு எல்லாருக்கும் காலையில் எழுந்ததும் முதல் வேலை கத்திரிச் செடிகளைப் பார்வையிடுவதுதான். ஒரு நாள் திடீரென்று ராஜம் "ஐயோ! மாமா! கத்திரிச்செடி போச்சு!" என்று கத்தினாள். நான் திடுக்கிட்டு, எழுதிக் கொண்டிருந்தவன் அப்படியே பேனாவைப் போட்டு விட்டு எழுந்து ஓடினேன். பார்த்ததும் வயிறு பகீர் என்றது. ஒரு பெரிய காளை மாடு கத்திரிப் பாத்தியில் புகுந்து நாவை நீட்டி நீட்டி ருசி பார்த்து, அதன் இலைகளைக் காம்புகளுடன் உள்ளே தள்ளிக் கொண்டிருந்தது. எனக்குண்டான கோபத்தையும் எரிச்சலையும் சொல்லி முடியாது. 'இதென்ன அநியாயம்? கத்திரிச் செடியை மாடு தின்னுமா, என்ன?



இதை எந்தப் புத்தகத்திலும் படிக்கவில்லையே? யாரும் சொல்லிக் கேட்டது கூடக் கிடையாதே? இந்த மாட்டின் சொந்தக்காரன் மேல் வழக்குத் தொடர்ந்தால் என்ன?' என்று யோசித்துக்கொண்டு நான் திக்பிரமை கொண்டவன்போல் நிற்கையில் ராஜம் மறுபடியும் ''என்ன மாமா! மாடு செடிகளை அழிக்கிறது. சும்மா நிற்கிறீர்களே?'' என்று கூவினாள்.

நல்லவேளையாக இதற்குள் ராமு எங்கிருந்தோ ஓடி வந்தான். பக்கத்தில் கிடந்த ஒரு தடியை எடுத்துக்கொண்டு எச்சரிக்கை கூடச் செய்யாமல் மாட்டின் முதுகில் நாலு சாத்துச் சாத்தினான். உடனே அந்தக் கோழை மாடு ஓட்டம் பிடித்தது!

இன்னும் பத்து தினங்



கள் கழிந்தன. ஒரு நாள் காலை நான் படுக்கையை விட்டு எழுந்து வெளி வந்ததும் வீதியில் ஓர் அதிசயக் காட்சியைக் கண்டேன். முசுக் கட்டைப் பூச்சியைப் போன்ற ஒருவகைச் சிறிய பூச்சிகள் தெரு வீதியில் கால் வைக்க இடமில்லாது நிறைந்திருந்தன. இவை எல்லாம் இவ்வளவு அவசரமாய் எங்கே போகின்றன என்பதைப் பார்க்கும் பொருட்டு, காலில் செருப்புப் போட்டுக் கொண்டு கூடியவரையில் பூச்சிகளை மிதியாமல் தத்தித் தத்தி மேற்புறம் சென்றேன். அப்போது என்ன பார்த்தேன் என்று நினைக்கிறீர்கள்? செடிகளில் ஓர் இலையில் ஓர் அணுவளவு பாகங்கூடக் கண்ணுக்குப் புலனாகவில்லை. எல்லாம் பூச்சிகளால் மூடப்பெற்றிருந்தன.

மறுநாள் காலையில் சென்று பார்த்த போது, கத்திரிச் செடிகளில் ஒரு இலையாவது பாக்கியில்லை. ஆனால் இலைக் காம்புகள் எல்லாம் அப்படியப்படியே நின்றன. மாட்டைப்போல் காம்புகளையும் தின்றுவிடாமல் விட்டதற்காகப் பூச்சிகளுக்கு நன்றி கூறினேன்.

பின்னும் இருபது நாள் சென்ற பிறகு ஒருநாள் ராஜம், 'மாமா மாமா! ஓடி வாருங்களேன்!' என்று கத்தினாள். குழந்தைக்கு என்ன ஆபத்தோ தெரியவில்லையே என்று நான் அலறிப்புடைத்துக் கொண்டு எழுந்து ஓடினேன். "மாமா! கத்திரிச் செடி பூத்திருக்கு" என்று அளவிலாத குதூகலத்துடன் கூச்சலிட்டாள் ராஜம். இருபது செடிகள் நட்டதில் ஒரு செடியானது எவ்வளவோ விபத்துக்களையெல்லாம் தாண்டிக் கடைசியாகப் பூப் பூத்து மூன்று காய்களும் காய்த்தது. அவற்றில் ஒன்று சொத்தையாய்ப் போயிற்று. பாக்கி இரண்டையும் செடியிலிருந்து பறித்தோம். அன்றைய தினம் என் மனைவியின் அடுத்த வீட்டுத் தோழி "சமையலுக்கு ஒன்றுமேயல்லை; கறிகாய் ஏதேனும் இருக்கிறதோ?" என்று கேட்கவே, என் மனைவி மிகுந்த பெருமையுடன் "எங்கள் சொந்தக் கொல்லையில் காய்த்தது" என்பதாக ஒன்றைக் கொடுத்துவிட்டாள். பாக்கி ஒரு காயை மேளா தாளங்களுடன் நாலாக நறுக்கி சாம்பாரில் போட்டோம். சாப்பாட்டின்போது தலைக்கு ஒரு துண்டம் கிடைத்தது. ஆஹா! என்ன இருந்தாலும் சொந்தக் கொல்லையில் பயிரிட்டுக் காய்த்த கறியின் சுவையே வேறுதான்! அந்த ருசி அனுபவித்தவர்களுக்கே தெரியும்.

- **'அதிர்ஷ்ட கவசம்' கட்டுரை தொகுப்பிலிருந்து...**

**வானதி பதிப்பகம்.**



'மண்டையைப் பிளக்கும் வெயிலை சமாளிப்பது எப்படி?' எனும் கேள்வியோடு தெரியாத்தனமாக நான்கு பிரபலங்களை அணுகி விட்டோம். வெயிலே பரவாயில்லை என்று நினைக்கும் வகையில், அதி அற்புதமாக அவர்கள் அள்ளி அள்ளிக் கொட்டிய டிப்ஸ்களிலிருந்து உங்களுக்காக சில துளிகள்...

**மணிரத்னம் :**

தெரியும். வெயில் அடிக்கிறது. எனக்குத் தெரியும். தலைக்கு மேலே. வெயில் சூடாக இருக்கிறது. வியர்வை வழிகிறது. பிடிக்காது. எனக்குப் பிடிக்காது. வெயில் பிடிக்காது. சூடாக இருப்பதால் பிடிக்காது. ஆனால் காபி பிடிக்கும். சூடாக இருந்தாலும் வெயில் பிடிக்காது. வெயில் காலத்தில் காபி பிடிக்காது. அதன் ஆவி பிடிக்கும். வெயிலின் ஆவி பிடிக்காது. யாரிடம் கேட்பது? வெயில் நல்லதா? கெட்டதா? தெரியாது. எனக்கு தெரியாது. ஆனால் பிடிக்காது. எனக்கு தெரியாதது எதுவும் பிடிக்காது. நாலு பேருக்கு நல்லது நடந்தா எல்லாம் சரிதான். இதுதான் எனக்குத் தெரியும். அந்த நாலு பேர் யார் என்று எனக்குத் தெரியாது. அவர்கள்

# ஆதவன் அனுப்பும் ஹாட்மெயில்!

நல்லவர்களா, கெட்டவர்களா? தெரியாது. புரியாது. பிடிக்காது. அறியாது. விளங்காது. சகிக்காது.

**வைரமுத்து :**

வெயில் என்பது என்ன? சேவல் கூவும்பொழுது விழித்துக் கொள்ளும் இயற்கை அன்னை, நாம் விழிக்க வேண்டும் என்பதற்காகப் போடும் சுளீர் இஞ்செக்ஷன். வெயில்... நேற்றைய நிலவின் இன்றைய வெப்ப எச்சம் வெயில்... ஆதவன் அனுப்பும் ரிபீட்டட் ஹாட் மெயில் வெயில்... சூரியன் சொல்லும் சூடான ஹாய் வெயில்... ஒவ்வொரு கதிரும் வெயிலாகிறது. ஒவ்வொரு வெயிலும் கதிராகிறது.

வெயில் அனுப்பும் மென்பொருள் மெயில்களை நாம் தேடிப்பிடித்து வாசிக்க வேண்டும். அதன் அழகை மூச்சுமுட்ட வேர்க்க விறுவிறுக்க சுவா

சிக்க வேண்டும். கர்ச்சிப் போட்டு தலையை மறைக்கக் கூடாது. குடை போட்டு மூடி, சூரியனுக்கு தடா போடக்கூடாது. சூரியனுக்கு டாட்டா காட்டக்கூடாது. வெயில் நம்மால் மறுக்கப்படும் பொழுது வெயில் நம்மை மறுத்துவிடுகிறது.

தகிக்கும் வெப்பத்திலிருந்து தப்பித்து ஓடிச் செல்ல ஏதேனும் நிவாரணம் உண்டா? உண்டு. கேள். உன் காதலியின் பூப்போட்ட துப்பட்டாவை வாங்கி உன் தலை மேலே விரித்துக்கொள். அவள் உருவத்தை உன் கண்களில் பதித்துக் கொள். அவள் உன்னிடம் பேசிய வார்த்தைகளை உன் காதுகளில் பொருத்திக் கொள். இப்பொழுது நிமிர்ந்து பார் அந்தச் சூரியனை. அது உன்னைப் பார்த்து ஹவ் ஆர் யூ கேட்கும். சுரீர் கதிர்கள் எஸ்.எம்.எஸ். ஜோக்ஸ் அனுப்பும். தார் ரோடு கிச்சுகிச்சு மூட்டும். வியர்வை வாசனை திரவியமாகும். வாசனை திரவியம் வியர்வையாகும். தபால்காரன் தெய்வமாவான். ஐஸ் விற்பவன் தபால் காரனாவான். தபால் ஐஸாகும். ஐஸ் தபாலாகும்.



**கமலஹாசன் :**



வெல், ஐ டோண்ட் நோ. வெயிலைப் பற்றி நான், அதாவது கமல்ஹாசன் எனும் தனிப்பட்ட ஒரு நடிகனால் எந்தவொரு திடமான கருத்தையும் தெரிவிக்க இயலாது என்று தோன்றுகிறது. ஒருவேளை இந்தக் கருத்து தெரிவிக்க மறுக்கின்ற செயல்பாடுதான் சரியான பார்வையாக இருக்குமோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

வெயில் வானத்திலிருந்து வருவது. நான் நிலத்தைச் சார்ந்தவன். சினிமா எனக்கு ஒரு முகம். அவ்வளவுதான். இந்த முகத்தை தாண்டி மற்றொரு முகம் எனக்கு உண்டு. அது எவருடைய முகமாகவும் இருக்கலாம். உங்களுடையதாகக் கூட இருக்கலாம். என்னுடையதாகவும் இருக்கலாம். அந்த முகத்தை கட்டாயம் காட்டத்தான் வேண்டும் என்கிற அவசியம் எனக்கு, அதாவது கமலஹாசன் எனும் பெயரைத் தாங்கிய முகத்துக்கு, அதாவது உங்களோடு இப்பொழுது பேசிக் கொண்டிருக்கிற இந்த முகத்துக்கு இல்லை. இந்த முகம் உங்களோடு பேசிக் கொண்டிருக்கும் அதே சமயம் இந்த முகத்தைத் தாண்டிய மற்றொரு முகம் இதனைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. அந்த மற்றொரு முகத்தின் மீது வெயிலடித்தால் இந்த முகம் அதாவது கமலஹாசனின் முகத்துக்கு எப்படித் தெரியும்? எப்படிக் கருத்து சொல்ல முடியும்? அபிராமி, அபிராமி...

கற்பனை :
**மருதன்**

# காதலின் பசி!







**கவிதை நடையில் நடக்கிறாய் - குகை மா. புகழேந்தி, குமரன் பதிப்பகம், 3, முத்துக்கிருஷ்ணன் தெரு, சென்னை - 17**

மடியில் இருத்தி, பொத்தி... பொத்தி... வளர்த்தாலும் சமயம் வாய்க்கும் போது தன் தேடலின் தீவிரத்தில் தன் இலக்கை அடைய வெளிக்கிளம்புமே பூனைகள், அப்படியான ஒரு தேடலின் தீவிரத்தில்தான் காதலித்த மனதும் சதா அலைந்து கொண்டே இருக்கும் போல. 'காதல் அனுபவங்களையும், காதலித்த பெண்ணின் விஷயங்களையும் ஒரு ரகசியம் போல் மனத்தில் பொத்தி வளர்த்து பாதுகாத்தாலும் எவரிடமாவது அதைச் சொல்லிவிட வேண்டும். அப்படியான ஓர் அனுபவத்தைத்தான் இந்தக் கவிதைத் தொகுப்பில் பதிவு செய்திருக்கிறார் புகழேந்தி.

காதலின் வரங்களை மட்டுமல்ல, சாபங்களைக் கூட தமக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்று நினைக்கும் நல்ல மனது படைத்தவராக இருக்கிறார். இத்தொகுப்பின் அட்டைப்படமும், தாள்களின் நேர்த்தியும் தரமாய் இருக்கின்றன. கவிதை வரிகளுக்காக இன்னும் மெனக்கெட்டு அனுபவங்களை உள் வாங்கி அசைபோட்டிருந்தால் இதைவிடவும் சிறப்பான கவிதைகள் வெளிப்பட்டு இருக்கும்.

**- ஜி. மாஜினி**

**நீ வசித்த தெருவில் - ஜி.மாஜினி, அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாணசுந்தரம் தெரு, சென்னை -11**

தோற்றுப் போன காதல் மீட்டுகிற ஞாபகங்கள் எழுப்புகிற கவிதைகளே இத்தொகுப்பு முழுக்க ஒலிக்கிறது. என்றாலும் பெயருக்கேற்றாற் போல் மாஜினி படைக்கிற கவிதைகளில் காதலும் சமூகமும் பின்னிப் பிணைந்திருப்பது ஆரோக்கியமான விஷயம்.

'நீ வசித்த தெருவில்' என்கிற கவிதையில் மழைக்கென ஒதுங்கிய கூரை வேய்ந்த முருகன் கோயில், படித்த சின்னப் பள்ளிக்கூடம், செம்மண் புழுதி அலையும் தெரு, துணைக்கென கூடவரும் பத்மாவதி, கோயில் படித்துறை, தாழம்பூ புதர், பாழடைந்த பம்ப்செட் ரூம் என காதல் அலைந்த பிரதேசங்களை நமக்கு காட்சிப்படுத்துகிறார். சுகமாக இருக்கிறது.

காதலை எல்லோரும் பயந்து, ஒளிந்து வெளிப்படுத்துவதைப் போல மாஜினியும் இக் கவிதைகளை பயந்து பயந்து எழுதியதாகவே தெரிகிறது. உண்மையில் காதலுக்கு இது நிறைவான தொகுப்பல்ல. வானளவு, பூமியளவு என பிதற்றுகிற காதலை, வெறும் இருபத்தெட்டு கவிதைகளில் சொல்லிவிட முடியாது. இவர் இன்னும் நிறைய எழுதியிருக்கலாம் என்றே சொல்லத் தோன்றுகிறது. காதலின் பசி, பசியோடே திரும்புகிறது.

**- குகை மா. புகழேந்தி**




# கணக்கு

தேசியமயமாக்கப்பட்ட வங்கி அது. பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

"டோக்கன் பதினாலு."

கேஷியர் பாஸ்கர் கூப்பிட்டான்.

வயதானவர் ஒருவர் மெதுவாக வந்து, டோக்கனை கவுன்ட்டர் வழியாக பாஸ்கரிடம் நீட்டி,

''இதுவா பாருங்க...'' என்றார்.

அதை அலட்சியமாக வாங்கியவன், செக்கில் உள்ள தொகையைப் பார்த்தான். வெறும் நூற்றி அறுபது ரூபாய்...! ''இதுகளுக்கு வேலையே இல்ல... அக்கவுன்ட்ல மினிமம் வெச்சுட்டு... பாக்கிய தொடச்சு எடுக்கிற கேஸுங்க...'' முணுமுணுத்துக் கொண்டே... தொகையை எண்ணி அந்தப் பெரியவரிடம் கொடுக்க, அவரும் அதை ஒரு முறை எண்ணிப் பார்க்க ஆரம்பித்தார்.

'ம்... இதுல ஒண்ணும் கொறைச்சல் இல்ல...!'என்று மனதுக்குள் திட்டினான்.

ரூபாய் நோட்டுகளை சரிபார்த்த பெரியவர், ''ஐயா... கணக்கு தப்பா வருதுங்க'' என்றார் பாஸ்கரிடம்.

''யோவ்... நல்லா எண்ணிப்பாரு... பதினாறு பத்து ரூபா நோட்டு இருக்கு...!''

எரிச்சலுடன் இவன் வெடிக்க, மீண்டும் அந்தப் பெரியவர் நோட்டுகளை எண்ணினார்.

கடுப்போடு பாஸ்கர் குனிந்து எதையோ எழுதிக் கொண்டிருக்க,

''ஐயா!'' மீண்டும் அந்தப் பெரியவர்...!

''ஒரு நோட்டு கூட இருக்குங்க...!'' என்று சொல்லிவிட்டு, ஒரு பத்து ரூபாயை கவுன்ட்டரில் வைத்துவிட்டு மெதுவாக நகர்ந்து செல்ல... பாஸ்கர் கூனிக்குறுகிப் போனான்!

**சீனிவாசன்**

**மினி கதை**

தமிழ் சினிமாவின் இளம் பாடலாசிரியர்களான நா.முத்துக்குமார், ஸ்நேகன், தாமரை மூவரும் ஒரு பௌர்ணமி நாளன்று மெரினா கடற்கரையில் சந்தித்துக் கொண்டார்கள். அன்றும் தனது எல்லைக் கோட்டைத் தாண்டி பாய்ந்து வந்த அலைகளில் கால் நனைத்து, கடற்காற்றை ரசித்தபடி மூவரும் தாங்கள் கடந்து வந்த பாதையை அசை போட ஆரம்பித்தார்கள்...

**தாமரை:** என்ன ஒரு ரம்மியமான சூழல்... கவிதை எழுதலாம்னு கை பரபரக்குது!

**நா. முத்துக்குமார்:** எனக்கு வேறு சிந்தனைகள் அலைபாயுது. செல்வராகவனோட 'புதுப்பேட்டை' கம்போஸிங்குக்காக பாங்காக் போறேன். ஃப்ளைட் ஏறுவதற்கு முன்னாடி எல்லாமே சரியா இருக்கணுமேன்னு மனசுக்குள் பரபரப்பாயிருக்கேன்.

**தாமரை:** உங்களுக்கு செல்வராகவன், எனக்கு கௌதம், சிநேகனுக்கு அமீர்னு நம்ம மூணு பேருக்கும் ஒரு டீம் அமைஞ்சிருக்கில்லையா? நானும் 'வேட்டையாடு விளையாடு' படத்துல முதன் முறையா கமல் சாருக்கு எல்லாப் பாடலும் எழுத என்னை தயார்படுத்திட்டிருக்கேன். உங்களோட '7ஜி ரெயின்போ காலனி'

# “உயிர் துறக்கத் தயார்!”



சந்திப்பு

பாடல்களை ரொம்பவும் ரசிச்சேன். அப்படி அற்புதமான வரிகள் அமைஞ்சதுக்குக் காரணமே இயக்குனர் செல்வராகவன்தான்னு சொல்வேன். ஒரு இயக்குனரோட ரசனையில்தான் நல்ல வரிகள் பாடலாக மாற்றப்படுது. என்ன சிநேகன், 'அவரவர் வாழ்க்கையில் ஆயிரமாயிரம் மாற்றங்கள்' இல்லையா?

**சிநேகன்**: நிச்சயமா. இந்த நிமிஷத்துல நாம கடந்து வந்த முட்பாதைகளை நினைச்சா பிரமிப்பா இருக்கு. சினிமாவுல நுழைஞ்ச ஒரே காரணத்துக்காக எங்க வீட்ல மூணு வருஷம் என்னை தள்ளி வச்சிருந்தாங்க. வீட்டில் நுழைந்தால் நுழையக் கூடாதுன்னு சொல்வாங்க. யாரும் என்கிட்ட பேசமாட்டாங்க. சரி, ஜெயிச்சிட்டு இவங்க முன்னாடி நிற்போம்னு தமிழ் சினிமாவுக்குள்ள நம்ம முயற்சிகளை தொடர்ந்தா, எல்லாமே ஏமாற்றமா இருக்கும். எத்தனை தடைகளைத் தாண்டி இன்னைக்கு இந்த நிலைமைக்கு வந்திருக்கோம்னு நினைக்கும்போது, உடம்பெல்லாம் சிலிர்த்துப் போகுது.

**நா.முத்து**: இன்றைக்கு இயக்குனர்களெல்லாமே பெரும்பாலும் இளைஞர்கள்தான். நம்மைப் போன்ற இளைய தலைமுறைப் பாடலாசிரியர்களோடு அவர்களால் எளிதில் ஒத்துப்போக முடிகிறது. நானும், தாமரையும் 'கணையாழி'யால் அடையாளம் காணப்பட்டவர்கள். 'காக்க காக்க' படத்தில் தாமரை



புதுப்புது உருவகங்களை பாடல் வரிகளா மாத்தியிருப்பாங்க. 7ஜியில் 'நடைபாதை கடையில் உன் பேர் படித்தால் நெஞ்சுக்குள் ஏனோ மயக்கங்கள் பிறக்கும்...' என்று நவீன கவிதையில் நான் எழுதினது செல்வராகவனுக்கு ரொம்பவும் பிடிச்சது.

**தாமரை:** நான் 97ல் நுழைந்து நான்கு வருடங்கள் கழித்துத்தான் 'வசீகரா' அமைஞ்சுது. கவிஞர் வாலி ஒருமுறை, 'நீ வசீகரா பாடலை மட்டும் எம்.ஜி.ஆர். காலத்தில் எழுதியிருந்தால் ஒரே இரவில் கோடீஸ்வரி ஆகியிருப்பாய்' என்றார். நல்ல பாடல்களை எழுதினால் மனதாரப் பாராட்டுவார் அவர். இன்றைக்கு கவிஞர்களோட பொருளாதார நிலைமை அவ்வளவு உயரத்தில் இருப்பது கிடையாது. ஒரு படத்தின் பாடல் ஹிட்டானால், அதன் இசையமைப்பாளர் ஒரே இரவில் லட்சாதிபதியாகி விடுகிறார். ஆனால் நமக்கு அதனால் நல்ல வாய்ப்புகள் மட்டும்தான் வருகின்றன. சேர்ந்தே இருப்பது வறுமையும் புலமையும் என்பது இன்றைக்கும் நீடிக்கிறது.

**சிநேகன்:** சங்க விதிகளின்படி 'ஒரு பாடலுக்கு ஏழாயிரம் ரூபாய் தர வேண்டும்' என்பதை யாரும் மதிப்பதேயில்லை. சினிமாவில் மற்ற துறைகள்ல யார் நுழைந்தாலும் அவர்கள் பல ஆயிரங்கள் கட்டி மெம்பர்ஷிப் கார்ட் வாங்க வேண்டும். ஆனா பாடல் எழுத மட்டும் யார் வேண்டுமானாலும் உள்ளே நுழையலாம். நடிகர் சங்கம் போல கவிஞர்களுக்கென்று பலமான சங்கம் எதுவுமில்லை. நம் பிரச்னையை நாமே வாதாடித் தீர்த்தால்தான் உண்டு. வராத பணமாக ஒவ்வொரு கவிஞர்களுக்கும் பல லட்சங்கள் இருக்கும்.

**நா.முத்து:** எனக்கு இன்னொரு ஆதங்கமும் உண்டு. ரேடியோ மற்றும் டீ.வி களில் பாடல்களை ஒலி/ஒளிபரப்பும் போது யார் எழுதியது என்று அறிவிப்பதேயில்லை. சில சமயம் கேசட், சி.டி.க்களிலும் பெயர் இருப்பதில்லை. அப்படியே இருந்தாலும் பெயரை மாற்றிப்போட்டு விடுகிறார்கள். இந்தப் பூனைக்கு யார் வந்து மணி கட்டுவார்களோ?

**தாமரை:** பாடலாசிரியர்களுக்கென்று





எந்த உரிமையும் கிடையாது. இந்த வரி நிச்சயம் இடம்பெற வேண்டும் என்று கூட நம்மால் சொல்ல முடியாது. அதே போல தமிழ்க் கொலை செய்யும் வடநாட்டுப் பாடகர்களைத் தடுக்கவும் நம்மால் முடிவதில்லை. எப்படி இசையை இசையமைப்பாளரும், கதை, காட்சிகளை இயக்குனரும் தீர்மானிக்கிறார்களோ அதேபோல, மொழி சார்ந்த உரிமை கவிஞர்களுக்கே தரப்பட வேண்டும். பாடகர்கள் தமிழைக் குதறவிட்டு வேடிக்கை பார்ப்பது தமிழனின் மெத்தனம்.

**சிநேகன்**: எஃப்.எம் தொகுப்பாளினிகளின் தமிழ் இதைவிட மோசமானதாக இருக்கும். நான் 'சாமி'யில் எழுதின 'கல்யாணந்தான் கட்டிக்கிட்டு' பாடல் என்னைப் பொறுத்தவரை தவறாகத் தெரியவில்லை. ஆனால் அது சிங்கப்பூரில் தடை செய்யப்பட்டது. மாறாக அங்குதான் என்னை அழைத்து விருது கொடுத்தார்கள். அவர்கள் சினிமாவை சினிமாவாகப் பார்க்கிறார்கள். வாழ்க்கையோடு முடிச்சுப் போட்டு விமர்சனங்கள் செய்வதில்லை. சரி, அவரவர்க்கு வாழ்க்கையில் என்னென்ன கனவுகள்?


**நா.முத்து**: காற்றில் பறக்கும் காகிதம் நான். 'நாளைக்கு இந்த நாவல் எழுதப் போறேன். அதற்கடுத்து நோபல் பரிசு வாங்கப் போகிறேன்' என்கிற கனவெல்லாம் கிடையாது. காலம் என்னைத் தீர்மானிக்கட்டும்.

**ஸ்நேகன்**: பாடல்களில் புதுக்கவிதைகள் கொண்டு வந்து அதேபோல் மற்றவர்களையும் எழுதத் தூண்டியவர் வைரமுத்து. அது போலொரு மாற்றத்தை உருவாக்குவதே என் கனவு.

**தாமரை**: தமிழ்நாட்டிலேயே தமிழ் அடிமையாக கிடப்பதைக் கண்டு ரத்தக் கண்ணீர் வடிக்கிறேன். இது என்னை ஓயாது துன்புறுத்துகிறது. என் உயிர் கொடுத்தால் தமிழ் ஆட்சிமொழியாகி விடும் என்றால், இந்நிமிடமே உயிரை துறக்கத் தயார்.

**- ச.ந.கண்ணன்**

படங்கள் : **ஸ்ரீஹரி**




# “சகலகலா வல்லவனில் கமல் நடித்திருக்கக் கூடாது!”

‘எர்ரா மல்லலு’ என்ற தெலுங்குப் படத்தை ‘சிவப்பு மல்லி’ என்று தமிழில் எடுக்க விரும்பிய போது, நாங்கள் கமல்ஹாசனை அணுகினோம். அப்போது அவரிடம் எங்களுக்குக் கால்ஷீட் தரும் அளவுக்கு தேதிகள் வசதியாக இல்லை. கமல் என்னிடம் சொன்னார்: “தமிழிலேயே ஏன் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், ஹிந்தியில் எடுத்து கொஞ்ச நாள் ஆகிவிட்டதே. ஏன் ஹிந்திப்படம் ஒன்று முயற்சிக்கக் கூடாது?”


அந்த யோசனை எனக்கு அப்போது சரியாகப் பட்டதால், அது தொடர்பாகவும் முயற்சிகள் மேற்கொண்டோம்.

டி.என்.பாலுவின் ‘சட்டம் என் கையில்’ என்ற படத்தின் உரிமையை ஹிந்திக்காக வாங்க விரும்பினோம். நானே படத் தயாரிப்பாளரிடம் பேசி உரிமையை வாங்கினேன். இதற்கிடையில் இந்தப் படத்தை ஹிந்தியில் தயாரிக்குமாறு ஏற்கெனவே கமல்ஹாசன், மல்லிகா அர்ஜுன்ராவுக்கு யோசனை கூறி இருக்கிறார். அவர் இதே படத்தின் உரிமையை படத்தின் ஃபைனான்ஷியர் ஸ்ரீசந்த் என்பவரிடமிருந்து வாங்கியிருப்பது தெரிய வந்தது.

விதிமுறைகளின்படி, தயாரிப்பாளரிடமிருந்து வாங்கும் உரிமைதான் செல்லுமே தவிர, ஃபைனான்ஷியரிடமிருந்து வாங்கினால் அந்த உரிமை செல்லாது என்றாலும், மல்லிகா அர்ஜுன்ராவ் என்னிடம் வந்து படத்தைத் தான் தயாரிக்க விரும்புவதால் விட்டுத் தரும்படி கேட்டுக் கொண்டார். அதை நாங்கள் பெரிது படுத்தி பிரச்னையாக்க விரும்பாமல் ‘சரி’ என்று சொல்லிவிட்டோம். நாங்கள் தந்திருந்த பணத்தை தயாரிப்பாளர் எங்களுக்குத் திருப்பித் தந்துவிட்டார்.

அதன் பிறகுதான் கமலை வைத்து நாங்கள் ‘சகலகலாவல்லவன்’ எடுத்தோம். ஓர் உண்மையை நான் இங்கே

**அந்த நாள் ஞாபகம்**



# திரையுலக நினைவுகள்

சொல்ல வேண்டும். 'சகலகலா வல்லவன்' என்ற பெயரை நாங்கள் கதைக்காக வைக்கவில்லை. கமல் ஹாசன் திறமையில் ஒரு சகலகலாவல்லவன் என்பதால் வைத்தோம்.

பஞ்சு அருணாசலம் தான் இந்தப் பெயரை வைக்க யோசனை சொன்னார்.

'நன்றாக இருந்தாலும் பெயர் கரடுமுரடாக இருப்பது போல் தோன்றுகிறதே. எல்லோராலும் சகஜமாக சகலகலா வல்லவன் என்று உச்சரிக்க முடியுமா' என்று சந்தேகத்தை சிலர் எழுப்பினார்கள்.

அவர்களுக்கு பஞ்சு அருணாசலம் சொன்ன பதில் ரொம்பவும் கன்வின்ஸிங்காக இருந்தது.

"ஜகதலப்பிரதாபன் என்ற பெயரையே மக்கள் சகஜமாக உச்சரித்தார்களே... சகலகலா வல்லவன் அதைவிட எளிமையான பெயர்தானே...?"

இருந்தாலும் நாங்கள் உடனே அந்தப் பெயரை ஓ.கே செய்யாமல், எங்கள் விநியோகஸ்தர்களுக்கு ஃபோன் போட்டுக் கேட்டோம். பெயர் உச்சரிக்கச் சிரமம் தான் என்று முதலில் சொன்னவர்கள், பிறகு தங்களுக்குள் ஆலோசித்து 'சரி... சகலகலாவல்லவனே இருக்கட்டும்' என்று உறுதிப்படுத்திய பின்புதான் அந்தப் பெயரை ஓ.கே செய்தோம்.

என்னைப் பொறுத்தவரை வடக்கே ராஜ்கபூர், குருதத் போல கலைஞனாகவும், தொழில்நுட்ப நிபுணராகவும் தெற்கே இருப்பவர் கமலஹாசன் என்பது என்னுடைய தீர்மானமான கருத்து.

நடிகர் திலகம் சிவாஜிக்குப் பின் நமக்கு வாய்த்திருக்கும் அற்புதமான கலைஞர் கமல். அவர் ஒரு எக்ஸலெண்ட் ஆர்ட்டிஸ்ட் மட்டுமல்ல... ஒரு எக்ஸ்ட்ராடினரி டெக்னீஷியனும்கூட.

இன்றைய தேதியில் கமலுக்கு இணையான ஓர் ஆர்ட்டிஸ்ட் கம்-டெக்னீஷியன் இந்தியாவிலேயே யாரும் இல்லை என்பது என் கருத்து. எங்கேயும் இதைச் சொல்ல






ஏவி.எம்.சரவணன்

## 'விஷயம் தெரிந்தபோது திரையுலகமே வியப்படைந்தது!'



நான் தயாராக இருக்கிறேன்.

நடிப்பு, பாட்டு, நடனம், சண்டை என்று எல்லாப் பிரிவுகளிலும் கமல் தன்னை நிரூபித்துக் காட்டிய படம் இது. குறிப்பாக நடனக் காட்சிகளும், சண்டைக் காட்சிகளும் தமிழ்த் திரையுலகில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தின. படம் முடிந்து போட்டுப் பார்த்தபோது, இடைவேளைக்குப் பிறகு சரியான 'அயிட்டம்' ஏதுமில்லை என்று எங்களுக்குப்பட்டது. மக்களைக் கவரும் பாப்புலர் காட்சியை சினிமா வட்டாரத்தில் 'அயிட்டம்' என்றுதான் பேசிக்கொள்வோம். ஒரு நல்ல அயிட்டம் தேவையென்று எண்ணி, அருமையான சண்டைக்காட்சி ஒன்றை அமைத்தோம். ஒரு வேனில் தொங்கிய படியே ஊருக்குள் அந்த வண்டியில் போய்க்கொண்டே ஹீரோ சண்டை போடுவது போல் காட்சி.

வில்லன் கும்பலோடு ஹீரோ சண்டை போட வேண்டிய அவசியத்தை எப்படி ஏற்படுத்துவது என்று யோசித்தபோது, பஞ்சு அருணாசலம் சர்வசாதாரணமாக ஒரு ஐடியா தந்தார்.

"ரொம்ப ஈஸி. பூ வாங்கிவர ஹீரோ இறங்கிப் போறான். உடனே வில்லனின் ஆட்கள் ஹீரோயினை கடத்திக் கொண்டு போகிறார்கள். காரணம் போதாதா?" என்றார். இதை எடுத்த விதத்தில் அந்தக் காட்சி கிளிக் ஆயிற்று. கமல் ரொம்பவும் ரிஸ்க் எடுத்து அந்தக் காட்சியில் நடித்தார். வேனில் தொங்கிக்கொண்டு ரொம்பவும் இயல்பாக அவர் சண்டை போட்டவாறே சுற்றி வந்தது அற்புதமாக இருந்தது.

அதேபோல அந்தப் படத்தில் 'குச்சி சண்டை' ஒன்று வரும். இதற்கும் நல்லி செட்டியாரின் மகன்கள்தான் ஒரு சைனீஸ் படம் கொடுத்து உதவினார்கள். அதில் இருந்த 'ஸ்டிக் ஃபைட்'டை அடிப்படையாகக் கொண்டு அந்தக் காட்சியை எடுத்தோம்.

கிளைமாக்ஸ் காட்சியில் கமல் நடித்த போது அவர் காட்டிய ஈடுபாடு முழுமையானது. கயிற்றில் தொங்கியபடி அவர் செய்த சாகசங்களின்போது அவர் கையில்கூட ஒரு முறை முறிவு ஏற்பட்டது. அதை அவர் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை.

படத்தில் ஐந்து சண்டைக் காட்சிகள், ஆறு பாடல் காட்சிகள். இவ்வளவு இருந்தும் படத்தின் மொத்த நீளம் 12750 அடிகள்தான். இது தெரிந்தபோது அப்போது தமிழ்த் திரைப்பட உலகமே வியப்படைந்தது.

புலியூர் சரோஜாவின் நடன அமைப்பில் கமல் வெளுத்து வாங்கினார்.

'சகலகலாவல்லவன்' பெற்ற பெரு வெற்றி பற்றி நான் தனியாகச் சொல்ல என்ன இருக்கிறது? எல்லா சென்டர்



குழந்தைகளின் குதூகலம்!
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-600 032

களிலும் பிரமாதமாக ஓடிய படம். பதினொரு தியேட்டர்களில் வெள்ளிவிழா கண்டது.

பொள்ளாச்சியில் படப்பிடிப்பு நடைபெற்றபோது, கமல் ஹோட்டலில் தங்காமல் சமத்தூர் ஜமீன்தார் ராமராஜ வாணவராயர் மாளிகையில் தங்கினார். ஜமீன் குடும்பத்து செல்லப்பிள்ளையாகி விட்டார் கமல். அந்த மாளிகையில்தான் நாங்கள் பிறகு 'எஜமான்' எடுத்தோம்.

சகலகலாவல்லவனில் பிரபலமான 'இளமை இதோ... இதோ' என்ற பாடலில் முதலில் 'ஹேப்பி நியூ இயர்' என்ற வார்த்தைகள் எழுதப்படவில்லை.

பாடல் ஒலிப்பதிவின் போது அது புத்தாண்டு பாடல் என்ற காட்சியமைப்பை அறிந்த பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் 'ஆரம்பத்தில் ஹேப்பி நியூ இயர் என்று நான் ஹை பிட்சில் பாடினால் நன்றாக இருக்குமே' என்று பாடினார். அது அருமையாக அமைந்தது மட்டுமில்லாமல், இன்றைக்கும் ஒவ்வொரு ஆங்கிலப் புத்தாண்டு பிறக்கும்போதும் ரேடியோ / டி.வியில் அந்தப் பாடல் ஒலிக்காமல் இருக்காது. அப்படிப் பொருந்திப் போய்விட்டது அந்தப் பாடல்.

• பஞ்சு அருணாசலம்



இந்தப் படத்தின் மூலம் 'கமல் ஓர் ஆக்ஷன் ஹீரோ' என்ற இமேஜ் அதிகமாயிற்று.

இன்னொரு பக்கம் படம் வெளியானதும், பல இயக்குனர்கள் கமலுக்குப் போன் செய்து அவர் அந்தப் படத்தில் நடித்திருக்கக் கூடாது என்று அபிப்பிராயம் தெரிவித்தார்களாம். ஒருமுறை கமலே என்னிடம் சொன்னார்.

யார் என்ன சொன்னாலும் படம் அமோக வெற்றி என்பது ஊரறிந்த உண்மை.

(தொடரும்)

## சிறுகதை



ராகங்களுக்கு உங்களால் சூட்சம உருவங்களை ஏற்படுத்திக் கொள்ள இயலுமா? என்னால் முடியும். தோடி ராகம் கேட்கும் பொழுது கண்டிப்பும், கருணையும் மிக்க பள்ளி வகுப்பு ஆசிரியர் போல் தோன்றும். சஹானா ராகம் என்றால், பொறுப்புகள் இன்றித் திரியும் விடலைப் பையன்கள்போல் இருக்கும். அடாணா என்றால், எனக்கு என்னவோ விறைப்பான போலீஸ்காரர் ஞாபகம் வரும். பூர்வி கல்யாணியைக் கேட்டால் பாதி சோகமும், பாதி சந்தோஷமும் இழைய, கல்சட்டியில் சாதம் பிசைந்து போடும் அம்மாவின் முகம் தோன்றும்.

பாட்டு வகுப்புகளில் போட்டி என்றால் அது எனக்கும் அகிலாவுக்கும்தான். என் பார்வையின்மை எனது கவனக் கூடுதலின் காரணம். இசை சொன்னபடி கேட்டது. மாஸ்டர் எப்படி இழுக்கிறாரோ அதே அளவு; அதே தீர்மானம்; அதே பாவம்; கார்வை எல்லாம். அகிலாவுக்கும் அதே அளவு தீர்மானம் உண்டு என்றாலும், நான் அனாயாசமாய்த் தொடும் எல்லைகளை அவள் கொஞ்சம் சிரமப்பட்டுத்தான் தொடுவாள். இத்தனைக்கும் நான், அகிலா, மாஸ்டர் மூவரும் ஒரே காம்பவுண்டிற்குள்தான் குடி இருக்கிறோம்.

''கணபதி''. வாசலில் அகிலாவின் குரல் கேட்டது. நான் டேப்ரிகார்டரை நிறுத்திவிட்டு எழுந்தேன். அம்மா அவசர அவசரமாய் எழுந்து வழியிலிருந்த ஏதோ ஒரு பொருளை எடுத்து ஓரமாய் வைக்கிறாள்.

நான் மெல்ல சுவரைப் பிடித்து வாசலுக்கு வந்தேன். தெளிவற்ற நிலையில் ஒரு பிம்பம் நிழலாடியது. ''என்ன அகிலா?'' என்றேன்.

"வேப்ப மரத்தடிக்கு வர்றியா?" என்றாள்.

எங்கள் காம்பவுண்டில் மிக வசதியான இடம் வேப்பமரம்தான். காம்பவுண்ட் நடுவில் பெரிய சிமெண்டினால் ஆன வட்டமான திட்டையின் நடுவில் இருப்பது. முப்பது வருஷ மரம். என் வாழ்வில் மறக்க முடியாதவற்றை லிஸ்ட் எடுத்தால், இந்த வேப்ப மரம் நிச்சயம் இடம்பெறும்.

"மணி பதினொண்ணு அடிச்சாச்சா?" என்றேன்.

"அடிச்சாச்சு."

பதினொரு மணியிலிருந்து அகிலாவின் அப்பா வெங்கடாசலம் தமது பழைய ராலிஸ் சைக்கிளில் மதிய உணவு அருந்த அவரது வருமானவரி அலுவலகத்திலிருந்து வரும் இரண்டு மணி வரை, வேப்ப மரம் எங்கள் ராஜ்யம். புரிதலின் இசைவு சரியான சுருதியில் சேர்ந்ததால்தான், இந்த ஆறேழு வருடங்களும் இந்த காம்பவுண்டும், சங்கீதமும், வேப்ப மரமும் எங்கள் வாழ்வோடு ஒன்றாகி விட்டன.

அவள் அமரச் சொன்ன இடத்தில் அமர்ந்தேன். சின்னதாக ஐந்து கட்டையில் இழுத்தாள்.

கல்யாணி.

அவள் குரல் வரும் திசை நோக்கி,



# கல்யாணி

சத்தியப்ரியன்

"இன்னைக்கு யாராச்சும் பெண் பார்க்க வர்றாங்களா அகிலா?'' என்றேன். என் மனதிற்குள் ஒரு சின்ன புறா சிறகுகளைப் படபடத்தது.

"ஆமாம்'' என்றாள்.

நான் பேசாமல் இருந்தேன்.

எங்கள் இருவரின் நடுவே கல்யாணி ராகம் கொஞ்ச நாட்களாய் கண்ணாமூச்சி ஆடிக்கொண்டிருந்தது. இதை நான் தெளிவாகச் சொன்னால்தான் அடுத்தவர்களுக்குப் புரியும்.

கல்யாணி ராகம் என்னுள் கல்ப விருட்சமாய் விரிந்ததே ஆறேழு வருஷங்களாகத்தான். மாஸ்டரிடம் நான் கீதம் வரை பாடம் வந்த பொழுது, அகிலாவின் வீட்டினர் இந்த காம்பவுண்டிற்குக் குடி வந்தனர். அகிலா வீட்டின் இரண்டாவது பெண். மூத்தவளைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டுத்தான் அவள் அப்பா இந்த காம்பவுண்டிற்குக் குடிவந்தார். அகிலாவுக்குப் பிறகு இரண்டு பெண்கள், ஒரு பையன் என மிகப்பெரிய குடும்பம். எவ்வளவு உபரி வருமானம் வந்தாலும் போதவில்லை. மாஸ்டரும் காம்பவுண்டுக்குள் இருக்கும் பல குடித்தனங்களில் ஒன்றில் இருந்ததால் அவர்களது சிரம திசையிலும் அகிலாவுக்குப் பாட்டு கற்றுக் கொள்ள அனுமதி கிடைத்தது.

அகிலாவின் அப்பாவைப் போல என் அப்பாவுக்குப் பிரமாதமான வேலை இல்லை. வீ பஜாரில் ஒரு துவரம் பருப்பு செட்டியாரிடம் கணக்கெழுதும் வேலை. எனக்கு ஒரு தம்பியும், தங்கையும் உள்ளனர். போஷாக்கு இல்லாத ஆகாரம், பன்னிரண்டு வயதில் வந்த விஷ ஜுரம் என் விழித் திரையில் ஏற்படுத்திய ஓட்டை எல்லாமாகச் சேர்ந்து என் பார்வையைப் போக்கியது. மதுரை, திருச்சி என அலைந்து பார்த்து விட்டு, இனிப் பயனில்லை என நானும், சூட்சும உருவங்கொண்ட ராகங்களுமாய்த் தங்கிவிட்டோம்.

''பொண்ணாப் பொறந்தா-சங்கீதம் தெரிஞ்சிருந்தா பெண் பார்க்க வர்றப்ப ரெண்டு பாட்டு பாடலாமே" என்றாள் அகிலாவின் தாயார். இது முதல் தீர்மானம்.

''பாட்டுக் கத்துக்கறது பொண்ணு பார்க்க வர்றவன் முன்னால பாட மட்டும்தானாம்'' என அகிலா இதே வேப்பமரத்தடியில் சிரித்தபடி தீர்மானத்தைக் கேலி செய்தாள். அப்பொழுதே அவளுக்கு இருபது வயதிருக்கும்.

அகிலாவின் உலகம் தீர்மானங்களுக்கு அப்பாற்பட்டது. எனவேதான் அவளால் சங்கீதத்துடன் இழைய முடிந்தது. மாஸ்டரும் ஜண்டை வரிசை வரை வந்திருந்த அவளை, என் பொறுப்பில் விட்டு விட்டு, கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்யச் சொன்னார். அகிலாவுக்கும் எனக்கும் ஓர் இசைவு ஏற்பட்டதற்கு முதல் காரணம், என்னைச் சந்திக்கும் எந்தப் புது நபரும் என்னைப் பார்த்து கேட்கும் முதல் கேள்வியான "எப்பலெருந்து பார்வை இப்படி ஆச்சு? பிறவியிலேயா? நடுவிலா?" என்ற கேள்வியைக் கேட்காமல் இருந்ததுதான். எனவேதான் நான் மிகுந்த ஈடுபாட்டுடன் கீதம், வர்ணம் இரண்டிலும் அவளைக் கைப்பிடித்து அழைத்துக் கொண்டு கீர்த்தனையில் கொண்டு விட்டேன். எங்கள் இருவருடைய அபார ஞானம் காரணமாக, மாஸ்டர் கால அளவுகளைக் கடந்து எப்பொழுது வேண்டுமானாலும் பாடம் சொல்லிக் கொடுக்க உடன்பட்டார். அவர் கீர்த்தனையில் முதன் முதலில் எடுத்தது கல்யாணி ராக கீர்த்தனைதான்.

''பாட்டுக் கத்துக்கறதும் நல்லதுதான். புகுந்த வீட்டில் சும்மா இருக்கும் நேரத்தில் நாலு பாட்டு கிளாஸ் எடுத்தா கணிசமான வரும்படி வரும்'' என்றாள் அகிலாவின் தாயார். இது இரண்டாவது தீர்மானம். பொருளாதாரத் தீர்மானம்.

தீர்மானங்கள் எதுவுமில்லாத எங்கள் வாழ்வில் முதன் முதலாக இலேசான அதிர்வு ஒன்று ஏற்பட்டது.

அகிலாவுக்கு வரன் தேட ஆரம்பித்தார்கள்.

"பெண் ஜன்மம் எடுத்ததே கண்டவன் முன்னாடி நமஸ்காரம் பண்ணிட்டு பாட்டுப் பாடத்தானா? கடங்காரனுங்க பெரிய கொம்பனுங்க மாதிரி ஆசனத்தில் அமர்ந்திருப்பானுங்க. நாம பவ்யமாப் போய் காலில் விழுந்து கும்பிடணும். நான் எவ்வளவோ மறுத்துப் பார்த்துட்டேன். நடக்கலை. இன்னிக்கு நிஜமாவே ஒரு தடியன் என்னைப் பெண் பார்க்க வர்றான்" என்றாள்.

நான் அவளைச் சமாதானம் செய்தேன்.

"பொண்ணு பார்க்க வர்றப்ப பொதுவா ஹிந்தோளம்தானே பாடுவா! நானும் அதைத்தான் பாடப் போறேன். ஆனா உனக்கும், எனக்கும் மட்டும் ஒரு ஒத்திசைவு வெச்சுப்போம். பெண் பார்க்க வர்றவனைப் பிடிக்கலைன்னு தீர்மானம் பண்ணிட்டா, நான் ஹிந்தோளம் பாடுவேன். ஆனா அவனைப் பிடிச்சிருக்கு ஒழியறான் போ என்றால், அன்னிக்கு ஹிமாத்ரி ஸுதேதான்... கல்யாணி" என்றாள்.

நான் குஷியாகத் தலையாட்டினேன்.

## தர்மசங்கடம்

திரைப்படங்களில் புகைபிடிக்கும் காட்சிகள் இடம்பெறுவது தொடர்பாக அன்புமணி தெரிவித்து வரும் கருத்துகள் காங்கிரஸ் வட்டாரத்தில் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. தமது துறைக்குத் தொடர்பில்லாத வேறொரு துறையின் நடவடிக்கைகளில் அன்புமணி மூக்கை நுழைப்பதாக அவர்கள் உணர்வதுதான் இதற்குக் காரணம் என்கிறது அவ்வட்டாரம்.

அன்று அவள் வெகு அழகாக ஹிந்தோளத்தில் பாபநாசம் சிவனின் பாடலைப் பாடினாள்.

''எல்லா ராகத்துக்கும் உருவம் உண்டுன்னு சொல்லுவியே, என் சாயலுக்கு என்ன ராகம் எனச் சொல் பார்ப்போம்'' என்றாள் அகிலா ஒருநாள்.


''மனசுக்கு ரம்யமா, பேசிண்டிருக்கறச்சே என் இருப்பை மறக்கச் செய்யும் நீ கல்யாணியாக இல்லாமல், வேறு என்ன ராகமாக இருக்க முடியும்?'' என்றேன்.

என் கரங்களைப் பற்றிக் கொண்டாள். அதன்

மேல் வெதுவெதுப்பான இரண்டு துளி கண்ணீர் விழுந்தது.

அப்புறம் நிறையப் பேர் பெண் பார்க்க வந்தார்கள். விவாகரத்து செய்த நாற்பது வயதைக் கடந்தவன் ஒருவன் வந்தான். முதல் மனைவியை சாகக் கொடுத்தவன் வந்தான். அசட்டுத்தனமும், விகார முகமும் கொண்ட ஒருவன் வந்தான். எல்லா வரன்கள் முன்பும் அகிலா வணங்கி அமர்ந்து ஹிந்தோளத்தில் பாடும் பொழுது, இந்த முறை அவன் பிழைத்தான் என நினைத்துக் கொள்வேன்.

இந்தச் சமயத்தில்தான் மாஸ்டர் என்னையும், அகிலாவையும் நான் கைந்து முறை விழாக்களில் பாட்டுப் பாட மேடை ஏற்றினார். உள்ளூர் தொலைக்காட்சி நிலையத்தினர் பண்டிகைகளின் பொழுது கர்நாடக இசை பாட என்னையே அழைக்க ஆரம்பித்தனர். பார்வையற்றவன் பாடும் சங்கீதத்திற்குக் கூடுதல் ஈர்ப்பு இருக்குமில்லையா? அதிகப்படியான பரிந்துரையாளர்கள் கிடைக்கக் கூடும். மாஸ்டர் இரண்டு முறை தமது மாணவர்களுக்கு என்னைப் பாடம் எடுக்கச் சொன்னார். என் பார்வையின்மை காரணமாக கவனம் கூடிப் போய், என் மாணவர்களை என்னால் எளிதில் திருத்த முடிந்தது. வாழ்க்கை பெரிய சவாலாக இருக்காது என்ற தைரியம் வந்தது. குரலும், உழைப்பும், திறனும் இருந்தால், கற்றுக்கொள்ள வருபவர்களும் அதிகரிப்பார்கள். பிரமாதமான வாழ்வு இல்லாவிட்டாலும் மானத்தோடு வாழ வருமானம் இல்லாமல் போகாது. எனக்கு நம்பிக்கை பிறந்தது.



அது தந்த தைரியமோ என்னவோ, ஒரு நாள் வேப்பமரத்தடியில் பேசிக் கொண்டிருந்த பொழுது, "அகிலா! நான் உன்னைப் பெண் பார்க்க வந்தா எனக்கு நீ என்ன பாட்டுப் பாடுவே?" என்றேன். அவள் முகத்தில் ஓடிய உணர்ச்சிகளைப் பார்க்க முடியவில்லையே என எனக்கு வருத்தமாக இருந்தது.

"நீ என்னைப் பெண் பார்க்க வருவாய் என்பது நடக்குமேயானால், என்னால் கல்யாணியைத் தவிர வேறு என்ன பாட முடியும்? ஆனால் நமது தீர்மானங்கள் கனவினாலும், லட்சியங்களினாலும் நிறைவேற்றப்படுபவை அல்ல" எனக் கூறிவிட்டு அவள் சியாமா சாஸ்திரியின் கீர்த்தனையைக் கல்யாணியில் பாடத் தொடங்கினாள். மெய் மறந்து கேட்ட என் கண்களில் கண்ணீர் வழிந்தது.

மதியம் மூன்று மணி சுமாருக்கு அகிலாவின் தாயார் அம்மாவிடம் ஒரு குவளை சர்க்கரை வாங்க வந்தவள், மாலை வரப் போகும் வரனைப் பற்றி கூறிக் கொண்டிருந்தாள். பையனுக்கு மோட்டாரில் வேலையாம். நான்கு தங்கைகளாம். அவர்கள் படிப்பு, கல்யாணம் என திருமணம் வேண்டாம் என இருந்தவன், முப்பது வயது கடந்து சம்மதித்துள்ளானாம். ஏழைப் பெண்தான் வேண்டுமாம். அதிலும் சங்கீதம் தெரிந்தவள்தான் வேண்டுமாம்.

மாலையில் ஆட்டோ வந்து நிற்கும் ஒலி கேட்டது.

"அவா வந்துட்டா" என்றாள் அம்மா.

எனக்குள் மெலிதாக ஒரு படபடப்பு ஏற்பட்டது. மிக நெகிழ்வாக உணர்ந்தேன்.

"பையன் ரொம்ப சுமாராத் தாண்டா இருக்கான்."

"அப்படியா?"

"மனுஷாளும் ஓஹோன்னு இருக்கறவாளா தெரியலை."

"ம்."

"இவ சமத்து. நன்னா குடித்தனம் பண்ணினா சரி."

"நல்ல ஞானம் இருக்கேம்மா அகிலாவிடம்" என்றேன்.

அம்மா பதில் கூறவில்லை.

"என்ன பாட்டு சத்தத்தையே காணோம்? பையன் நல்ல சங்கீத ரசனை உள்ளவன் என்றாளே மாமி" என்றாள் அம்மா.

நான் என் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு காத்திருந்தேன். பேச்சும், சிரிப்புமாய் இருந்தது. நேரம் மெல்ல மெல்ல நகர்ந்தது. திடீரென ஓர் அமைதி. நான் கவனமானேன். தம்புராவின் சுருதி மீட்டல். இசை எனும் பெருவெளியில் சங்கமிப்பதற்காக ஒத்த ஸ்ருதியில் இணைய அலையும் அகிலாவின் பரிதவிப்பு.

கல்யாணி! ○



# நீங்களும் டாக்டராகலாம்!

**தகவல்:** தற்போது லேப்டாப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 'டப்' 'டப்'பென பெருகிக்கொண்டே இருக்கிறது. உங்க நிழல்போல கூடவே வரும் லேப்டாப்புக்கு, லொக் லொக், தலை வலி, காய்ச்சல் இப்படி ஏதாவது பிரச்னைகள் வர வாய்ப்பிருக்கு. உடனே அதை நீங்க ரிப்பேர் செய்ய, டாக்டர் கிட்ட தூக்கிட்டுப் போகணும்னு அவசியமில்லை. நீங்களே உட்கார்ந்து 'கஷாயம்' காய்ச்சிக் கொடுத்து குணப்படுத்தலாம். இப்படி உங்க லேப்டாப்பின் லப்டப்பைச் சீராக்க உதவும் தளம் www.repair4laptop.org ரிப்பேர் செய்ய வீடியோ குறிப்புகள் இருக்கு. பழுது பார்க்க புதிதாகக் குறிப்புகளும் இருக்கு. அந்தப் புத்தகங்களை வாங்கும் வசதியும் இருக்கு. இனிமே நீங்களும் (லேப்டாப்) டாக்டர்தான்!

**டௌன்லோட்:** "இணைய இசை ரசிகர்களே! உங்கள் காதுகளுக்கு ஓர் கற்கண்டு அறிவிப்பு! உங்ககிட்ட இருக்கிற பழைய நகைகளுக்கு புதிய நகைகள்... அடச்சீ.... உங்ககிட்ட இருக்கிற பழைய மியூசிக் ஃபார்மெட் பைல்களை, உங்க விருப்பம் போல மாத்தலாம். mp3 ஆக்கலாம், mp4 ஆக்கலாம், wma ஆக்கலாம். எந்த ஃபார்மெட்டையும் எந்த ஃபார்மெட்டுக்கும் மாத்தலாம். அதுக்கு நாங்க ஒரு கருவி வைச்சிருக்கோம். அதுக்குப் பேரு dbpower amp மியூசிக் கன்வெர்ட்டருங்க. துட்டுல்லாம் கேட்கமாட்டோமுங்க. www.dbpoweramp.com/dmc.htmக்கு போயி இலவசமா இறக்குமதி பண்ணிக்கோங்க"ன்னு சைலண்ட்டா அலறுது இந்தத் தளம். உபயோகிச்சுக்கோங்க!

**வலைப்பதிவு:** ரொம்ப வருஷத்துக்கு முன்னாடி சுஜாதா ஒரு கட்டுரையில், அவர் நண்பர் பா பா ப்ளாக்ஷீப்பை தமிழில் மொழி பெயர்த்துள்ளதாக எழுதியிருந்தார். இப்போது மெட்ராஸ் பாஷையில் டுவிங்கிள் டுவிங்கிள் லிட்டில் ஸ்டாரைப் பாடினால் இப்படி இருக்குமா?

பளிச்சி பளிச்சி தம்மாத்துண்டு இஸ்டாரே!

ஆச்சரியமாத்தான் கீது நான் உன்ன பாக்கச் சொல்லோ!

உலகத்த விட்டு எம்மா ஒசரத்துல கீர.

வானத்துல ஒரு வைரமணியாட்டமா மின்னிக்கினு!

பளிச்சி பளிச்சி தம்மாத்துண்டு இஸ்டாரே!

(mugamoodi.blogspot.com - வலைப் பதிவிலிருந்து)

அட!



நண்பனே... புதுசா கேமரா மொபைல் வாங்கியிருக்கேன்னு சொன்னியே... அடக் கருமமே, அதானா இது!

\- வலைஞன்

# போட்டுத் தாக்கு!

## விஜயசாந்தியிடம் கேட்கக் கூடாத பத்துக் கேள்விகள் :

1. கோலிவுட்ல உங்க 'உதையுதிர் காலம்' முடிவுக்கு வந்திடுச்சா?

2. 'விஜய' டி. ராஜேந்தர், 'விஜய'காந்த், 'விஜய'சாந்தி... இப்படி எல்லாரும் (பேச வேண்டிய இடத்துல) பேசி வைச்சு, கட்சி ஆரம்பிக்கிறீங்களா?

3. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை நீங்க விஜயசாந்தியா? வி'ஜெ'யசாந்தியா?

4. சமீபத்துல வாஜ்பாய் போன் பண்ணி உங்ககிட்ட, 'கிளிக்கு ரெக்கை முளைச்சிடுச்சு. பறந்து போயிடுச்சு'ன்னு புலம்பினாராமே, உண்மையா?

5. உங்க கட்சியில உறுப்பினரா சேர, 'அடி'ப்படைத் தகுதி அடிதடியா?

6. இனிமே உங்க அகராதியில 'பி.ஜே.பி'க்கு அர்த்தம் 'பிரிஞ்சு வந்த ஜனதா பார்ட்டி' தானே?

7. எங்க ஊர்ல ஒருத்தர் 'தெலுங்குக் குடிதாங்கி'ன்னு உங்களுக்குப் பேர் வைச்சிருக்காரு தெரியுமா?

8. தமிழ்நாட்ல 'சந்திர பாபு' காமெடி நடிகர். உங்க தெலுங்கானாவில 'வில்லனா'?

9. 'அடி உதவுற மாதிரி' - இந்தப் பழமொழியை தெலுங்குல எப்படிச் சொல்லணும்?

10. நீங்க ஜெயிச்சு சட்ட சபைக்குப் போனா, எதிர்க் கட்சி எம்எல்ஏக்கள் எல்லாம் 'எந்த தைரியத்துல' அங்கே வருவாங்க?



பரமு பக்கம்

"வெயில் மண்டையைப் பிளக்குதே... குடையை எடுத்துக்கிட்டு வரக்கூடாதா சார்?"

"வீட்டுல இருந்த ஒரே குடையையும் பக்கத்து வீட்டுப் பாவி வாங்கிட்டுப் போயிட்டான்!"

"குடையோட சொந்தக்காரன் வெயில்ல போகணுமேங்கற அறிவு இல்லையா அவனுக்கு?"

''இப்படித்தான் என்னைத் திட்டிட்டு தன் குடையை வாங்கிட்டுப் போயிட்டான் சார்!"

- கிரிஜா நந்தகோபால்





''கங்கூலிங்கற புனை பெயர்ல எதுவும் எழுதாதீங்கன்னு சொன்னேனே, கேட்டீங்களா?''

''ஏன் அப்படிச் சொல்றே...''

''எல்லாமே போன வேகத்தில் திரும்ப வந்துடுச்சி!...''


- ஈரோடு சௌந்தர்ராஜன்

"அவன் அரசியல்வாதியோட பையன்னு எப்படிச் சொல்றீங்க?''

"பின்ன, தமிழ் வளர என்ன பண்ணணும்னு கேட்டா, மும்பை எக்ஸ்பிரஸ் படத்தோட பேரை மாத்தணும்னு சொல்றானே...''

- எம். வினோத்





"ஆபரேஷன் சக்ஸஸ்..."

"கொன்னுட்டீங்க டாக்டர்..."

- கே.ஆனந்தன்

# "நாலு வார்த்தை சொல்லுங்க!"

"நீங்க எழுதிக் கொடுத்த டானிக் மருந்து வாங்க எங்கிட்டே பணம் இல்லே, டாக்டர்!"

"சரி, அதுக்கு நான் என்ன செய்யணும்?"

"நாலு வார்த்தை என்னைப் பாராட்டிப் பேசினீங்கன்னா, எனக்கு டானிக் குடிச்ச மாதிரி இருக்கும்!"

- கே. ஆனந்தன்





"பீரோவுல சாவி தொங்கிட்டிருந்தபோது ஏன் பீரோவை உடைச்சுத் திறந்தே?"

"தொழில் தருமம்னு ஒண்ணு இருக்குங்களே எசமான்."

- மணவை பாலு

# நகரப் பேருந்தில்

வாழ்வோடு தொடர்பில்லாமல் படைப்பு என்பது சாத்தியமில்லை என்றபோதும், பெரும்பாலும் நமக்கு வாசிக்கக் கிடைக்கிற அல்லது பார்க்கக் கிடைக்கிற கதைகள், வாழ்க்கையுடன் பெருமளவு அந்நியப்பட்டிருப்பதை கவனித்திருக்கலாம்.

நடந்ததுதான், நடப்பதுதான் என்று தோன்றக்கூடிய கதைகள்கூட எங்காவது, யாருக்காவது, எப்போதாவது நடந்த, நடக்கிற விஷயங்களாகவே பெரும்பாலும் இருக்குமே தவிர, மானுடகுலம் முழுமைக்கும் பொதுவான அனுபவங்களைக் கதாசிரியர்கள் அவ்வளவாகப் பொருட்படுத்த மாட்டார்கள். வித்தியாசப்படுத்திக் காட்டும் முயற்சியில் முதலில் பலியாவது இந்த அம்சம்தான். அதையும் மீறி அனைவருக்குமான அனுபவங்களை எழுத்தில் வடிக்கும்போதுதான், ஒரு படைப்பு கலைக்கோலம் கொள்கிறது. காலம் கடந்து நிற்கிறது.

தமிழில் வாழ்வோடு இரண்டறக் கலந்த படைப்புகளைத் தந்த படைப்பாளிகள் பலபேர் இருக்கிறார்கள். துரதிருஷ்டவசமாகப் பெரும்பாலான வாசகர்கள் அவர்களை அவ்வளவாக அறிந்திருக்க மாட்டார்கள். இது ஒரு விபத்து. மிக அவலமான விபத்து. கதைகளைப் பொழுதுபோவதற்காக மட்டுமே விரும்பக்கூடிய மனோபாவத்துக்குக் கொடுக்கிற விலை. இதில் தப்பித்தவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவர்களுள் முக்கியமான ஒருவர், பிரபஞ்சன்.



• பிரபஞ்சன்

பிரபஞ்சன், பாண்டிச்சேரிக்காரர். முழு நேர எழுத்தாளராக இருக்கிற ஒரே காரணத்தினாலேயே சென்னையில் வசிப்பவர். ஒரு சிறு சந்தர்ப்பம் - ஒரு நாள் ஓய்வு கிடைத்தால்கூட ஊருக்குப் போய்விட மிகவும் விரும்புபவர். சொந்த மண் மீது அவர் கொண்டிருக்கும் நேசம், உணர்வுபூர்வமானதல்ல. மாறாக, பாண்டிச்சேரியின் சரித்திரத்தில் தோய்ந்து, அம்மாநிலத்தின் ஒவ்வொரு சந்துபொந்துக்குள்ளும் ஒளிந்திருக்கும் கதைகளுடன் வசிக்கவே அவருக்கு விருப்பம்.

பிரபஞ்சனின் மிகப்பெரிய பலம், அவர் பிரமைகள் இல்லாதவர் என்பது. பெரிய எழுத்தாளர். சிறிய வயதிலேயே சாகித்ய அகாடமி விருது பெற்றவர். தமிழ்ச் சிறுகதை வரலாறு என்று எழுதினால் கண்டிப்பாக ஓர் அத்தியாயம் ஆகக்கூடியவர். ஆனபோதிலும் தரையில் கால் பதித்து நடப்பவர். பாசாங்கற்ற எளிமையில் பிரமிப்பூட்டுபவர்.

"எனக்குப் பெரிய எதிர்பார்ப்பு எதுவும் இல்லை. வேளைக்குச் சாப்பாடு. ஒதுங்க ஒரு இடம்.

**பின்கதைச் சுருக்கம்**



# ஒரு ராஜகுமாரன்!

10 பா.ராகவன்

பொழுது விடிஞ்சா என்ன ஆகுமோன்னு பயப்படாம தூங்கற அளவுக்குக் கொஞ்சம் காசு. போதும்" என்பார்.

அவரது இந்த விலைமதிப்பற்ற எளிமை, அப்படியே அவரது படைப்புகளிலும் பிரதிபலிக்கும். பிரபஞ்சனின் பாத்திரங்கள், வந்துபோகும் மனிதர்கள் அல்லர். அவர்கள் வாழ்ந்து போகும் ஜீவன்கள். எந்த ஜாலமும் இல்லாத அவரது நடை ஒரு வரப்பிரசாதம்.

அவரது படைப்புகளிலேயே தலைசிறந்தது என்று நான் கருதுவது, மகாநதி. இந்த நாவலை பிரபஞ்சன் எந்தப் பத்திரிகையிலும் தொடராக எழுதவில்லை. நேராகப புத்தகமாகவே வெளியிட்டார்.

"இது தொடரா வந்திருந்தா நாலு காசு கிடைச்சிருக்கும்தான். ஆனா அப்படி செய்ய மனசு வரலநாவல் வடிவம் இதுல பூரணமாயிருக்கறதா தோணுது. அதைக் கெடுக்க விரும்பல'' என்று ஒருமுறை என்னிடம் சொல்லியிருக்கிறார்.


மகாநதி, அவரது வாழ்க்கை. அவரது குடும்பத்தின் சரித்திரம்.

பாண்டிச்சேரியில் பிரபஞ்சனின் தந்தை ஒரு காலத்தில் பெரிய பணக்காரராக இருந்தவர். மிகப்பெரிய தென்னந்தோப்பு உண்டு. கள் இறக்கி விற்கும் வியாபாரத்தில் கொழித்தவர். சீமைச் சரக்குகள் அதிகம் புழக்கத்துக்கு வராத காலத்தில், கள்ளுக்கடைகள்தான் கோலோச்சிக் கொண்டிருந்தன. அதுவும் பாண்டிச்சேரியில் கேட்க வேண்டுமா?

ஆனால் திடீரென்று காந்தியடிகள் மீது ஏற்பட்ட ஈர்ப்பு காரணமாக, ஒரே நாளில் தமது அத்தனை கள்ளுக்கடைகளையும் இழுத்து மூடிவிட்டு காங்கிரஸ் பேரியக்கத்துடன் தம்மை அவர் இணைத்துக் கொண்டு சுதந்தரப் போரில் ஆர்வம் செலுத்த ஆரம்பித்து விட்டதாக பிரபஞ்சன் சொன்னார்.

லட்சியம் பெரிதுதான். இலக்கு உயர்வானதுதான். முடிவும் சரியானதுதான். ஆனால் நடைமுறை வாழ்வென்பது லட்சியங்களின் மாபெரும் எதிரியல்லவா? படிப்படியாகப் பொருளாதார நிலைமை சீர்குலைந்து போனது. ஏழைமை. அது எப்படியிருக்கும்? அது வரை பிரபஞ்சனுக்கு அது தெரியாது.

'சில்க் சட்டை. அத்தர், ஜவ்வாது. கையில் ஒரு பந்து மல்லிகைப் பூ சுற்றிக் கொண்டு நண்பர்களுடன் கடற்கரையோரம் கவிதை பேசிக்கொண்டு



போவேன். ஊருக்கு நாடகக் கம்பெனி ஏதாவது வந்திருந்தால் பொழுதெல்லாம் அங்கேதான். ஒரு ராஜகுமாரனாகத்தான் அதுகாறும் மனத்தில் என்னை உருவகப்படுத்தி வைத்திருந்தேன். கண் விழித்துப் பார்த்தபோதுதான் புஷ்பக விமானத்தில் அல்லாமல் நகரப் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்தது தெரிந்தது" என்றார் பிரபஞ்சன்.

பிரபஞ்சனின் மகாநதி நாவலின் மையப்புள்ளியே இதுதான். மிகையற்ற யதார்த்தம். உச்சிக்குப் போய், தடாலென்று சரிந்து, மீண்டும் எழுந்து கொள்ள முயற்சி செய்யும் ஒரு குடும்பத்தின் சரித்திரம். இதில் பிரபஞ்சனும் இருக்கிறார். அவரது தந்தையும் இருக்கிறார். அவருக்குத் தெரிந்த பாண்டிச்சேரிக்காரர்கள் பல பேர் இருக்கிறார்கள். எல்லோரும் மனிதர்களாகவே இருக்கிறார்கள்.

ஆனால் மகாநதி, அந்த ஒரு குடும்பத்தின் கதை மட்டுமல்ல. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் நடைபெற்ற இந்திய சுதந்தரப் போராட்டத்தின் ஒரு பக்க வரலாறு அதில் கலந்திருக்கிறது. சுதந்தரப் போர் என்கிற ஓர் அம்சம், சராசரி மக்களின் வாழ்வை, மனத்தை எந்தளவு பாதித்திருந்தது என்பதை இந்தத் தலைமுறையினர் புரிந்துகொள்வது சற்றே சிரமமானது. நாமெல்லாம் புத்தகங்களில் படிக்கிறோம். பாடநூல்களில் படிக்கிறோம். ஆனால் வாழ்ந்து பார்ப்பது வேறல்லவா?

பிரபஞ்சன் வாழ்ந்து பார்த்தவர். போராட்டத்தின் விளைவுகளைத் தம் சொந்த வீட்டிலேயே கண்ணாரக் கண்டவர்.

சுதந்தரப் போராட்டம் என்பதை இந்நாவலின் ஒரு முக்கியக் குறியீடாகக் கூட வைத்து வாசித்துப் பார்க்கலாம். போராட்டங்கள் இல்லாத வாழ்க்கைதான் ஏது? வெற்றியும் தோல்வியும் மட்டுமா வாழ்க்கை? வாழ்க்கை என்பது வாழ்ந்து தீர்ப்பது தான். இனிப்புக்குச் சமமான கசப்பு. அன்புக்குச் சமமான குரோதம். கனிவுக்குச் சமமான துவேஷம். எல்லாம், எல்லாமே கலந்ததுதானே?

இந்த நாவலின் ஆகப்பெரிய பலமே இதுதான். கதையோட்டத்துக்காகவென்று வாழ்வின் எந்த ஒரு அம்சத்தையும் கூட்டியோ, குறைத்தோ பிரபஞ்சன் தரவேயில்லை. எல்லாம் அப்படி அப்படியே. ஜனிக்கும் குழந்தையின் உடல் சூடு. சுதசுதப்பு, மென்மை, வீரியம் மிக்க அழுகை. அதன் அடிநாதமாக ஒட்டி வந்து நமக்களிக்கும் பேரானந்தம். வேறு உதாரணமே சொல்ல முடியாது. பிரபஞ்சனின் மகாநதி இதுதான். இப்படிப்பட்டதுதான். பிறந்த குழந்தை.

தமிழில் இதுகாறும் எழுதப்பட்ட சிறந்த நாவல்களில் முதல் வரிசையில் நிற்பதற்கான அனைத்துத் தகுதிகளையும் கொண்ட படைப்பு இது. வெளியாகி பதினைந்து ஆண்டுகாலம் ஆகிறது. முதல் வாசிப்பில் இது உண்டாக்கிய சிலிர்ப்பு, இன்று நினைத்தாலும் அப்படியேதான் இருக்கிறது.

வாழ்க்கையும் நதியும் அலுக்கிற விஷயங்களா என்ன?

(தொடரும்)



# உயர்வு தாழ்வு!

ஒரு விஷயம் சண்டைக்கு ஆஸ்பதமாக இருக்கிறது என்ற ஒரு காரணத்துக்காக, அந்த விஷயத்தையே அழித்து விட வேண்டும் என்றால், லோகமே நடக்க முடியாது. லோகத்தில் எதையெடுத்தாலும் கட்சி-பிரதிகட்சி இருக்கத்தான் செய்யும்; அபிப்பிராய பேதம் வரத்தான் செய்யும். அப்படியானால் ஒவ்வொரு விஷயமாக அழித்துக் கொண்டே போவதா?

எல்லாரும் பொதுவாக தங்கள் கொள்கையே ஜனநாயகப் பண்பு (டெமாக்ரஸி) என்று மட்டும் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் உள்ளூர இருக்கிற வித்தியாசங்களோ பெரியதாக இருப்பதால் தான் இத்தனை சண்டை ஏற்படுகிறது.

சண்டையிருக்கிறதே என்பதற்காக ஒரு 'ஐடியாலஜி'யும் வேண்டாம் என்றால்? ராஜாங்கம் என்பதே ஒவ்வொரு கொள்கையை உடையவர்களால் ஏற்படுவது தானே? அரசியல் கொள்கை ஒன்றுமே வேண்டாம் என்றால், சர்க்காரே வேண்டாம் என்றல்லவா ஆகும்? அப்படியானால் சர்க்கார் என்ற அமைப்பையே அழித்து விட்டு மிருகங்கள் மாதிரி ஆகிவிடுவதா? பாஷைச் சண்டையிருப்பதால் பாஷையே வேண்டாம், கொள்கைச் சண்டையிருப்பதால் கவர்ன்மெண்டே வேண்டாம் என்று ஒப்புக்கொண்டால் ஜாதிச் சண்டை - மதச்சண்டைகள் இருப்பதால் ஜாதி மதமும் வேண்டாம்தான். ஆக, பரிகாரம் என்னவென்றால் சண்டைகளைத் தீர்ப்பதுதானே தவிர, மூல தத்துவத்தையே தீர்த்துக் கட்டி விடுவதல்ல.

உயர்த்தி-தாழ்த்தியே இல்லாமல், சண்டையே இல்லாமல், எல்லோரும் அரன்குடி மக்களாக அன்போடு, ஐக்கியத்தோடு, சௌஜன்யத்தோடு, பரஸ்பர விசுவாசத்தோடு, பரஸ்பர சகாயம் செய்து கொண்டு, எங்கேயும் சாந்தியையும் சந்தோஷத்தையும் உண்டாக்க வேண்டும்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

**அருள்வாக்கு**

# அணு உலைக்கே சவால்விடும் அணை!



-திருப்பூர் தீகில்

* ஒரத்துப்பாளையம் அணை

வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே வந்த கண்ணாத்தா குரல் கொடுக்கிறார். ''ஏய் செவ்வந்தி... மலரு... பட்டம்மா! சீக்கிரம் வாங்க'' பத்துப் பதினைந்துப் பேராய் புறப்படுகிறார்கள். எல்லோர் கைகளிலும் பிளாஸ்டிக் குடங்கள். கொளுத்தும் வெயிலில் மூன்று கிலோமீட்டர் தூரம் தீர்த்த யாத்திரை. இது எங்கோ நிகழும் காட்சியல்ல... தீய்ந்து கருகிக் கிடக்கும் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களின் தினசரி சோகம். காரணம், கடல் மாதிரி நிரம்பி நின்று பயமுறுத்திக் கொண்டிருக்கும் அணை. அது பாசன அணையா? இல்லை பாஷாண அணை!

சென்னிமலையிலிருந்து பன்னிரண்டு கி.மீ தூரத்தில் நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது அந்த ஒரத்துப்பாளையம் அணை. இரண்டேகால் கி.மீ. நீளம். அணையின் நீர் மட்டம் 40 அடி. மொத்தப் பரப்பளவு சுமார் ஆயிரத்து நூறு ஏக்கர். அதில் எண்ணூறு ஏக்கருக்கு மேலான பரப்பளவில் கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் தேங்கி நிற்பது தண்ணீரல்ல, விஷம்! ஆம், திருப்பூர் சாயப்பட்டறைகளின் ஒட்டுமொத்தக் கழிவு நீரே. இப்படி ஒரத்துப்பாளையம் அணை நீரோடு கலந்து நஞ்சாகிக் கிடக்கிறது.

எப்படி நிகழ்ந்தது இந்த விபரீதம்?

வெள்ளியங்கிரி மலையிலிருந்து உற்பத்தியாகி ஓடி வரும் நொய்யல் ஆற்றின் குறுக்கே மூன்று இடங்களில் அணைகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றுள் தலைமையானது ஒரத்துப்பாளையம் அணை. இந்த அணைகள் கட்டப்பட்ட 82லிருந்து 92ம் வருடம் வரைக்குமாக நொய்யல் ஆற்றுப் பாசன விவசாயிகளுக்குப் பிரச்சனைகள் ஏதுமில்லை. காரணம், இப்போதிருப்பது போல் திருப்பூரில் சாயப்பட்டறைகள் அன்றில்லை. இன்றோ சுமார் ஆயிரம் பட்



* நொய்யல் ஆற்றில் ஓடி வரும் சாயக் கழிவு நீர்...



* தண்ணீரைத் தேடி...

டறைகள்! அவற்றின் ஒட்டுமொத்தக் கழிவு நீரையும் நொய்யல் ஆற்றுப் படுகையில் பாயவிட்டு, ஒரத்துப்பாளையம் அணையின் மொத்தக் கொள்ளளவையும் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டன. கடந்த பத்தாண்டுகளாக நொய்யல் பாசனப் பகுதி விவசாயிகள் மிகவும் நொந்து போயுள்ளனர்.

“இந்த நிலை இன்னும் நீடித்தால் பத்தாண்டுகளில் நொய்யல் ஆற்றின் பாசனப் பகுதி பாலைவனமாக மாறிப் போய்விடும். சுற்றுப்புற கிராமங்களின் குடிநீர் மற்றும் பாசன நீர் ஆதாரங்கள் எல்லாமே பாழடைந்து போய்விட்டன. இதனால் கிராம மக்கள் பலரும் பல வித நோய்களுக்கு ஆளாகியுள்ளனர். எனக்குத் தெரிந்தவரையில், கிராமப்புறங்களில் கடந்த பத்தாண்டுகளுக்குள்ளாக திருமணமானவர்களில், ஐம்பது சதவிகித தம்பதியினர் குழந்தைப் பேறு அற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக நொய்யல் ஆற்றில் பாய்ந்து வந்த நல்ல தண்ணீர் திரும்பவும் எங்களுக்குக் கிடைக்க வேண்டும். எங்கள் பகுதி மக்களின் மிக எளிய அடிப்படை வாழ்க்கைக்கே பெரும் சவாலாக இருந்து வருகிறது!” என்றார் அஞ்சூர் - புரசப்பாளையம் கிராமத்தில் வசித்து வரும் கொடுமுடி நீதிமன்ற வழக்குரைஞர் மகேஸ்வரி.

நொய்யல் ஆற்றுப் பகுதியில் பெரும்பாலான கிராம மக்கள், குடிநீர் தேவைக்காக வெகு தொலைவு சென்றே நல்ல தண்ணீர் சுமந்து வருகின்றனர். சாதாரணமாக 300 ஈ.சி.க்கு (உப்புத் தன்மை) கீழே இருந்தால் மட்டுமே, அதனைக் குடிநீராகப் பயன்படுத்த முடியுமாம். இப் பகுதிகளில் குடிநீரைப் பரிசோதித்துப் பார்த்ததில் 1500லிருந்து 2000க்கும்

மேலான அளவுக்கு ஈ.சி இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. "எங்க ஊரு தண்ணிய வாயில வைக்க விளங்காதுங்க. மக்க மனுசாளுன்னு இல்ல... ஆடு மாடுகள்லாம் இங்கத்தி தண்ணிய மோந்து கூடப் பார்க்காதுங்க. ரொம்பத் தொலைவு போயித்தான் மக்க மனுசாளுக்கு மட்டுமில்லாம, ஆடு மாடுங்களுக்கும் சேர்த்து நல்ல தண்ணி கொண்டாந்து சேர்க்க வேண்டியிருக்கு. அங்ஙனெயும் தண்ணிக்குப் பாடாப் போச்சுன்னா... கெடைக்கற தண்ணிய மாட்டுக்கு வெச்சா... மறுநாளே அதுக்கு வயித்தால போயி நோவு வந்துடுதுங்க. மனுசான் மட்டுமில்ல... ஆடு மாடுங்களும் அவதிப்படுதுங்க எங்க ஊர்ப் பக்கம்!" என்று ஆற்றாமையுடன் கூறினார் வேலாயுதம்பாளையம் வள்ளியாத்தாள்.

**"எங்க தோட்டத்துக் கேணியில 8,200 TDS இருக்கு! இந்த தண்ணியில எப்படிப் பயிர் வெளையும்?"**



• வளராத தென்னை!


சாகுபடி சமயங்களில் ஒரத்துப் பாளையம் அணையிலிருந்து வெளியேற்றப் படும் சாயக்கழிவு நீரினால், நொய்யல் ஆற்றுப் பாசனப் பகுதி விவசாயம், விஷ விவசாயமாக மாறிய பயங்கரம் நடந்த பிறகே கொதித்தெழுந்துள்ளனர் விவசாயிகள். இரண்டு ஆண்டுகளுக்கு முன் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவசர அவசரமாக விரைவு விசாரணை மனுவைப் போட்டிருக்கின்றனர். இந்தக் கோடை காலத்திலேயே அணையில் தேங்கியிருக்கும் சாயக் கழிவுநீர் முழுவதுமாக திறந்து விடப் பட்டுவிட வேண்டும் எனவும், அதன் பின்னர் சாயக் கழிவு நீர் நொய்யல் ஆற்றில் துளியும் கலக்கக் கூடாதென்றும் திருப்பூர் சாயப்பட்டறைகளுக்கு உத்தரவிடுமாறு நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளனர்.

கோடை விடுமுறையிலும் வழக்கினை விரைந்து விசாரித்த சென்னை உயர்நீதி மன்றம், "வாரம் ஐந்து நாட்கள் தினசரி வினாடிக்கு 40 கன அடி வீதம், ஒரு வாரம் விட்டு ஒரு வாரம், அணையில் தேங்கி நிற்கும் கழிவு நீரை வெளியேற்ற வேண்டும். முழுமையாகத் தண்ணீர் வெளியேற்றப் பட்டவுடன் அணைக்குள் படிந்திருக்கும் சாயக் கழிவு வண்டல்களை அப்புறப்படுத்தித் தர வேண்டுமென பொதுப்பணித் துறைக்கு உத்தரவு பிறப்பித்தது. ஒரு வருட காலக் கெடுவுக்குள்ளாக திருப்பூர் சாயப் பட்டறைகள் அனைத்தும் தங்கள் சாயக் கழிவுநீரில் ஒருதுளி கூட நொய்யல் ஆற்றுக்குத் திருப்பி விடாதபடிக்கு மாற்று ஏற்பாடுகள் செய்துகொள்ள வேண்டும்!" என்றும் தனது இந்த இடைக்கால உத்தரவில் தெரிவித்திருக்கிறது.

நத்தம்காட்டுத் தோட்டம் என்பது

ஒரத்துப்பாளையம் அணையிலிருந்து மூன்னூறு அடி தூரத்தில் இருக்கிறது. "அணை கட்டனதுக்கு அப்புறமா நாலு வருஷம் விவசாயம் நல்லாத்தான் இருந் திச்சு. 96க்குப் பின்னாடிதான் எந்த சாகு படியும் சரியா பண்ண முடியலை. இந்த அணையோட தண்ணீர் எதற்குமே பயன் படுத்த முடியாத தண்ணீர்னு பொதுப் பணித் துறையினரே சொல்லிட்டாங்க. ஏழு ஏக்கர் எங்க காடு. தென்னங்கன்று வெச்சு அஞ்சு வருஷம் ஆச்சு. பாருங்க, இந்தத் தென்னங்கன்று தரையை விட்டு மேலே எழுந்திருப்பனாங்குது. 2000 TDS (Total Dissolved Salts) மேலிருக்கும் தண்ணீரை எந்தக் காட்டுல பாய்ச்சினாலும் பயிர் வளராது. எங்க தோட்டத்துக் கேணியில 8,200 TDS இருக்கு. எப்படி பயிர் வெளை யும்!" என்று துயரம் தோய்ந்த குரலில் பேசுகிறார் கந்தசாமி.

"பாதிக்கப்பட்ட விளைநிலங்கள், நிலத் தடி நீரின் தன்மை பத்தி ஒண்ணரை வரு ஷத்துக்கு முன்னாடி சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தினர் நேரில் வந்து ஆய்வு செய்தாங்க. பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு நிவாரணத் தொகையா 114 கோடி ரூபாய் தரணும்னு அறிக்கைலே சொன்னாங்க. நொய்யல் ஆற்றுப் பகுதி விவசாயிகளைப் பொறுத்த மட்டுல அதுவே கொறவான தொகதான்" என் கிறார் பாதிக்கப்பட்ட விவசாயியான அத் தப்பக் கவுண்டர்.



• வள்ளியாத்தாள்



• கந்தசாமி



• கணேசன்



• மகேஸ்வரி



• அத்தப்பக் கவுண்டர்

"ஆனால் அதன் பின்னர் சென்னை உயர்நீதிமன்றத்தால நியமிக்கப்பட்ட நீதி பதி பாஸ்கரன் தலைமையிலான குழு ஒண்ணு, நேரடி ஆய்வு செய்து விவசாயி களுக்கு நிவாரணத் தொகையா 24 கோடி ரூபாய் தரணும்னு அறிக்கை சமர்ப் பிச்சிருக்கு. நொய்யல் ஆற்றுப் பகுதி விவ சாயிகள் கடந்த பத்தாண்டுகளா இழந் துள்ளவற்றுக்கு, இதெல்லாம் யானைப் பசிக்கு சோளப் பொரி போடுறது போலத் தான்" என நம்மிடம் ஆதங்கப்பட்டார் மற்றொரு விவசாயியான கணேசன்.

கடந்த பத்தாண்டுகளாக எரிந்து வரும் இப்பிரச்னைக்காக விவசாயிகள் தொடர்ந்து போராடி வந்ததை மாநில அரசும் சரி, மாசுக் கட்டுப் பாட்டு வாரியமும் சரி, திருப்பூர் சாயப்பட்டறை களும் சரி, கண்டுகொள் ளவே இல்லையாம்.

'சாயப்பட்டறைகளின் கழிவு நீர் இனிமேல் நொய் யல் ஆற்றில் கலந்திடாத படிக்கு திருப்பூர் சாயப் பட்டறையினர் இன்னும் ஒரு வருட காலக் கெடு வுக்குள் மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையேல் சாயப்பட்டறைகளை சீல் வைக்க நேரிடும்' என்று எச்சரித்துள்ளது சென்னை உயர்நீதிமன்றம். இவற்றுக்கெல் லாம் செவி மடுத்து மாநில அரசும், திருப்பூர் சாயப்பட்டறைகளும் செயல்படப் போகும் வேகத்தைப் பொறுத்தே நொய்யல் ஆற்றுப் பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரின் நிகழ்கால மற்றும் எதிர்கால வாழ்க்கை அடங்கியுள் ளது. இல்லையென்றால் அணு உலை, அணுகுண்டு போல, தீராத ஆபத்தாக ஒரத் துப்பாளையம் அணை மாறிவிடும்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

# சனிப்பெயர்ச்சி



* மதுரை முக்குறுணிப் பிள்ளையார்

**மேஷம்:** சனி பகவான் 26.6.2005 அன்று 4ம் இடத்துக்கு வருகிறார். அர்த்தாஷ்டம சனி என்பார்கள். சிலருக்கு உத்தியோக ரீதியாக இடமாற்றம் ஏற்படும். வீடு மாற்றம் ஏற்படும். தாயாரின் உடல்நிலையில் கவனம் செலுத்தவும். சிலருக்கு கர்மம் செய்யும் வாய்ப்பு ஏற்படும். படிக்கும் மாணவர்களின் படிப்பில் கவனம் செலுத்தவும். மாணவர்களுக்கு அதிக சிரமங்களை ஏற்படுத்தும். சனி காயத்ரியை சனிக்கிழமைதோறும் பாராயணம் செய்யவும். திருமணம் ஆன பெண்கள் தனிக் குடித்தனம் செல்ல நேரிடும். கூட்டுக் குடித்தனம் தொடராது. சிலருக்கு புதிய வீடு, வாகன சேர்க்கை ஏற்படும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரிகளுக்கு தொழில் ரீதியாக மந்த கதி ஏற்படும். சத்ரு தொல்லை இருக்கும். ஷேர் மார்கெட் தொழில் செய்பவர்கள் கவனமுடன் செயல்படவும். கலைஞர்கள் ஏற்றம் பெறுவார்கள். திருமணமாகாத பெண்களுக்குத் திருமணம் நடக்கும். வேலை தேடும் இளைஞர்களுக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயர் கோயில் சென்று வழிபாடு செய்து வரவும்.

**ரிஷபம்:** சனி பகவான் 26.6.2005 விருந்து 3ல் சஞ்சாரம் செய்வதால் மனத்தில் தைரியமும் தன்னம்பிக்கையும் ஏற்படும். இதுநாள் இருந்து வந்த பண நெருக்கடி, குடும்பக் கஷ்டங்கள் இனி இருக்காது. செய்தொழில் நற்பலன் அளிக்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். சகோதரர் வழியில் நற்பலன்கள் கிடைக்கும். படிக்கும் மாணவர்களும் எதிலும் வெற்றி காண்பார்கள். திருமணம் ஆகாமல் இருந்தவர்களுக்குத் திருமணம் நடக்கும். வேலை தேடும் இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும். குடும்பத்தில் மதிப்பும் மரியாதையும் ஏற்படும். கலைஞர்களுக்கு நற்பயனை அளிக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பரிகாரம் தேவை இல்லை.

**மிதுனம்:** சனி பகவான் 2ல் சஞ்சாரம் செய்யப் போவதால் தனம், குடும்பம், செல்வாக்கு மேன்மை உண்டாகும். காசு, பணம் தேடி வரும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். வீடு, வாசல், வாகன சௌகரியம் ஏற்படும். படிக்கும் மாணவ - மாணவிகளுக்கு நற்பலன் அளிக்கும். புதிய தொழில் துவங்க ஏற்ற காலம். பணக்



• திருநள்ளார் சனீஸ்வர பகவான்

ஏற்படும். கல்வியில் பாதிப்பு இராது. கணவன், மனைவி ஒற்றுமை பலப்படும். உத்தி யோகத்தில் மாற்றம் ஏற் படும். வியாபாரம், தொழில் விருத்தி ஏற்படும். உத்தியோ கத்தில் மேன்மை கிட்டும். நல்ல தகவல்கள் வரும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். சிலருக்கு மேல் நாடு சென்று கல்வி கற்கும் வாய்ப்பு வரும். ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வரவும்.

**சிம்மம்:** சனி பகவான் 26.6.2005 முதல் விரய ஸ்தா னத்தில் சஞ்சாரம் செய்யப் போவதால், எச்சரிக்கை யுடன் இருக்க வேண்டிய காலம். படிக்கும் மாணவர் களுக்கு ஞாபக மறதி வர

# பலன்கள் - 2005

## தஞ்சை பரத்வாஜ்


கஷ்டம் தீரும். ஆரோக் கியம் பாதிப்பைத் தராது. அன்னையின் உடல்நலம் சீராகும். உத்தியோக உயர்வு, பணி மாற்றம் ஏற்படும். கலைஞர்கள், வளம் பெறுவார்கள். திரு மணம் ஆகாத ஆண், பெண் களுக்குத் திருமணம் நடக்கும். குழந்தை பாக்கியம் ஏற்படும். அண்டை நாடு செல்லும் வாய்ப்பு தானாக வரும்.

**கடகம்:** சனி பகவான் 26.6.2005 முதல் ஜென்ம ராசியில் சஞ்சாரம் செய் வது நல்ல பலனை அளிக்கும். பிர யாணச் செலவுகளும், வைத்தியச் செலவுகளும் கட்டுப்படும். தைரியம்

லாம். பிரயாணச் செலவு களும், வைத்தியச் செலவு களும் வரும். குடும்ப வாழ்க்கையில் அனுசரணை தேவை. வழக்கு, வியாஜ்யம் வெற்றி தரும். ஆரோக் கியத்தில் கவனம் தேவை. வியாபாரிகள் கவனமுடன் செயல்படவும். புதிய முயற்சிகளை தள்ளிப் போடவும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. திருமணம் ஆகாதவர்களுக் குத் திருமணம் நடக்கும். உத்தியோ கத்தில் இடமாற்றம் நேரி

டும். சனி பகவானுக்கு வாரந்தோறும் எள்ளு முடிச்சு போட்டு விளக்கு ஏற்றி, காக்கைக்கு எள்ளுசாதம் போடவும்.

**கன்னி:** சனி பகவான் 26.6.2005 முதல் ராசிக்கு 11ல் சஞ்சாரம் என்ப தால், அநேகமான நற்பலனை அளிக்கும். பூமி மூலமோ, தொழில் மூலமோ நல்ல வருவாயை அளிக்கும். பூர்வீக சொத்துகள் பாகப்பிரிவினை ஆகும். அதன் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீட்டில் குழந்தைகள் வழியில் மங் களகரமான நிகழ்வுகள் நடக்கும். மனக்



* நாச்சியார் கோயில் கல் கருடன்

குழப்பம் தீரும். புதிய தொழில் துவங்க லாம். மாணவ - மாணவிகளுக்கு படிப் பில் மேன்மை ஏற்படும். குடும்பத்தில் நல்லது நடக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வழக்கு, வியாஜ்யங் களில் வெற்றி வாகை சூடும். சிறு வியா பாரங்கள், தொழில்கள் முன்னேற்றம் காணும். வேலை தேடுபவருக்கு உடன் வேலை கிடைக்கும். வேலையில் இது நாள் இருந்து வந்த சிரமம் குறையும். கலைஞர்களுக்கு ஏற்றம் ஏற்படும். பரி காரம் வேண்டாம்.

**துலாம்:** சனி பகவான் 26.6.2005 முதல் ராசிக்கு 10ல் சஞ்சாரம் என்ப தால் எச்சரிக்கை தேவை. வேலையில் எதிர்ப்பு இருக்கும். சிலருக்கு தேவை இல்லாத வழக்குகள் வரும். உத்தியோ கத்தில் இடமாற்றம் ஏற்படும். சிலருக்கு குறைந்த சம்பளத்தில் வேலை கிடைக் கும். அனாவசியமான செலவுகள் ஏற்படும். கால்களில் அடிபட வாய்ப்பு உண்டு. சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். தாயின் உடல்நிலை பாதிக்கும். கண வன் - மனைவிக்குள் கருத்து வேற்றுமை வரும். குழந்தைகள் வழியில் சுப காரி யம் நடக்கும். வியாபாரிகள் எச்சரிக் கையுடன் இருப்பது நல்லது. சனி காயத்ரி மந்திரம் 9 தடவை தொடர்ந்து தினமும் சொல்லி வரவும். நோயாளி களுக்கு அன்னதானம் செய்யவும்.

**விருச்சிகம்:** சனி பகவான் 26.6.2005 முதல் 9ம் இடம் செல்வதால் உங்கள் காட்டில் மழை கொட்டோ கொட் டென்று கொட்டப் போகிறது. காரியம் அனைத்திலும் வெற்றி. வீடு வாசல், வாகனச் சேர்க்கை ஏற்படும். புதிய தொழில் துவங்க ஏற்ற காலம். சிலருக்கு வெளிநாட்டு நிறுவனத்தில் வேலை கிடைக்கும். திருமணம் ஆகாதவர் களுக்குத் திருமணம் நடக்கும். அன் னையின் உடல்நிலை சீராகும். குழந்தை கள் வழியில் சுபகாரியம் நடக்கும். மனக் குழப்பம் தீரும். வியாபாரிகளுக்கு நல்ல காலம். வியாபாரம் சுறுசுறுப் புடன் இருக்கும். பொருளாதாரக் கஷ்டம் விலகும். வழக்கு வியாஜ்யம் வெற்றி அளிக்கும். மாணவர்கள் வெளி நாடு சென்று படிக்கும் வாய்ப்பு ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே அனு சரணை இருக்கும். கல்வியில் மேன்மை கிட்டும். பரிகாரம் தேவை இல்லை.


**தனுசு:** சனி பகவான் 26.6.2005 முதல் 8ல் சஞ்சாரம் செய்வதால், எதி லும் கவனமுடன் இருப்பது நல்லது. அஷ்டமத்து சனியானவர் இந்த ராசிக்கு எந்தக் கெடுதலையும் செய்ய மாட்டார். கடந்த 2 வருடங்களை விட தற்பொழுது நற்பலனை அனுபவிப்

பார்கள். சிலருக்கு தொழில் ரீதியில் மாற்றம் வரும். வேலையில் இருக்கும் சிரமம் குறையும். புதிய வேலைக்கு முயற்சி செய்பவருக்கு வேலை கிடைக்கும். அண்டை நாடு சென்று படிக்கும் வாய்ப்பு / வேலை கிடைக்கும். வீடு வாகனம் வாங்கும் யோகம் கிட்டும். திருமணம் ஆகாமல் தடைப்பட்டவர்களுக்கு திருமணம் நடக்கும். வியாபாரம், தொழிலில் இருந்த மந்த நிலை மாறும். குழந்தைகள் வழியில் சுப காரியம் நடக்கும். புது சொத்து சேரும். ஆரோக்கியம் பாதிக்காது. ஆஞ்சநேய நாமாவளி படித்து வாருங்கள். நற்பயன் கிடைக்கும். மன சஞ்சலம் தீரும்.

**மகரம்:** சனி பகவான் 7ம் இடத்தில் 26.6.2005 முதல் சஞ்சரிப்பதால் எந்தக் கெடு பலனையும் தராது. ஆரோக்கியம் சீராகும். குழந்தைகள் வழியில் சுப காரியம் நடக்கும். சாதுக்கள் தரிசனம் கிட்டும். வாக்கு, படிப்பு நன்றாக வரும். தந்தை வழியில் அனுகூலம் ஏற்படும். திருமணத் தடை விலகும். உத்தியோக மேன்மை கிடைக்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். தாயாரின் உடல்நிலை சீராகும். புதிய வீடு, வாகனச் சேர்க்கை உண்டாகும். மாணவ - மாணவிகளுக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும். கலைஞர்கள் ஏற்றம் பெறுவார்கள். ஆஞ்சநேய காயத்ரி படித்து வரவும்.

**கும்பம்:** சனீஸ்வர பகவான் 26.5.2005 முதல் 6ம் இடத்தில் சஞ்சாரம். பணக் கஷ்டங்கள் இருக்காது. புதிய பட்டம், பதவி தேடி வரும். வழக்கு வியாஜ்யம் வெற்றி பெறும். காரியம் அனைத்திலும் வெற்றி. மன சஞ்சலம் தீரும். ஆரோக்கியம் பாதிக்காது. எதிரிகள் சரண் அடைவார்கள். கடன் தொல்லை தீரும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். வெளிநாட்டில் பணி கிடைக்கும். குடும்பத்தில் அந்தஸ்து மேன்மை கிடைக்கும். தாயாரின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். சகோதரர் வழியில் நற்பலன் கிடைக்கும். மனத்தில் தைரியமும் புத்துணர்ச்சியும் ஏற்படும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் முடியும். பரிகாரம் வேண்டாம்.

**மீனம்:** சனி பகவான் 26.6.2005 முதல் 5ம் இடத்தில் சஞ்சாரம் செய்வது தைரியத்தையும் தன்னம்பிக்கையும் அளிக்கும். குழந்தைகள் வழியில் மங்களகரமான காரியம் நடக்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழிலில் இருந்த கஷ்டங்கள் போகும். வேலை இல்லாதவருக்கு வேலை கிடைக்கும்.



• மெய்யூர் ஆஞ்சநேயர்

தாயாரின் உடல்நிலையில் முன்னேற்றம் காணலாம். கணவன் - மனைவி அனுசரணை கூடும். புதிய தொழில் துவங்கலாம். வெளிநாட்டு வர்த்தகம் நன்றாக நடக்கும். வழக்கு வெற்றி பெறும். நண்பர், உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். வாக்கு மதிப்பு, தனம், பெருமை, வீடு, வாகனச் சேர்க்கை ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். மாணவ-மாணவியருக்கு நற்பலன் கிடைக்கும்! பரிகாரம் வேண்டாம். ○

கொத்தவால் சாவடியை கோயம்பேட்டுக்கு இடமாற்றம் செய்தது போல், சென்னை தி.நகர் ரங்கநாதன் தெருவை 'சிவகாசி' படத்துக்காக வாஹினி ஸ்டூடியோவுக்குள் வார்ப்படம் செய்திருக்கிறார்கள். அங்கே விஜய்யுடன் பட்டாசு வெடித்து தீபாவளி கொண்டாடிக் கொண்டிருந்தார் அசின். அம்மையாரை பேட்டி என்று அணுகியதும், வெடிவைத்து, சாரி பொடி வைத்துப் பேசினார்.

லெட்சுமி வெடி: அம்மா டாக்டர் செலின். பிஸியான சிவில் சர்ஜன். நான் நடித்த படங்களைப் பார்க்க வரும்படி கெஞ்சிக் கூத்தாடி அப்பாயின்மெண்ட் வாங்க வேண்டும். சரியாக நடிக்கவில்லை என்றால், 'நீயெல்லாம் ஏன் நடிக்கக் கிளம்பினே' என்று கடுமையாக கிரிட்டிசைஸ் பண்ணுவார். கிரிட்டிக் அம்மாவால்தான் நான் கிடுகிடுவென்று வளர்ந்திருக்கிறேன்.

விஷ்ணு வெடி: அப்பா ஜோசப் தொட்டுங்கல். சி.பி.ஐயில் ஸ்பெஷல் சி.ஐ.டி ஆபீசராக இருந்துவிட்டு, திடீரென்று ராஜினாமா செய்தவர். காரணத்தை எத்தனையோ முறை தாஜா பண்ணிக் கேட்டும், இதுவரை சொல்லாத அயர்ன் ஹார்ட் அப்பா. நிழல்போல என்னைத் தொடர்ந்து வந்து காக்கும் பாசமான தாடி



# ரஜினியின் நாயகி!

வாலா.

**ராக்கெட்:** வேற யார்? சாட்சாத் இந்த அசின் தான். சமஸ்கிருதத்தில் இருந்து 'அ', ஆங்கிலத்திலிருந்து 'sin' இரண்டையும் இணைத்து 'பாவ மற்றவள்' என்ற அர்த்தத்தோடு பெயர் வைத்த அப்பா - அம்மாவுக்கு நான் ஒரே செல்லப் பெண்.

+2 படிக்கும்போதே நம்பர் ஒன் இயக்குனர் சத்தியன் அந்திக்காடு கெஞ்சிக் கூப்பிட்டு 'நரேந்திரன் மகன்' படத்தில் நடிக்க வைத்தார். அடுத்து 'உள்ளம் கேட்குமே' என்ற தமிழ்ப் படத்தில் நடித்தே ஆகவேண்டும் என்று ஒளிப்பதிவாளர் ஜீவா ஒற்றைக்காலில் நின்றதால் ஓ.கே சொன்னேன். கோடம் பாக்கத்திலிருந்து மூன்றாவது படத்துக்கு அப்படியே ஆந்திராவுக்கு அழைத்துப் போய் விட்டார்கள். அங்கே நான் அறிமுகமான 'அம்மா... நானா... ஒக்க தமிழ் அம்மாயி' (அம்மா, அப்பா, ஒரு தமிழ் பொண்ணு) படம் சூப்பர் டூப்பர் ஹிட். அங்கிருந்து நான்காவது படத்துக்கு கர்நாடகாவுக்குக் கூப்பிட்டார்கள்... அதற்குள் ஃபைனல் எக்ஸாம் வந்துடுச்சு.

**சரவெடி:** தெலுங்கில் என்.டி.ஆர் மகன் பாலகிருஷ்ணா, நாகார்ஜுனா, வெங்கடேஷ் உட்பட முன்னணி ஹீரோக்கள் எல்லோரோடும் நான் நடித்த படங்கள் வரிசையாக சூப்பர்ஹிட். இதனால் தெலுங்குப் பட உலகில் என்னை 'ஹாட்ரிக் அம்மாயி' என்று செல்லப் பெயர் வைத்து கூப்பிடுகிறார்கள். வரும் செப்டெம்பரில் தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியுடன் நடிக்கிறேன்.

**மத்தாப்பு:** இப்போது தமிழில் விக்ரம், சூர்யா, விஜய், அஜித் ஆகிய நான்கு மெகா ஹீரோக்களோடு நடிக்கிறேன்... சந்தோஷத்துக்கு என்ன குறைச்சல்!


**சங்கு சக்கரம்:** ஷூட்டிங் இல்லாத செகண்ட் சன்டேஸ்ல சர்ச்சுக்குக் கூட போகாம, திருவனந்தபுரத்து ஷாப்பிங் மால்ஸ்லே சக்கரம் கட்டி சுத்திக்கிட்டு இருப்பேன்.

**சாட்டை:** கால்ஷீட்டை கமுக்கமா வாங்கிட்டு, வல்கரா நடிக்க வற்புறுத்தினா சாட்டைதான்.

**யானை வெடி:** சூப்பர் ஸ்டார் ரஜினியோட அடுத்த படத்துல ஜோடி சேரப் போறீங்களாமேன்னு எல்லாரும் கேட்குறாங்க... ஹீரோ யாருங்குறது முக்கியமில்ல. கதையில எனக்கு இம்பார்ட்டென்ஸ் இருக்கான்னு தெரியணும்! இருந்தா ரஜினி சார் கூட நடிப்பேன்!

**- ஸ்ரீ சக்கரம்**





# வீடு

ராம.சரவணன்

"என்ன உமா, இப்பிடி திடீர்னு அம்மாவுக்கு வேற வீடு பார்த்து வைன்னா எப்படி?" பரிதாபமாகக் கேட்டான் வெங்கட்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஒண்ணு உங்கம்மா இந்த வீட்ல இருக்கணும். இல்ல நான் இருக்கணும். நீங்களே முடிவு பண்ணிக்கங்க. எனக்கு எங்கம்மா வீடு கடல் மாதிரி இருக்கு. நான் அங்க போய் இருக்கிறேன்" பிடிவாதமாகச் சொன்னாள் உமா.

வேறு வழியில்லாமல் பக்கத்தில் இருக்கிற குப்பத்தில் தன் அம்மாவுக்கு முந்நூறு ரூபாய் வாடகையில் குடிசை ஒன்று பார்த்து குடி வைத்தான் வெங்கட்.

மாமியாரை வீட்டை விட்டு அனுப்பிய குஷியோடு சமைத்துக் கொண்டிருந்தாள் உமா.

கதவு தட்டும் சத்தம் கேட்டு வெளியே வந்தவள், "வாங்க பொன்னம்மக்கா... வீட்டு வாடகைதானே... அவரு வந்ததும் கொண்டு வந்து தரச் சொல்றேன்" என்றாள்.

"நான் அதுக்கு வரல உமா. இந்தா, நீங்க கொடுத்த அட்வான்ஸ். இன்னிக்கே வீட்டை காலி பண்ணிக்கங்க" என்றாள் பொன்னம்மக்கா.

"என்னக்கா சொல்றீங்க?" பதறிவிட்டாள் உமா.

"ஆமாம்மா... போன வாரம் எங்க மாமனார், மாமியாரைப் பார்க்க கிராமத்துக்குப் போயிருந்தேன். தனியா சமைச்சு சாப்பிட ரொம்ப சிரமப்படுறாங்க. மனசு கேக்கல... கையோட கூட்டிட்டு வந்துட்டேன். வீட்ல பசங்க போடுற சத்தம் அவங்களுக்கு இடைஞ்சலா இருக்குது. அதான் உங்கள காலி பண்ணிட்டு இந்த வீட்ல குடி வைக்கப் போறேன். தன் பையனை நல்லா வளர்த்து, படிக்க வச்சதுனாலதானே நான் இன்னிக்கு இவ்வளவு வசதிகளோட இருக்கேன்... அந்த நன்றியை மறக்கக் கூடாதில்லையா? நான் வர்றேன். வீட்டை காலி பண்ணிக் கொடுத்திடுங்க" சொல்லிவிட்டு பொன்னம்மக்கா போக, பிரமை பிடித்து நின்றாள் உமா. ○

**மினி கதை**



# சூப்பர் ஸ்டார் வெறியர்கள்!

இப்படிப் பண்ணிப் புட்டீகளே, அம்மா! இப்படிப் பண்ணிப்புட்டீகளே! என்ட்ரன்ஸ் எக்ஸாமை டபக்குன்னு தூக்கிப்புட்டீகளே! இதை ஒரு ஏழெட்டு வருசத்துக்கு முன்னாடி செஞ்சிருந்தா, இந்தப் பாவிப் பயலும் பவுசா இன்ஜினீயர் ஆயிருப்பனே! முடியாமப் போச்சே! அய்யோ அய்யய்யோ! (ஆமா, +2ல ஹிஸ்டரி குருப் எடுத்த நான் இன்ஜினீயர் ஆக முடியுமா? வருங்காலத்துல அதுக்கும் வாய்ப்பிருக்குங்கோ!) ராமதாசு அய்யா, நம்ம கட்சிக்காரங்க எல்லாம் சேலத்துல நுழைவுத் தேர்வை நீக்குனதுக்காக வெடி போட்டு, ஸ்வீட் கொடுத்து செம ஆட்டம் போட்டாங்களாமே! மெய்யாலுமே அதுல எத்தனை பேருக்கு 'நுழைவுத் தேர்வோட' அர்த்தம் தெரியும்? (ஐயா முறைக்காதீக, ச்சும்மா கேட்டேன்.)



"ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு நர்சு! ஒரே ஒரு நர்சுக்கும் வந்திடுச்சு டிரான்ஸ்பர்..." இது என்ன கொடுமைன்னு கேட்கறீங்களா! ஊட்டி பக்கம் மசினகுடியில, அரசு ஆஸ்பத்திரிக்கு டாக்டருங்க சரியா வர்றது கிடையாது. அங்க நர்ஸ் 'அம்மா'தான் எல்லாம். (ஏன்னா அவங்க பேரு ஜெயா!) அவுங்களுக்கும் திடீர்னு டிரான்ஸ்பர் ஆர்டர் வர, கொதிச்சுப் போன ஊர் மக்கள் சாலை மறியல்ல இறங்க, 50 பேரை போலீஸ் கைது செஞ்சாங்களாம். அதுல நோயாளிகள், கர்ப்பிணிகள்கூட உண்டாம். மசினகுடி மக்களே! கவலைப்படாதீங்க, கோடைக் காலம் முடிஞ்சி, 'கொடைக்காலம்' (அதான், தேர்தல் காலம்) வரப் போகுது. ஜெயாவுக்கு ஜெயா துரோகம் பண்ண மாட்டாங்க, நம்புங்க.

ஜூன் 3ம் தேதி தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியோட 'அத்தரிவாடு'ங்கிற படம் ரிலீஸாக வேண்டியதாம். ஏதோ ஒரு காரணத்தால ஒரு நாள் தள்ளிப்போச்சு. எதிர்பார்த்து டிக்கெட் வாங்கின ரசிகர்கள், கோபமாகி, கொதிப்படைஞ்சு அஞ்சாறு பஸ்சை நொறுக்கிப்புட்டாங்களாம்! நம்மாளுங்க பாலாபிஷேகம், தேனாபிஷேகம், சூடம்னு சைவ பூசைதான், கட்-அவுட்டுக்கு பண்ணுவாங்க... ஆனா தெலுங்கு ரசிகர்கள், படம் நல்லாப் போகணும்னு 25 ஆடுகளோட உசிரைப் போக்கி, ஆட்டுத் தலை மாலையை கட்-அவுட்டுக்குப் போட்டாங்களாம். அப்படியே அந்த ஆடுகளோட மூளைகளை எடுத்து அவங்கவங்க தலையில வைச்சுக்கிட்டா நல்லா இருந்திருக்கும். ஆமா, அதான அந்த வெறியர்கள் கிட்ட இல்ல!

# போஃபர்ஸ்

● எஸ்.சக்தி,
விக்கிரமசிங்கபுரம்

**? சென்னையில் ராஜீவ் தின முகாம் துவக்க விழாவில் ஜெயந்தி நடராஜனுக்கு பிரும்மாண்ட 'கட் அவுட்' வைத்துள்ளார்களே...திராவிட கட்சிகளின் கலாசாரத்தை காங்கிரசும் பின்பற்ற ஆரம்பித்துவிட்டதா?**

! கட் அவுட் கலாசாரம் காங்கிரஸுக்குப் புதிதல்ல;



• வெற்றிப் புயல்!

ஆனால் ஜெயந்திக்குத்தான் அந்த உயரம் புதுசு. ஜி.கே.வாசன் மத்திய அமைச்சரவையில் சேரப் போவதாகப் பேச்சு அடிபடுவதால், ஜெயந்தி புதிய உயரங்களைத் தொட விரும்புகிறார் போல.

● அ.கஹைல் ரஹ்மான்,
திருச்சி - 21

**? விளையாட்டு வீரர்களுக்கான மிக உயர்ந்த கேல் ரத்னா விருதுக்கு கங்கூலி, டிராவிட் ஆகியோரது பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதே?**

! விருது கொடுக்க ஆரம்பிச்சாங்கன்னா, வீட்டுக்கு அனுப்ப நினைக்கிறாங்கன்னு அர்த்தம்! கங்கூலிக்குச் சரி... ஆனால், டிராவிட்டின் சேவை கிரிக்கெட்டுக்கு இன்னும் தேவைதான்.

● எல்.எம்.அபிதா,
திருவண்ணாமலை

**? தமிழக கவர்னரே தேரில் வாழ்த்துகையில், கலைஞர் பிறந்தநாளுக்கு ஜெயலலிதா ஏன் வாழ்த்து தெரிவிக்கவில்லை?**

! உங்கள் அடுத்த கேள்வியாக 'மௌனம் மொழியாகுமா?' என்று கேட்டிருக்கிறீர்கள்... 'ஆகும்' என்பது பதில்!

● எஸ். அசாதி,
பெருமாள்தேவன்பட்டி

**? மாநில மின் வாரியங்களின் மொத்த இழப்பு இருபத்தோராயிரம் கோடி ரூபாய்க்கு எகிறிவிட்டது. எனவே இழப்பை ஈடுகட்ட மாநில அரசுகள் மின் கட்டணத்தைச் சீரமைக்குமா...?**

! பெயர்தான் சீரமைத்தல். வெறும் கண் துடைப்பு. மின் கட்டணத்தை உயர்த்துவாங்களே தவிர, சீரமைக்க மாட்டாங்க. கிராமப்புற விவசாயி (வசதியானவர் உட்பட) இலவசம் அனுபவிக்க, பட்டணத்துவாசி கூடுதல் கட்டணம் சுமப்பது தொடரும்.

● மு.ரா.பாலாஜி, கோலார்

**? ராகுல் காந்தியின் சவுண்டே காணுமே...?**

! கொஞ்சம் பொறுங்க சார்... சீக்கிரமே அவருக்குப் பொதுச் செயலாளர் என்கிற கோரோஜனம் தரப் போறாங்களாம். அப்புறம் பாருங்க... சவுண்டு சும்மா கணீர்னு வரும்.


● க. விண்ணவன், கடலூர் ❋

**? சட்டசபை உறுப்பினர் புகழேந்தி,**

• புது உயரம்



• சவுண்டு பலம்!



## நீங்கள் கேட்டவை
## - தராசு

# சுண்டைக்காயாகிவிட்டதே..?

எங்கள் ஊரில் காந்தி பூங்கா திறப்பு விழாவில் பேசியபோது, 'ஆத்மா மீது எனக்கு நம்பிக்கை இல்லை. எனவே காந்தியை 'மகாத்மா' என்று அழைக்க மாட்டேன். மாறாக உத்தமர் காந்தி என்று அழைப்பேன்' என்கிறாரே... இது பற்றி உங்கள் கருத்து என்ன...?

! அப்படி அழைப்பதுதான் அவருடைய ஆத்மாவுக்கு உத்தமம் என்றால், அழைத்துக் கொள்ளட்டுமே!

● என்.கோவிந்தராஜுலு, அறந்தாங்கி ❒



• ... விபரீதம்!

? போஃபர்ஸ் ஊழல் வழக்கு கடைசியில் 'சுண்டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்' என்று ஆகிவிட்டதே?

! முக்கால் பணம் செலவழித்தாலும் சுண்டைக்காயின் கசப்பு மாறவில்லையே! மருந்தாக ஏற்றால் செலவழித்த பணம், குணம் தரும்.

● ஆர்.கே.எப்சிபா, சென்னை-12

? 'ராப்ரி முதல்வராக முடியாது போனால் மத்திய அரசைக் கவிழ்த்து விடுவேன் என்று லல்லு மிரட்டியதால்தான் சட்டசபை கலைக்கப்பட்டது, என்று பாஸ்வான் சொல்லியிருக்கிறாரே...?

! பின்னே... 'என்னுடைய பிடிவாதத்தால்தான் பீஹார் சட்டசபை கலைக்கப்பட்டது' என்றா சொல்லுவார்?

● ஜி.மாரியப்பன், சின்னமனூர்

? லேட்டஸ்ட் இளம் புயல்...?

! ஃப்ரெஞ்ச் ஓபன் போட்டியின் வெற்றிப் புயல் ரஃபேல் நாடல். எட்டுத் திசையிலும் புயலாகப் பாய்ந்து ஆடியது ஒரு புறம் என்றால், சில சமயம் தென்றலாகவும் மாறி

• விருது...





• திரைக்கு அப்பால்...

பந்தைத் தட்டிக் கொடுத்து எதிராளியைத் திணறடித்தது ரியலி கிரேட்.

● **ராஜ் குமார், காரப்பாடி**

**? இந்தியா விரும்பினால் காஷ்மீர் பிரச்னைக்கு ஓர் ஆண்டில் தீர்வு காண முடியும் என்று முஷாரஃப் கூறியது பற்றி...?**

! பாகிஸ்தான், காஷ்மீரை விரும்பாமல் இருந்தால் ஒரே நாளில் தீர்வு கிடைக்குமே...!

● **இரா.சக்கரபாணி, மதுரை - 7**

**? சொத்துக் குவிப்பு வழக்கை சொத்தை வழக்கு எனக் கருதி வழக்கில் ஆஜராக மறுக்கிறாரா முதல்வர் ஜெயலலிதா...?**

! சொத்தை வழக்காயிருந்தால்தான் தேவலாமே.. விறுவிறுவென்று அதனை எதிர்கொண்டு ஜெயித்துவிடலாமே! ஆனால், அம்மையார் ஜகா வாங்குவதைப் பார்த்தால் இது வித்தை வழக்கு!

● **எஸ்.ராமலிங்கம், தூத்துக்குடி**

**? மத்திய அமைச்சர் சுனில்தத் மரணம் குறித்து...?**

! திரையில் நடித்த போதிலும் வாழ்க்கையிலும் அரசியலிலும் நடிக்காமல் நல்லது செய்தவர்.

● **ச.சசிகலா, விருதுநகர்**

**? கல்வித் துறையில் அரசு என்ன மாற்றம் கொண்டு வரவேண்டும் என்று விரும்புகிறீர்கள்...?**

! அடிக்கடி மாற்றங்கள் செய்து தொல்லை தராமலிருந்தாலே போதும். பிள்ளைகள் எப்படியோ பிழைத்துக் கொள்வார்கள் - அது மோசமான கல்வியாக இருந்தாலும் கூட. ஆனா, இப்ப அவங்க படற அவஸ்தை இருக்கே...!

● **எம்.சிவகுருநாதன், தஞ்சை**

**? புதுவையில் தென்மாநில முதல்வர்கள் மாநாட்டின்போது பேசிய ஜெயலலிதா, தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் தங்கள் மாநில அரசைப் புறக்கணிப்பதாகப் புகார் கூறியிருப்பது பற்றி...?**

! மத்திய அமைச்சர்களைக் கேட்டால் மாநில அரசு முட்டுக்கட்டை போடுவதாகப் பழி போடுகிறார்கள். மக்களை மத்தளமாக எண்ணிக்கொண்டு ஆளுக்கொரு பக்கம் இடிக்கிறார்கள்.

● **கன்னி சுப்பிரமணியன், ஈரோடு-1**

**? இரண்டாயிரம் நர்சரி, தொடக்கப் பள்ளிகள் அனுமதி பெறாமல் இயங்குவதாக இப்பொழுது கண்டுபிடித்துள்ள அதிகாரிகள் இதுவரை என்னதான் செய்தார்கள்...?**

! எண்ணிப் பார்த்துக்கிட்டிருந்திருப்பாங்க!


● **இரா. கல்யாணசுந்தரம், அனுப்பானடி**

**? நமது குடியரசுத் தலைவர் வெளிநாட்டுப் பயணத்தில் சாதித்தது என்ன...?**


! பயணம் முடித்த கையோடு தம்முடன் வந்த நாடாளுமன்ற உறுப்பினர் குழுவுக்கு "இந்திய-ருஷ்ய நல்லுறவு வளர என்ன செய்யலாம் எழுதிக் கொடுங்கள்..." என்று பரீட்சை வைத்ததே பெரிய சாதனைதான்! ○


**❑ ரூ.100/- பரிசு பெறுபவர்:**
**என்.கோவிந்தராஜுலு,**
**5, ராஜகோபால் தெரு,**
**அறந்தாங்கி - 614 616**
**புதுக்கோட்டை மாவட்டம்**

**● ரூ.50/- பரிசு பெறுபவர்:**
**க.விண்ணவன்,**
**கேப்பர்மலை ரோடு,**
**வசந்தராயன்பாளையம்,**
**கடலூர் - 3**



# அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்





**திருவாரூர். Ph : 04366-242343**

**(சர்வதோஷ பரிகாரத்தலம்)**

**www.srithiyagarajatemple.org**
**E-mail : thiyaharajatemple@sancharnet.in**
**E.Pooja Booking : www.tntemple.org**

## சனிப்பெயர்ச்சிப் பெருவிழா
**நாள் - 27.06.2005**

*திருவாரூர் வருக!* *திருவருள் பெறுக!*

பேரன்புடையீர்,

பஞ்சபூதங்களில் பூமிக்குரிய தலமாகவும், மூலாதாரத் தலமாகவும் பிறந்தாலும் பெயர் சொன்னாலும் முக்தி தரும் தலமாகவும், சப்தவிடங்கத் தலங்களுள் முதன்மை தலமாகவும், எமனே சண்டிகேசுவரராகவும் உள்ளதும் நளனும் சனீஸ்வர பகவானும், குருபகவானும் வழிபட்ட சர்வதோஷ பரிகாரத்தலமாகிய இத்திருக்கோயிலில் நவக்கிரகங்கள் அனைத்தும் ஒரே திசையை நோக்கி நேர்கோட்டில் வக்கிரமின்றி அனுக்கிரக மூர்த்திகளாக விளங்குகின்றனர். சனியின் ஆதிக்க காலத்திலும் வழிபட வேண்டிய தலமாகவும் விளங்கும் இத்திருக்கோயிலில் நவக்கிரகங்கள் உச்சம் பெற்றவர்கள் இத்திருக்கோயிலில் வழிபட்டால் வக்கிரம் குறையும் என்பதால் இது சர்வதோஷ பரிகாரத்தலம் என்று அழைக்கப்படுகிறது. ஸ்ரீராமனின் தந்தை சனி பகவானை வென்ற தசரத மகாராஜாவிற்கு திருவாரூரில் வழிபடுவோருக்கு நன்மையே செய்வதாக சனிபகவான் வரம் தந்ததாலும் இதனால் கலி (சனி) செலா நகரம் என்று திருவாரூர் அழைக்கப்படுகின்றது. எனவே **மேஷம், மிதுனம், கடகம், சிம்மம், தனுசு, மகரம் மற்றும் மீன** ராசிக்காரர்கள் இங்கே வழிபடுதல் நலம்.

**26.06.2005 ஞாயிற்றுக் கிழமை மாலை 1 மணி முதல் முதல்காலம்**
**26.06.2005 இரவு 10 மணிமுதல் இரண்டாம் காலம்**
**27.06.2005 திங்கள் கிழமை அதிகாலை 1.24 பூர்ணாஹுதி மற்றும் தீபாராதனை நடைபெறும்.**

| | | |
|---|---|---|
| **கட்டணம் :** | **பால் அபிஷேகம்** | **ரூ. 50/-** |
| | **சிறப்பு அபிஷேகம்** | **ரூ. 300/-** |
| | **சனிப்பிரீதி ஹோமம்** | **ரூ. 3500/-** |

நேரில் வர இயலாத பக்தர்கள் மேற்கண்ட கட்டணத்தை **"நிர்வாக அதிகாரி, அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர்".** என்ற முகவரிக்கு மணியார்டர் / டி.டி அல்லது ICICI வங்கியிலுள்ள 608101081322 இத்திருக்கோயில் கணக்கில் செலுத்தி விபரம் தெரிவித்து பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| **த.விஜயகுமார்** எம்.ஏ.,பி.எல்., | **ராம்.வி.தியாகராஜன்** பி.டெக்., | **த.கஜேந்திரன்** எம்.ஏ.,பி.எல்., |
| உதவி ஆணையர் / தக்கார் | பரம்பரை அறங்காவலர் உள்துறை கட்டளை | நிர்வாக அதிகாரி |

குறிப்பு: இன்று தரிசனம் செய்ய வேண்டிய சப்தவிடங்கத் தலங்கள் (இரவு) திருவாரூர், திருநள்ளார், நாகப்பட்டினம், வேதாரண்யம், திருவாய்மூர், திருக்குவளை மற்றும் திருக்காரவாசல்.



தமிழ் சினிமாவுக்கு புதுப் பாதை அமைத்துத் தந்தவர்களுள் டைரக்டர் ஸ்ரீதரும் ஒருவர். அவரது 'கல்யாணப் பரிசு' படத்தை இன்றைக்கும் யாராலும் மறக்க முடியாது. கொஞ்ச காலமாகவே உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் ஸ்ரீதரை, அவரது கல்யாணப் பரிசு நாயகி சரோஜாதேவி அண்மையில் வீடு தேடிச் சென்று சந்தித்துப் பேசிய போது, மலரும் நினைவுகள் அங்கே கரைபுரண்டோடின. அந்த நெகிழ்ச்சியான நிகழ்விலிருந்து...

கையில் பொக்கேவுடன், கதவைத் திறந்துகொண்டு சரோஜாதேவி உள்ளே நுழைய, கட்டில் மேல் உட்கார்ந்து கொண்டிருந்த ஸ்ரீதரின் கண்களில் ஆச்ரியம்.



''வணக்கம்! என்னை அடையாளம் தெரியுதா?'' என்று கேட்டபடியே, ஸ்ரீதரிடம் பொக்கேவை நீட்டுகிறார் சரோஜாதேவி. பதிலுக்கு ஸ்ரீதர் சொன்ன வார்த்தைகள் தெளிவாகப் புரியவில்லை.

''கன்னடத்துக் கிளிதானேன்னு கேட்கிறார்'' என்று திருமதி ஸ்ரீதர் கூறியவுடன், சரோஜாதேவியின் முகத்தில் பூரிப்பு. தன் பெரிய கண்களை இன்னும் அகலமாய் விரித்து ஆச்சரியப்படுகிறார்.

''ஸ்ரீதர் சாரைப் பார்த்து ரொம்ப வருஷமாயிடுச்சு! ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப் போகிறேன். இந்தத் தடவை எப்படியும் இவரை ஒரு நடை வந்து பார்த்திடணும்னு நினைச்சேன், பார்த்திட்டேன்'' என்று உணர்ச்சி பொங்கக் கூறியவர், ஸ்ரீதரின் கைகளைப் பற்றிக் கொண்டு ரொம்ப எமோஷனலாகிறார். டைரக்டரின் கண்களும் கலங்குகின்றன.

''எத்தனை பெரிய டைரக்டர்! ஷூட்டிங் ஸ்பாட்டில்

மனுஷர் ஒரு இடத்தில் நிற்க மாட்டார். செட்டுக்கு வந்தபின்தான் காட்சிகளுக்கு வசனம் எழுதுவது இவரது வழக்கம். அதனால், செட்டுக்கு வந்தாலே படு பிசியாகிவிடுவார். எப்போதும் டென்ஷனாவே இருப்பார். டென்ஷனில் நகம் கடித்துக் கொண்டிருப்பார்'' என்று பழைய நினைவுகளில் மூழ்குகிறார் சரோஜாதேவி.

"இவருக்கு இந்த பிராப்ளம் எப்படி வந்துது?"

''பத்து வருஷம் முன்னாடி, பத்து கோடி ரூபாய்ல ஒரு ரிசார்ட்ஸ் புராஜக்ட் ஆரம்பிக்க பிளான் பண்ணினாரு. அதுபத்தியே யோசிச்சு, ரொம்ப டென்ஷனா இருந்தாரு. அதுக்கு ஃபைனான்ஸ் ஏற்பாடு பண்ண ஒரு கம்பெனிக்குப் போயிட்டு திரும்பினார். வீட்டுக்கு வந்ததும் தானே மாடி ஏறி, தன் ரூமுக்குப் போனார். வழக்கப்படி வேலைக்காரப் பெண் மூலம்



# ''பேனா கொடுத்தேனே... ஞாபகமிருக்கா?''

சூப் அனுப்பினேன். அரை மணி நேரம் கழித்து, சாப்பாடு அனுப்பலாமான்னு கேட்க மேலே போன வேலைக்காரப் பெண், 'ஐயா கட்டிலுக்குப் பக்கத்துல கீழே விழுந்து கிடக்கிறாரு' என்று ஓடி வந்தா. அரைமணியில் அப்போலோவில் சேர்த்தோம். ஸ்ட்ரோக் காரணமாய் இடது பக்கக் கையும், காலும் செயலிழந்து போச்சு. பேச்சும் பாதிக்கப்பட்டது'' என்ற திருமதி ஸ்ரீதர்,

''அப்போலோ சிகிச்சைக்குப் பின் உடல்நலம் தேறியது. இடது பக்கம் பாதிப்பு இருந்தாலும், இன்னொரு நபர் உதவியுடன் நடக்க முடிந்தது. அவரை அழைத்துக் கொண்டு கோயிலுக்குப் போவோம். என் கூட நடந்து கோயிலில் வலம் வருவார். திடீரென்று நிலைமை மோசமாகிவிட்டது. அதன்பிறகு முன்னேற்றமே இல்லை'' என்றார்.

சரோஜாதேவியுடன், ஸ்ரீதரின் 'காதலிக்க நேரமில்லை' படத்தில் நடித்த ராஜஸ்ரீயும் வந்திருந்தார். ''டீ.வியில காதலிக்க நேரமில்ல போட்டாங்களே! பார்த்தியா?'' என்று ஸ்ரீதர், ராஜஸ்ரீயிடம் கேட்க, அவர் "பார்த்தேன்!" என்றார்.

"நீங்க, தி.நகர்ல சொந்தமா வீடு கட்டி, சித்ராலயான்னு பேர் வெச்சு, கிரகப் பிரவேசம் பண்ணினப்போ, உங்களுக்கு பார்க்கர் பேனா வாங்கி பரிசா கொடுத்தேனே ஞாபகம் இருக்கா?'' என்று சரோஜாதேவி கேட்க, "ம்" என்று தலையாட்டுகிறார் ஸ்ரீதர்.

''கல்யாணப் பரிசு படத்தை தெலுங்குல எடுத்தபோதும், நான் நடிச்சேன். அந்த ஷூட்டிங்ல, அழுகைக் காட்சி ஒண்ணுல, 'சரியா அழ மாட்டேங்குற! தமிழ்ல அழுதா மாதிரியே அழு!'ன்னு சொன்னார். அதைக் கேட்டு எனக்கு அழுகைக்குப் பதிலா சிரிப்புதான் வந்தது'' என்று சரோஜாதேவி கூறியதைக் கேட்டதும் ஸ்ரீதரின் கண்களில் மினுமினுப்பு.

''உடம்புதான் முடியலையே தவிர, இவருக்கு நினைவு முழுக்க சினிமா பத்தித்தான்'' என்று திருமதி ஸ்ரீதர் சொல்லவும், ஸ்ரீதர், ''நான் ஒரு படம் டைரக்ட் பண்ணப் போறேன்! நடிக்கிறியா?'' என்று கேட்க, "கண்டிப்பா! அது என் பாக்கியம்" என்று விடைபெற்றார் சரோஜாதேவி.

தொகுப்பு, படங்கள்:

**- எஸ். சந்திரமௌலி**

திருச்செல்வத்துக்கு அறிமுகம் தேவையில்லை. கோலங்கள் மூலம் சின்னத் திரையில் கோலோச்சிக் கொண்டிருப்பவர், தற்போது 'அல்லி ராஜ்ஜியம்' என்கிற காமெடித் தொடரை களமிறக்கியிருக்கிறார். 'சென்டிமெண்ட் காட்சிகள் மூலம் பலரை வசியப்படுத்திய உங்களிடமிருந்து வரும் காமெடியை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா?' என்று வண்ணனை வைத்து காமெடி செய்ய வைத்திருந்தோம். அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. இருப்பினும் அதை ஒரு சில காரணங்களுக்காகத் தொடர முடிய வில்லை. ஆனாலும் எப்படியும் ஒரு முழு நீள காமெடி சீரியலை எடுத்துவிட வேண்டும் என்று எண்ணியிருந்தேன். தற்போது 'அல்லி ராஜ்ஜியம்' மூலமாக அது நிறைவேறியிருக்கிறது."

"ஏகப்பட்ட காமெடி சீரியல்கள் வரு கின்ற சூழலில், அல்லி ராஜ்யத்தை மற்ற வற்றிலிருந்து எப்படி வித்தியாசப் படுத் திக்காட்டப் போகிறீர்கள்?" என்றால்,

# "எனக்கும் திருமுருகனுக்கும் என்ன பிரச்னை?"

உஷ்ணமூட்டினால், மனிதர் கொஞ்சங்கூட கோபப்படாமல் கூலாகப் பதிலளிக்கிறார்.

"கோலங்கள் கதைக் களம்தான் சீரியஸே தவிர, அதை இயக்கிய நான் சீரியஸான ஆள் அல்ல. எனக்கு நல்ல ஹியூமர்சென்ஸ் உண்டு. அதைப் பயன்படுத்தித் தான் இந்த ஸ்கிரிப்டையே உருவாக்கினேன். முதல் சீரியலை சீரியஸாக செய்துவிட்டேன் என்பதற் காக, என் மீது சீரியஸ் முத்திரை குத்தப்படுவதில் எனக்கு உடன்பாடு கிடை யாது. இன்னும் சொல் லப்போனால், கோலங்களில் கூட முதலில் பொன்





• அல்லி ராஜ்ஜியம் தொடரில்...



• 'கோலங்கள்'

"இப்பொழுது காமெடி சீரியல் என்றால் நாலு கேரக்டர்கள்... அவர்கள் எங்கு வேண்டுமானாலும் சென்று, எதை வேண்டுமானாலும் செய்வார்கள். அப்படி அவர்கள் செய்கின்ற நான்சென்ஸ் விஷயங்கள்தான் காமெடி என்றாகி விட்டது. அதையெல்லாம் உடைத்து ஒரு நல்ல காமெடியை, அழகான கதையுடன் கலந்து உருவாக்கியதுதான் 'அல்லி ராஜ்யம்.' இதில் நடிப்பவர்களில் பாதிப்பேர் கோலங்களில் நடிப்பவர்கள். இருந்தாலும் இரண்டு கேரக்டர்களையும் ரசிகர்கள் ஒன்றாக பாவித்து விட்டால், நான் ஸ்கிரிப்டில் தோற்று விட்டேன் என்று அர்த்தம்... ஆனால் அப்படி நடக்காதவாறு பலமான ஸ்கிரிப்டை தயாரித்துள்ளேன்" என்று நம்பிக்கையுடன் பேசுகிறார்.

"ஸ்கிரிப்டின் மீது அபார நம்பிக்கை வைத்திருப்பதாகக் கூறும் நீங்கள் ஏன் சினிமா பிரபலங்களை பயன்படுத்துகிறீர்கள்?" என்று கிடுக்கிப் பிடி போட்டால், "கோலங்களில் அபி கேரக்டருக்கு தேவயானி தத்ரூபமாக பொருந்தினாரே தவிர, அந்த கேரக்டர் அவருக்காகவே உருவாக்கப்பட்டது அல்ல... அதே போன்றுதான் அல்லி ராஜ்யத்தில் மனோரமா ஆச்சி கேரகடரும். அது ஒன்றும் பிரதான கேரக்டர் இல்லை. சில்லறைத் திருட்டுகளில் ஈடுபடும் பாட்டி கேரக்டர். திரும்பவும் சொல்கிறேன்... நான் நம்புவது ஸ்கிரிப்டைத்தான்" என்றார் சூடாக.

அப்படியே 'உங்களுக்கும் திருமுருகனுக்கும் அப்படி என்ன தான் பிரச்னை?' என்று நாம் பிட்டைப் போட, மனிதருக்கு முகம் சட்டென்று சுருங்கி விட்டது.

"எனக்கு கோலங்கள் கமிட்டான பிறகும்கூட, எந்த அளவிற்கு திருமுருகனுக்கு ஒத்துழைப்பு கொடுத்தேன் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். இருந்தபோதிலும் ஓரிரு சம்பவங்கள் நடந்து, வேறு வழியின்றி 'மெட்டி ஒலி' சந்தோஷ் கேரக்டரை செய்ய முடியாமல் போனதே தவிர, மெட்டி ஒலியிலிருந்து நானாக வெளிவரவில்லை"என்றவரிடம், "சந்தோஷ் கேரக்டரை மற்ற கேரக்டர்கள் திட்டித் தீர்ப்பதுபோல், பெண் விஷயத்தில் நல்லவர் என்று சித்திரிக்கப்பட்ட கேரக்டர்- இறுதியில் ஒரு பெண்ணுடன் ஓடிப்போய் விடுவது போல் காண்பிக்கப்பட்டதே..." என்றதற்கு,

"இந்த சீன்களெல்லாம் வந்தது உண்மைதான். ஆனால் அவற்றையெல்லாம் நான் நேரடியாகப் பார்க்கவில்லை. என் மனைவி சொல்லித்தான் தெரிந்து கொண்டேன். என்றாலும் எனக்கும் திருமுருகனுக்கும் இடையிலான உறவு நன்றாகவே இருக்கிறது" என்றார் திருச்செல்வம்.

• இரா.முத்துக்குமார்

படம்: ஸ்ரீஹரி

# குறையொன்றுமில்லை

அடுத்த படிக்கட்டு உட்கிரமணம். சரீரத்தை விட்டு இந்த ஆத்மாவை வெளியிலே கிளப்புவது என்பதே உட்கிரமணம்.

அயோத்தியை விட்டு பரதன் வெளியே வருகிறானே... அந்தச் செயல், ஆத்மா சரீரத்தை விட்டு வெளியே வருகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. அயோத்தியிலிருந்து சித்ரகூடத்துக்கு வருகிற வரையில், இருக்கிற மார்க்கம் இருக்கிறது பாருங்கள்... அந்த மார்க்கமே அர்ச்சிரார்தி மார்க்கம் என்கிற ஏழாவது படிக்கட்டு.

அந்த அர்ச்சிரார்தி மார்க்கத்திலே, உபநிஷத் விவரிக்கிற அர்ச்சிரார்தி மார்க்கத்திலே - விரஜா என்கிற நதி வருகிறது. இங்கே, ராமாயணத்திலே, விரஜாவுக்குத் துல்யமாக கங்கை என்கிற நதி வருகிறது.

விரஜாவிலே ஐந்நூறு அப்ஸரஸ்த்ரீகள் வந்து அலங்காரம் பண்ணுகிறார்கள். இங்கேயும் அந்த அலங்காரத்துக்குத் துல்யமாக, பரத்வாஜ மஹரிஷியின் ஆசிரமத்திலே விசேஷமான ஆராதித்யம் பரதனுக்கு நடந்தது. வந்த சைன்யமெல்லாம் 'இப்படியும் போக வேண்டாம்; அப்படியும் போக வேண்டாம்... இருந்த இடத்திலேயே இருந்து விடலாம்' என்கிற அளவுக்கு பரத்வாஜருடைய விருந்தோம்பல் அமைந்தது. அப்படி சந்தோஷத்துடன் ஆராதித்தார். அப்ஸரஸ்த்ரீகள் உபசாரம் பண்ணியதாகச் சொல்கிற அந்த கௌசிதகி உபநிஷத் வர்ணனையை, அப்படியே இங்கே பரத்வாஜாசிரம காட்சி காட்டுகிறது.

அங்கே ஆத்மாவை வித்யுத் புருஷன் (மின்னல் புருஷன்) கையைப் பிடித்து அழைத்துப் போகிறான். இங்கே, அந்த மின்னல் புருஷனுக்குத் துல்யமான குகன் பரதனின் கையைப் பிடித்து அழைத்துப் போகிறான்.

'அதென சித்ர கூட:' என்கிறார் வால்மீகி, சித்ரகூடத்தைக் குறிப்பிடும்போது. அப்படியென்றால் வைகுண்டத்துக்குத் துல்யமான சித்ரகூடம் என்று பொருள்.

வைகுண்டத்திலே பகவான் விசேஷ பர்யங்கத்தின் மேல், லக்ஷ்மியோடு எழுந்தருளியிருக்கிறான். இங்கேயும் பாருங்கள் - சித்ர கூடத்தில்... அந்த ஆதிசேஷனுடைய அவதாரமாகிற இளையபெருமாள் லக்ஷ்மணனோடு, சீதையோடு, பரமாத்மா வைகுண்டத்திலே இருக்கிற மாதிரியே காட்சியளிக்கிறான்.

சாலோக்யம், சாமீப்யம், சாரூப்யம், சாயுஜ்யம் என்று நான்கைச் சொல்வார்கள். சில பேருக்கு சாலோக்யம் அமையும். சிலருக்கு சாமீப்யம் வாய்க்கும். சாரூப்யம் சிலருக்குக் கிடைக்கும். ஆனால் வெகு சில பேருக்குத்தான் சாயுஜ்யம் அமையும்.

ஒருத்தர் ஸ்ரீரங்கத்திலே வாசம் பண்ணுவார்... ஆனால் ரங்கநாதரைப் போய் ஸேவிக்க அவரால் முடியாது! காலையிலிருந்தே வேறு காரியங்களில் ஈடுபட்டிருப்பார் அவர். திடீரென்று வெளியூரிலிருந்து வருவார்கள்... அவர்கள் போய் ரங்கநாதரை ஸேவித்துவிட்டு வந்துவிடுவார்கள்! ஆனால், அங்கேயே இருக்கக் கூடியவருக்கு அது பக்ஷமாகாது. ஆனால் அங்கேயே இருக்கக் கூடியவர்களுக்கு ரங்கநாதன் இருக்கிற அந்த பூமியிலேயே இருப்பதற்கான பாக்கியம் கிடைக்கிறது.




இதற்குத்தான் சாலோக்யம் என்று பெயர்.

சில பேருக்குச் சாமீப்யம் அமையும். அந்தக் கோயிலுக்குள்ளேயே வேலை செய்து கொண்டிருப்பார்கள்... ஆனால் உள்ளுக்குள்ளே போய் பகவானை ஸேவிக்க முடியாது அவரால். இதைத் தான் சாமீப்யம் என்பது.

சாரூப்யம்...? அர்ச்சகராயிருந்து பக்கத்திலேயே நின்று ரங்கநாதருக்குக் கைங்கர்யம் பண்ணுகிறார் ஒருத்தர். ஆனால், அவருக்கு பகவானை அனுபவிக்க முடியாது. ஏனென்றால், எதிரே நிற்கிறவர்கள் தட்டைக் கொடுத்து "அர்ச்சனை பண்ணுங்கள்" என்கிறார்கள்,

அந்தக் காரியத்திலேயே அவர் தொடர்ந்து ஈடுபட்டிருப்பதனாலே, அர்ச்சகராயிருந்தாலும் பகவானை அனுபவிக்க முடியவில்லை. அப்படி

**முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்**

அவர் அனுபவிக்க ஆரம்பித்தாரானால், வரிசையாகக் காத்துக் கொண்டிருப்பவர்கள் ஜாஸ்தி ஆகிவிடுவார்கள்! அவர் பகவானை மறந்தால்தான் தன் காரியத்தைப் பண்ண முடியும். ஆகையினாலே அர்ச்சனை வேக வேகமாக நடந்து கொண்டே இருக்கும். தேங்காயை எடுத்துக் கொடுப்பதும், பிரசாதத்தைக் கொடுத்துக் கொண்டே இருப்பதுமாக பொழுது சரியாகிவிடும் அவருக்கு. பகவானை அவர் மறக்க வேண்டியுள்ளது.

ஆகவே, சாரூப்யம் இருந்தாலும் பகவானை அனுபவிக்க முடியவில்லை.

சாயுஜ்யம் என்றால், அந்த எம்பெருமானை பாதாதி கேசம் திருப்பாணாழ்வார் மாதிரி அனுபவிப்பது. அப்படி அனுபவிக்கக் கொடுத்து வைத்தவர்கள் யாரோ ஒரு சிலர் மட்டுமே.

ஆகவே இந்த நான்கு நிலைகளையும் பரதன் விவரித்தான். நான்கு சுலோகங்கள் இதற்கென வருகின்றன ராமாயணத்திலே. இந்த நான்கும் சேர்ந்து பூரண தத்துவார்த்தத்தைக் கொடுக்கின்றன.

பரதன் என்ன சொல்கிறான்...?

"ராமனை, அவன் இருக்கிற இடத்தில் போய்ப் பார்த்தால் அன்றி எனக்கு சாந்தி ஏற்படாது"- என்று சாலோக்யத்தைச் சொல்கிறான்.

"கிட்டே நெருங்கி, அவன் திருமுக மண்டலத்தை சேவிக்காதவரையில் திருப்தி ஏற்படாது" என்று சாமீப்யத்தைச் சொன்னான். "அவன் திருவடியைத் தலையில் தரிக்காத வரையில் சாந்தி ஏற்படாது" என்று சாரூப்யத்தைச் சொன்னான். "அவன் திருவடியிலே நித்ய கைங்கர்யம் பண்ணவேண்டும்" என்று சாயுஜ்யத்தையும் சொன்னான்.

சாலோக்யாதி சதுஷ்டயம் - இந்த நான்கு சுலோகத்திலே, வால்மீகி ராமாயணத்திலே அழகாகக் காட்டப்பட்டிருக்கிறது அர்ச்சிராதி மார்க்கம்.

பரதன் சென்று ராமபிரானுடைய திருவடியிலே விழுந்து வணங்குகிறான்.

---

# நொந்துபோன பந்து ஹீரோ!

பாலிவுட்டில் கிரிக்கெட்டை மையமாக வைத்து எடுக்கப்பட்ட லகான் ஜெயித்தாலும் ஜெயித்தது, கூடைப்பந்து, ஹாக்கி, கபடி என்று ஆரம்பித்து கிட்டிப்புள் வரைக்கும் சினிமாவில் இடம் பிடித்துவிட்டது. இப்போது இளம் இயக்குனர் பாபு யோகேஸ்வரன், தன் பங்குக்கு கால்பந்தை மையமாக வைத்து தாஸ் படத்தை எடுத்து முடித்து விட்டார்.

"இந்தப் படத்தில் ஜெயம் ரவி காலேஜ் ஃபுட்பால் பிளேயர். அவருக்கும் கல்லூரி நிறுவனரின் பெண்ணுக்கும் காதல். பொதுவா காதல் ஆரம்பிக்கும்போது பிரச்னைகள் வரும். இங்கே ஒரு பெரிய பிரச்னையாலதான் காதலே வருது. காதலைச் சொன்ன அடுத்த நிமிஷமே காதலர்கள் வீட்டை விட்டு ஓட, அவர்களை பெற்றோர் துரத்த, காதலர்கள் ஓட என்று, ஒரு கால்பந்தாட்ட மைதானத்தில் கால்பந்து இங்குமங்கும் அலைவதைப் போல ஓடுகிறார்கள். படத்தின் க்ளைமாக்ஸை விறுவிறுப்பான கால்பந்துப் போட்டி தூக்கி நிறுத்தும். ஜெயம் ரவி நிஜக் கால்பந்து வீரர்களோடு விளையாடி கட்டை விரலையே ஒடித்துக் கொண்டார்" என்கிறார் இயக்குனர். அதிகச் செலவால் தயாரிப்பாளரின் கை ஒடியாமல் தப்பித்ததா என்பதைப் பற்றி அவர் எதுவும் சொல்லவில்லை.

- ஸ்ரீ

அப்படி விழுந்து வணங்குகிறபோது. ராமன் அப்படியே அவனைக் கைப் பிடித்துத் தூக்கி, தன் மடியிலே உட்கார வைத்து, உச்சி முகர்ந்து மகிழ்கிறான்.

கௌஷீதகி உபநிஷத்திலே பார்த்தோமே... முக்த புருஷனை உட்கார வைத்து, பகவான் குசலப் பிரச்னம் பண்ணுகிறான். ஸ்ரீ ராமனும் அதையே... 'அர்ச்சித் சர்க்கம்' என்றே அதற்குப் பெயர். வரிசையாகக் கேள்வி கேட்கிறான் பகவான், பரதனிடத்திலே...! "ஊரில் எல்லோரும் சௌக்கியமா? தந்தையார் எப்படி இருக்கிறார்? நீ சௌக்யமா...?" பல விதமான கேள்விகள் கேட்கிறான்.

இந்த மாதிரி குசலப் பிரச்னம், வைகுண்டத்திலேயும் நடக்கிறது. வைகுண்டத்தை அடைந்த முக்த புருஷனின் சிரஸிலே தன் திருவடியை வைத்து அனுக்ரஹம் பண்ணுகிறான் பகவான். அதே மாதிரி, தன் பாதுகையை பரதனின் சிரஸிலே வைத்து அனுக்ரஹம் பண்ணுகிறான். அந்த உயர்ந்த முக்த புருஷன் பகவானை அனுபவிக்கிறபோது பெறும் ஆனந்தத்தை, பாதுகாராதனம் மூலமாக பரதன் அடைந்தான்.



பாதுகா ஸஹஸ்ரத்தை முடிக்கிறபோது 'முகுந்தஸ்ய பாதுகா யுகளீ' என்கிறார் ஸ்வாமி தேசிகன். 'உயர்ந்த யதிராஜ சூக்தியானது உலகிலே பிரகாசிக்கிறது - உயர்ந்த பாதுகா யுகளீ' என்கிறார்.

முகுந்த சப்தம் எதற்கு இங்கே என்றால், 'மு' என்றால் மோக்ஷம். 'கு' என்பது, இந்த லோகத்திலே கிடைக்கக் கூடிய ஐச்வர்யம். இதையும் கொடுக்கிறான், அதையும் கொடுக்கிறான் அவன். மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியவன்தான் இதையும் கொடுக்கிறான்.

மோக்ஷத்தை மாத்திரம்தான் அவன் தருகிறான் என்று நாம் நினைக்கக் கூடாது. ஸ்வர்க்கம், மோக்ஷம் கொடுக்கக் கூடிய எம்பெருமான் நாராயணன், இந்த உலகத்திலே சரீர ஆரோக்கியம், பொருள், அதற்கு ஏற்ற வசதிகள், வீட்டில் எல்லா விதமான சௌகரியங்கள் அனைத்தையும் உண்டு பண்ணுகிறான். இந்த லோகத்திலே அவன் கொடுத்தால்தான் அவன் பேரிலே நமக்கு நம்பிக்கை வரும்! இங்கேயே கொடுக்கவில்லையானால், 'அங்கே என்ன பண்ணப் போகிறான்!' என்று கோபம்தான் வரும்! அந்த மாதிரி கோபத்தில் பல பேர் பேசுவதைக் கேட்கிறோம் இந்த உலகத்திலே! ஆகையினாலே, இந்த உலகத்திலே நமக்குக் கொடுத்து, அவனிடத்தில் பூரண விச்வாசம் வரும்படியாகப் பண்ணுகிறான் பகவான். ஆகையினால் லௌகிகமான பலன்களையும் கொடுப்பான்; ஸ்வர்காதி பலன்களையும் கொடுப்பான், மோக்ஷத்தையும் அவனே கொடுப்பான். இதையும் கொடுத்து, அதையும் கொடுக்கக் கூடியவன் ஆனதனாலே 'அபவர்க ப்ரதோ ஹரி:' என்று அவன் துதிக்கப்படுகிறான்.

அந்த பரதன் இதை அனுபவித்தான். விசேஷமாக - பாதுகாராதனம் அல்லும் பகலும் அனவரதமும் செய்தான். இரவும் பகலும் கண்ணீர் விட்டுக் கொண்டு, நித்ய அபிஷேகம் பண்ணி, அந்தப் பாதுகைக்கு, அதனிடத்திலே சகலத்தையும் விக்ஞாபனம் பண்ணி, பாதுகா ராஜ்யத்தை நடத்தினான். அதற்குக் கீழே, தான் அடிமையாக இருந்து, பரமானந்தத்தை அடைந்தான். ராம ராஜ்யத்திலேயாவது ஒரு தோஷம் ஏற்பட்டது! காட்டிலே ஒரு தபஸ்வியினுடைய பிள்ளை மாண்டுவிட்டான்... ஆனால் பாதுகா ராஜ்யத்திலே ஒரு தோஷமும் கிடையாது. ராம ராஜ்யத்தைவிட உயர்ந்த ராஜ்யம் ஒன்று உண்டென்றால், அது பரதன் நடத்திய பாதுகா ராஜ்யம்தான்.

(வளரும்)

"நான் மாஸ்டரான முதல் படத்துலயே கமல் சாருக்கு கோரியோகிராஃபி பண்ணினது என் வாழ்க்கைல கிடைச்ச மிகப்பெரிய வரப்பிரசாதம்" என்று உற்சாகம் பொங்கக் கூறும் ஷோபி பால்ராஜ், 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்'ஸில் வரும் 'ஆழ்வார்பேட்டை ஆண்டவா...' உள்ளிட்ட பல சூப்பர் ஹிட் பாடல்களுக்கு நடனம் அமைத்தவர்.

"எனக்கு வெறுமனே மெட்டுக்கோ, வரிகளுக்கோ ஏத்த மாதிரி மூவ்மெண்ட்ஸ் அமைக்கிறதுல இஷ்டம் கிடையாது. ஒவ்வொரு பாட்டுலயும் ஏதாவது ஒரு கான்செப்ட் வச்சி பண்ணணும்னு விரும்புவேன். உதாரணமா 'கண்ணும் கண்ணும்தான் கலந்தாச்சு...' பாட்டுல விஜய்யும் த்ரிஷாவும் ஒருத்தருக்கொருத்தர் அடிக்க வர்ற மாதிரி கான்செப்ட் வச்சிருப்போம்... அதுக்கு குட்டீஸ் மத்தியில கூட நல்ல ரெஸ்பான்ஸ். அதனாலதான் 'தேவதையைக் கண்டேன்' படத்துல 'மாமா பையா...' பாட்டுல காமெடி கான்செப்ட் வச்சோம். அதுவும் ஹிட் ஆச்சு. இதனால டான்ஸ் மூவ்மெண்ட்ஸுக்கு எந்த அளவுக்கு சிரத்தை எடுக்கறமோ, அதே அளவுக்கு கான்செப்ட்லயும் கவனம் செலுத்த வேண்டியிருக்கு" என்று சொல்லும் ஷோபி, விஜய், தனுஷ், சிம்பு, ஜெயம் ரவி உள்ளிட்ட அனைத்து யூத் ஹீரோக்களுக்கும் நடனராஜா!

'ஆபாச வரிகள் கொண்ட பாடல்களுக்கும் நடனம் அமைக்க வேண்டியிருக்கிறதே...' என்றால்,

"வரிகள் ஆபாசமாக இருந்தாலும் டான்ஸ் மூவ்மெண்ட்ஸ் வல்கரா இல்லாம முடிஞ்ச வரைக்கும் பார்த்துக்கறோம். இதுதான் எங்களால முடிஞ்சது" என்று பளீரெனச் சிரிக்கிறார்.

"கமல் தவிர இன்னும் நான் சீனியருங்க பக்கம் போகல. ரஜினி சாருக்கு கோரியோகிராஃபி பண்ண ரொம்ப ஆசையா இருக்கு. ஒரு சான்ஸ் கிடைச்சாப் போதும்... அசத்திடுவேன்..." என்று கண்கள் பனிக்கப் பேசும் ஷோபி, 'சிவகாசி' படத்துக்காக விஜய்யையும், 'வல்லவனு'க்காக சிம்புவையும் செமையாக ட்ரில் வாங்கி இருக்கிறாராம்.



# ஆழ்வார்பேட்டை ஆண்டவா...

- முராரி

## இளமை கல்கி



# சந்தனப் பூங்காற்றே...

'புதுக்கோட்டையிலிருந்து சரவணன்' படத்தில் வரும் 'நாட்டுச் சரக்கு' என்கிற குத்துப் பாட்டுக்கும், 'அழகிய தீயே' படத்தின் 'சந்தனப் பூங்காற்றே' பாடலுக்கும் ஒற்றுமை இருக்கிறது. யெஸ்.... இரண்டு பாடல்களையும் பாடியது டாக்டர் லாவண்யாதான். வேளச்சேரியில் பல் மருத்துவத்துக்கான கிளினிக் நடத்திக் கொண்டே, சினிமாவில் பாடகியாகவும் மிளிர்ந்து கொண்டிருந்தவரை பேஷண்ட் ரூபத்தில் சென்று சந்தித்தோம்.

**ஏன் டாக்டர்-பாடகி என டூயல் ரோல்?**

"அப்பா, அம்மா டாக்டர்ஸ். நான் காதலித்து கரம் பிடித்தவரும் டாக்டர் தான். பி.ஏ. மியூசிக் படிக்கலாம்னுதான் நினைச்சேன். ஆனா நான் சின்ன வயசுல மியூசிக்ல என்ன படிச்சேனோ அதையே அங்கே சொல்லித்தர, 'ஐயோடா'ன்னு டாக்டருக்குப் படிக்க கிளம்பிட்டேன். ஆனாலும் இசைதான் என் மூச்சு.

**'நாட்டுச் சரக்கு' பாடினது ஏன்?**

"அந்த பாட்டோட ஆரம்ப வரிகள் அப்படி இருக்கும்னு எனக்குத் தெரியவே தெரியாது. முழுப் பாடலையும் கேட்கும் போது ஷாக்கிங்கா இருந்தது. நான் பாடின பாடலா இருந்தாலும், எந்த மேடைகளிலும் அதை பாடினது கிடையாது."

**சூப்பர் அனுபவம்?**

"கை, கால் நடுங்க இளையராஜா சாரிடம் நான் பாடிக் காண்பித்த பொழுது, 'நல்லாத்தானம்மா பாடற, அப்புறம் ஏன் பயப்படறே. நான் என்ன பேயா?'ன்னு கேட்டார். சிலிர்த்துப் போச்சு எனக்கு. அதே மாதிரி 'சந்தனப் பூங்காற்றே' பாடல், கடவுள் எனக்குக் கொடுத்த கொடை."

**மும்பை பாடகிகள் நிறைய வர்றாங்களே?**

"நான் மலையாளத்துல பாடினபோது என் உச்சரிப்பு சரியா இருக்குதான்னு ஒவ்வொரு முறையும் நாலு பேர் வந்து செக் பண்ணினாங்க. இங்க அப்படி இல்லை. 'ஐயோ, நீங்க பாடற தமிழ் புரியுதே'ன்னு சொல்றாங்க. இதுமாதிரியான நிலைமைகள் மாறி மெலடியான அர்த்தமுள்ள பாடல்கள் இரும்பவும் நமக்குக் கிடைக்கும்."

**சரி கிளம்புறோம் டாக்டர்...**

"ஒழுங்கு மரியாதையா ஃபீஸை கொடுத்துட்டுப் போங்க..."

**நாங்கதான் பல்லே பிடுங்கிக்கலையே...**

"ஆங்...பல் வலி வர்ற அளவுக்கு நான் வாய் வலிக்கப் பேசியிருக்கேனே அதுக்கு..."

**ஜூ.........ட்!**

**- சநகன்**

# கேமரா GUNகள்!



புதன் கிழமை. தன் பட வேலைகளை முடித்துவிட்டு அப்பாடி என்று வீட்டுக்குள் நுழைந்த பாரீஸ் ஹில்டனிடம் (ஹவுஸ் ஆஃப் வேக்ஸ் நாயகி) வந்து சமர்த்தாக ப்ரொபோஸ் செய்திருக்கிறார் அவரது பாய் ஃப்ரெண்ட் லாட்லிஸ். வியாழன், வெள்ளி முடிந்து சனிக்கிழமை இருவருக்கும் டும் டும் டும். "அடுத்த இரண்டு வருடங்களில் எங்கள் வீட்டில் 'ங்கா ங்கா' சப்தம் கேட்க வேண்டும்" என்று இருவரும் சிரிக்கிறார்கள்.

ஹாலிவுட்டில் இது போன்ற குட்டியூண்டு காதல் கதைகள் நிறைய உண்டு. ஃபிலிம் செட்டிலேயே தொப் தொப்பென்று காதலில் விழுவார்கள். ஒரு வகையில் பார்த்தால், காதல் செய்வது அங்கு மார்கெட்டிங் செய்வது மாதிரி. பட வாய்ப்புகள் எதுவும் இல்லையா? காதலியுங்கள். ரிலீஸ் ஆகும் அடுத்த படம் வெற்றியடைய வேண்டுமா? காதலியுங்கள். படம் தோல்வியடைந்து விட்டதா? காதலியுங்கள். புத்தகத்தின் அட்டையில் வர வேண்டுமா? காதலியுங்கள்.

'பரவாயில்லையே! இதே நம் ஊர் என்றால் அரிவாள் தூக்குகிறார்கள், அமெரிக்கா ரொம்ப சமர்த்து போலும்' என்று அவசரப்பட்டு நினைக்க வேண்டாம். இங்கு அரிவாள் என்றால், அங்கு கேமரா. "என் பாய் ஃப்ரெண்டோட சேர்ந்து ஒரு ஸிப் கோக் கூட குடிக்க முடியலை" என்று புலம்பும் நடிகைகள் அவ்விடம் அதிகம்.

பத்திரிகையின் அட்டை வரை வந்து விட்ட நாயகிகளை புரட்டிப் பார்க்க பல பத்திரிகை நிருபர்கள் டிஜிட்டல் கேமராக்களோடு ஈக்கள் மாதிரி சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். "எங்களுக்கென்று எந்த சீக்ரெட்ஸூம் கிடையாது தெரியுமா" என்று அழாத குறையாக நடிகர்களும், நடிகைகளும் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். தனது கால் சுட்டை விரல் நகத்தை நறுக்கும்போது கூட ஏதாவதொரு கேமரா, ஏதாவதொரு மூலையிலிருந்து பூனையின் மினுக் மினுக் கண்களோடு நட்சத்திரக் காதலர்களை விழுங்கிக் கொண்டேயிருக்கிறது.

'காதலிக்க வேண்டாம்னு நாங்க சொல்லலை. எங்களுக்கு முன்னாடியே ஒரு வார்த்தை சொல்லிடுங்க. நாங்க பாட்டுக்கு தேமேன்னு இருந்துடுவோம்' என்று அங்குள்ள ஃபிலிம் புலனாய்வுப் பத்திரிகைகள் சொல்கின்றன. அவ்வப்பொழுது நிருபர்களை அழைத்து அவர்கள் வாயில் சிறிது அவலை இனித்தால்தான் சும்மாயிருக்கிறார்கள். இப்பொழுது சொல்லுங்கள், காதலுக்கு எது எதிரி? பளிச் பளிச் அரிவாளா? மினுக் மினுக் கேமராவா?

- மருதன்

# இளமை கல்கி

# மெஷ்!

“**ஹா**ய் மம்மி! எங்க பாக்குற? சத்தம் உன் வயித்துக்குள்ள இருந்துதான் வருது! நான்தான் உன்னோட ஃப்யூச்சர் குழந்தை பேசறேன். ஓ.கே. ஓ.கே ரொம்ப எக்சைட் ஆகாதே! நான் சொல்ற விஷயங்களைத் தெளிவாக் கேட்டுக்கோ!

வெளிய வெயில் ரொம்ப ஜாஸ்தி யாமே! ஸோ, மறக்காம நம்ம ரூம்ல ஒரு ஏ.சி. வாங்கி மாட்டிடு. இல்லாட்டி நம்மால தாங்க முடியாதுப்பா! ஓ.கே. டாடிகிட்ட சொல்லி எனக்கும் ஒரு கிரெடிட் கார்டு அப்ளை பண்ணிரு. ஏன்னா கிரெடிட் கார்டு இல்லாம லைஃப் இஸ் ஸோ டஃப்யா!

அப்புறம் எனக்கு நியூமராலஜில நம்பிக்கை உண்டு. அதனால 'ஷ - ஷே - ர- ரோ' இதுல ஆரம்பிக்கிற மாதிரி பேரு வைச்சுருங்க. பரம்பரைப் பேரு வைக்கிற தெல்லாம் டூ மச்! எனக்குப் பிடிக்கல. அப்படியே அதே பெயருல, எனக்கு ஒரு ஜி-மெயில் அக்கௌண்ட் கிரியேட் பண்ணிடு. யாஹு வேண்டாம். ஜி-மெயில்தான் அன்லிமிடெட்!

நீ அடிக்கடி விநாயகர் அகவல், கந்த சஷ்டி கவசம், திருப்பாவைன்னு பக்திப் பாட்டா கேட்டு என்னை ரொம்பப் படுத்துற. இல்லாட்டி பழைய பாட்டுகளை கேட்க ஆரம்பிச்சுடுற! ஐ டோண்ட் லைக் இட் மாம்! எனக்கு டாடி கேட்குற பிரிட்னி புடிச்சுருக்கு! என் காலத்துல பிரிட்டினியோட பொண்ணு தான் பிச்சு உதறப் போறா! வெயிட் அண்ட் ஸீ!

அப்புறம், டாக்டருக்குப் படி, இன்ஜினீயருக்குப் படின்னு இம்சை பண்ணக்கூடாது. நான் எப்பவும் பறந்துக்கிட்டே இருக்கணும்னு ஆசைப்படுறேன். யெஸ், ஐ வான்ட் டு பீ ய பைலட்! அதுக்கு என்ன வழியோ அதைப் பாருங்க!

ஆங்... முக்கியமானதை சொல்ல மறந்துட்டேனே! செல்போன், வித் GPRS ரொம்ப முக்கியம். எஸ்.எம்.எஸ். இல்லாம என்னால இருக்கவே முடியாது. ஸோ வாங்கிருங்க! அப்படியே ப்ரீபெய்ட் கார்டு போட்டிருங்க. அதுல முக்கியமா எஸ்.எம்.எஸ். ஃப்ரீயா இருக்கணும்.

அப்புறம் என்ன, ஸ்கூல் அட்மிஷன் வாங்கியாச்சா? இன்னும் மூணு வருஷம் இருக்குன்னு அலட்சியமா இருந்துடாதீங்க! கமான் குயிக், வேலை நடக்கட்டும்.

ஓ.கே. ஃபைனலா ஒன்மோர் திங்க்! அடுத்த தெருவுல ஸ்வேதா ஆன்ட்டிக்கு ஒரு பொண்ணு பொறக்கப் போகுது. அவதான் என் லைப்ல முதல் கேர்ள் ஃப்ரெண்டா வரணும்னு விரும்புறேன். மீதியை பூமியில குதிச்சதுக்கப் பறம் பேசறேன். ஓ.கே.வா!”

கற்பனை :
**முகில்**



'அத்து மீறு - அடங்க மறு- திமிறி எழு' இப்படித்தான் இதுநாள் வரை பேசிக் கொண்டிருந்தார் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன். இப்பொழுது விருட்சாசனா, திரிகோணாசனா, மச்சேந்திராசனா, சுகப்ரணாயாமா என்றுதான் பேசி வருகிறார். ஏன்... என்னாயிற்று திருமாவளவனுக்கு! அவரிடமே பேசினோம்...

"ஓ... அதுவா... கோயம்புத்தூரிலிருக்கும் ஈஷா யோகா மையத்தில் எட்டு நாள் யோகா பயிற்சி எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். சிறுவயதிலிருந்தே எனக்கு இந்த யோகாசனம் மீது நிறைய



• ஜக்கி வாசுதேவ்



ஆர்வம் உண்டு. சில காலம் செய்துமிருக்கிறேன். ஆனால் எனக்கிருந்த வேலை பளு காரணமாக தொடர்ந்து செய்ய முடியவில்லை. திடீரென ஒருநாள அந்த மையத்தைச் சேர்ந்த களப்பணியாளர்கள் வந்து என்னிடம் கேட்டார்கள். முதலில் மறுத்த நான் பிறகு ஒப்புக் கொண்டேன். அங்கு சென்று நான் முதலில் கேட்டது சத்குரு ஜக்கிவாசுதேவுடைய பேருரையைத்தான். அவருடைய கருத்துக்களைக் கேட்ட பிறகு. காவி கட்டிய பெரியாராகத்தான் அவரை என்னால் பாவிக்க முடிந்தது. அந்த காந்தக் கருத்துக்களின் மீது ஈர்ப்பு வந்து மையத்திலேயே எட்டு நாட்கள் தங்கி, தினமும் நான்கு மணி நேரம் யோகா. தியானம் உள்ளிட்ட பயிற்சிகளில் ஈடுபட்டேன்" என்றவர். சட்டென்று நமக்கு பல ஆசனங்களைச் செய்து காட்ட ஆரம்பித்தார்.

அவர் முடிக்கும் வரை காத்திருந்து. 'தியானம், யோகா போன்றவை எல்லாம் உங்கள் கொள்கைக்கு எட்டிக்காயாயிற்றே?" என்றோம்.

"உண்மைதான். ஆனால் யோகா, தியானத்தை நான் ஆன்மிகம் என்ற அளவில் பார்க்கவில்லை. வாழ்க்கை முறை, மற்றவர்கள் மீது செலுத்தும் அன்பு, நிதானம் என்றுதான் பார்க்கிறேன். யோகா என்பது உடல், உள்ளம், உலகம் ஆகியவற்றை 'ஒரே அலைவரிசையில் கொண்டு வருவது."

'அப்படியானால் உங்களுடைய நடவடிக்கைகளில் முன்பு போல் வீரியத்தைப் பார்க்க முடியாதா?'

"இல்லவே இல்லை. சத்குருவின் கூற்றுப்படி தியானம் என்பதற்கு வன்கொடுமையை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டாம் என்று அர்த்தமல்ல. மாறாக அந்தக் குரலை மிகவும் வீரியத்துடன் கொடுக்கவேண்டும் என்பதுதான்."

'ரஜினி தனது படங்கள் மூலம் தியானம் பரப்புவார்... இப்போது அரசியல் மூலம் நீங்கள். இருவரும் ஒரே நேர்க்கோட்டில் பயணிப்பது போல் தெரிகிறதே...' என்றால்,

"தியானத்தை அவர் ஆன்மிக ரீதியாகவோ மத ரீதியாகவோ அணுகாமல், வாழ்க்கை முறையாக அணுகினால், நானும் ரஜினியும் ஒரே நேர்க்கோட்டில்தான் இருக்கிறோம்" என்று சிரிக்கிறார்.

• இரா. முத்துக்குமார்

படங்கள் : ஸ்ரீஹரி


" நானும் ரஜினியும்
ஒரே நேர்க்கோட்டில்..!"

# THE MAYAVARAM FINANCIAL

## CHIT CORPORATION LIMITED

Regd. & Admn. Office : 13-A1, Cutchery Road,
Mayiladutural - 609 001. Tamil Nadu.

THE MAYAVARAM FINANCIAL CHIT CORPORATION LIMITED
Established
1947

## HIGHER DENOMINATION AUCTION CHIT PROMOTERS SINCE 1947

## RUNNING CHITS

**RANGING From Rs.1 Lakh to 10 Lakhs**
**UNDER CENTRAL CHIT FUNDS ACT 40/82**

K.JEYACHUNDHREN
MANAGING DIRECTOR